
# பட்டாபியின் முகநூல் இதழ்

அக்டோபர் 2023 FB Journal Voice of Pluralism



அக்டோபர் 2023 பட்டாபியின் முகநூல் இடுகைகள்

# OCT 2023 pattabi's FB Journal

**oct 31, 2023**

**Com O P Gupta wrote so**

The political task in a Trade union is basically to build United organizations for struggle against anti working class politics of the Govt. Naturally the struggle, both in terms of time and slogans will differ not only from union to union sector to sector but also from time to time.

Even in a union under party control the leadership has to reflect the views of the common workers unless we decide to allow disruption or liquidation of the union.

Marxism is not a dogma but a guide to for its application in a given context. My activities are based on marxist principles and their application on a particular front and in given circumstances

oct 31

**Pride in infallibility so wrote Werner Blumenberg**

" By combining the elements revealed by economics and socialism Marx intuitively grasped the developmental tendencies of bourgeois society. But the philosophical logician in him could not rest content with indicating its tendencies; he had to weld them together into a solid theory which could provide a strong basis for action against this society.

He achieved this systematic development with the help of the dialective in which, by transposing Hegel's formula to the course of history, he saw an infallible means of understanding the great epochs of human history and their relation to one another, and of acquiring knowledge of the laws of the previous course of history.

He believed this method to be so infallible and so precise that he thought it would allow him to forecast the future and determine the final goal of history

Marx himself writing to Engels on 25 th Aug 1851, extolled the Communists' pride in infallibility as a great virtue

Page 72-73 Karl Marx An Illustrated History

**oct 29 2023**

வர்ணா ஜாதி காஸ்ட் ..2

ராஜிவ் மல்ஹோத்ரா மற்றும் விஜயா எழுதிய varna Jati Caste Primer குறித்து முன்னொரு இடுகை செய்திருந்தேன். இவர்கள் வலது சிந்தனையாளர்கள் . மேற்கின் கருத்தாக்கங்களை மாயை என அமெரிக்காவில் வாழ்ந்துகொண்டு எழுதிவருபவர்கள்.

அவர்கள் தங்கள் ஆய்வில் வெளிப்படுத்தும் முக்கிய கருத்தாக்கம் ஒன்றை தந்துள்ளேன்.

Caste is neither a necessary, nor a sufficient condition for being a Hindu

One can be a Hindu without practising caste

One can practice caste without being a Hindu ( இந்தியாவில் பிற மதங்களில் சாதி பார்க்கப்படுவதைச் சொல்கின்றனர்)

இந்த ஆய்வில் காலம் காலமாக 'சூத்திரர்கள்' மோசமாக நடத்தப்பட்டார்களா - பிராமணர்களுக்கு சத்திரியர்களுக்கு அடிமை போல் நடத்தப்பட்டார்களா என்பது குறித்தும் பேசப்பட்டுள்ளது. அப்படியில்லை என்கிற முடிவிற்கு இவர்கள் வருகிறார்கள்.

பெரும்பாலான 'சூத்திரர்கள்' self employed not labourers என்றும், பி வி கானே போன்ற அறிஞர்கள் 62 வகை தொழிலில் அவர்கள் ஈடுபட்ட பட்டியலை தந்துள்ளதாகவும் சொல்கின்றனர். கேரளாவில் ஈழவ இட்டி அச்சுதன் மிகப்பெரிய மருத்துவராக , மூலிகை நிபுணராக இருந்ததும் அவரது ஆய்வுகள் 12 வால்யூம்களாக 17 ஆம் நூற்றாண்டில் வந்தன என்றும் சொல்கின்றனர். சூத்திரர்கள் பலர் அரசர்களாக இருந்தனர் என்றும் பிராமணர் சத்திரியர் அவர்களின் கீழ் செயல்பட்டுள்ளனர் என்பதையும் எடுத்துக்காட்டுகின்றனர்.

பிரகதர்ம புராணத்தில் 'சூத்திரர் ' அறிவியல் மற்றும் இலக்கண ஆசிரியர்களாக இருந்ததை சொல்கிறதாம். இன்னும் ஆச்சர்யமாக இவர்கள் சொல்வது, இதை அவர்கள் மனுஸ்மிருதிக்கு விளக்கம் தந்த மேதாட்டிதி வியாக்கியானத்திலிருந்து எடுத்துள்ளதாக..

இவர்கள் இந்த சூத்திரர் குறித்த தங்கள் ஆய்வில் வந்தடைந்த கருத்து

In fact, the Shudra guilds enjoyed considerable economic prosperity in ancient India என்பதாக இருக்கிறது. இதற்கு கிருஷ்ண யஜூர், சாம வேதங்கள் சாட்சி. பனாரஸ் கில்ட்கள் பற்றிப் பேசும் அலினசிட்டா ஜாதகா சாட்சி. புத்த ஜாதக கதைகளில் பேசப்படும் பொற்கொல்லர்கள் சாட்சி என்கின்றனர்.

பல சூத்திர கில்ட்கள் சார்ந்தவர்கள் பெரும் தர்ம செயல்களில் ஈடுபட்டதாகவும், நன்கொடை வழங்குபவர்களாக இருந்ததாகவும் எழுதுகின்றனர். இதை குஷானர் காலத்து மதுரா கல் பொறிப்புகளில் காணமுடியும். தனவந்தர்களாக இருந்த பொற்கொல்லர், நாவிதர், வண்ணார் குறித்து அதில் இருப்பதாகச் சொல்கின்றனர்.

சூத்திரர்களுக்கு கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டதாக சொல்வதையும் இந்த ஆசிரியர்கள் ஏற்கவில்லை. தரம்பாலின் எழுத்துக்களை சாட்சியமாக்குகின்றனர். பிரிட்டிஷாரால்தான் தாங்கள் கல்விக்கூடம் செல்ல முடிந்ததாக சொல்வதையும் இவர்கள் ஏற்கவில்லை.

சென்னை ராஜதானியில் 1825 ல் இருந்த கல்வி சூழலை இவர்கள் காட்டுகின்றனர். 31929 மாணவர்களில் பிராமண மாணவர்கள் 7996, வைஸ்யர் 6967, சூத்திரர் 11267, இஸ்லாமியர் 1843 , மற்றவர் பிறர் என தரம்பாலின் The Beautiful Tree லிருந்து இவர்கள் தருகின்றனர். இதில் depressed class ஒடுக்கப்பட்ட பகுதி குறித்த செய்தி தனியாக தரப்படவில்லை. மலையாள பகுதியில் 50 சத மாணவர்கள் சூத்திரர்களாக இருந்தனர்

மதராஸ் ராஜதானியில் 'practising medicine and surgery belonged to a variety of castes. Amongst them the barber jati were the best surgeons' என தரம்பால் எழுதியுள்ளதாகச் சொல்கின்றனர். தாமஸ் மன்றோ அறிக்கை ஒன்றையும் இவர்கள் காட்டியுள்ளனர் ' there is no indication that a shudra status prevented children from instruction in vernacular schools'

பிரிட்டிஷ் அதிகாரிகள் ரின்ஸ்லே போன்றவர் சாதி கணக்கெடுப்பு எவ்வளவு கடினமானதாக இருந்தது என பேசியதை இவர்கள் குறிப்பிடுகின்றனர்.

There was difficulty even of identifying discrete castes- impossibility of finding any meaningful way of classifying them and a uniformity of classification across the country could not be hoped for

இந்த பிரிட்டிஷார் திண்டாட்டத்தை சுட்டிக்காட்டும் இந்த ஆசிரியர்கள் , இன்று சாதி குறித்து பேசும் வல்லுநர்கள் சற்று நிதானமாக, பிரிட்டிஷார் அனுபவங்களை சரியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்கின்றனர்.

மேலும் கேம்பிரிட்ஜ் சூசன் பாய்லி மேற்கோள் ஒன்றையும் தந்துள்ளனர். இன்று காணப்படும் இவ்வளவு விவரமான சாதிக் கூறுகள் 18 ஆம் நூற்றாண்டுற்கு பின்னரானவையே .

Until we'll into colonial period, much of the subcontinent was still populated by people for whom the formal distinctions of caste were of only limited importance

The institutions and beliefs which are now often described as the elements of traditional caste were only just taking shape as recently as the early 18th century

ரிஸ்லே அப்போது வழக்கப்படுத்தப்பட்ட மேற்கின் இனக் கொள்கையை race hierarchy = caste என்பதை கணக்கில் கொண்டு சாதிவாரி பார்த்தார் என இந்த ஆசிரியர்கள் சொல்கின்றனர். ராஜஸ்தானில் தான் இரு அதிகாரிகள் சென்சஸில் untouchable என்ற பதத்தை சேர்த்து அதிகாரபூர்வமாக்கினர். பிராமணர்களை predominantly Aryan race என்றும், வேறு சொல்லாடல்களாக mixed castes, impure castes, castes untouchable போன்றவைகளும் அரசாங்கமே அதிகாரபூர்வமாக எழுதிக்கொண்டதாக சொல்கின்றனர்.

பம்பாய் கெசட்டர் 1877ல் depressed castes என்று பயன்படுத்தியதாம். 1906 துவங்கி பம்பாய், சென்னை இடங்களில் depressed class society உருவாயின. சாயாஜி ராவ் கெய்க்வாடு மன்னர் லாலாஜி, அன்னி, அனகரிகா தர்மபாலா ஆகியோரின் நண்பராக இருந்தார். அவர் கலந்து பேசி untouchableness என்று சொல்லலாம் என்றார். 1918ல் All India Anti Untouchability Manifesto வெளியானது. அம்பேத்கர் அவர்கள் 1930 ல் caste Hindu என்ற பதத்தை பயன்படுத்தினார். இப்படி ஏராள தகவல்களுடன் இந்த புத்தகம் நகர்கிறது

**oct 29 2023**

**So said Gandhiji**

A truly courageous person would not hesitate to pay compliment even to his enemy. Courage didn't mean arrogance

Dec 1929 Lucknow Congress session

**oct 28 2023**

**பகத்சிங்...**

பகத்சிங் என்ற பெயரை சொன்னாலே வீரத்தின் தியாகத்தின் அடையாளம் என்ற icon blink ஆவதைக் காணலாம். இளைஞர்கள் அமைப்புகளில் அவர் பேசு பொருளாவதையும் காணமுடியும். மிகக் குறுகிய அதே நேரத்தில் அவரது தியாக வாழ்வு குறித்து ஏராள புத்தகங்கள் வந்துவிட்டன.

இந்தியர் எவரும் இடம் பெறாத சைமன் கமிஷன்- அதை பகிஷ்கரிப்பது என்கிற காங்கிரஸ் முடிவு எதிர்ப்பு இயக்கங்கள் ஆங்காங்கே நடந்தேறின. நேருவும் கூட லத்தி அடி வாங்கினார். லாலாஜி மீது விழுந்த குண்டாந்தடி அவரது உடல் நலனை பாதித்து, அடுத்த 17 நாட்களில் அவர் மறைந்தார். அது பேரிழப்பாக பார்க்கப்பட்டது. இந்தியரில் ஆண்களே இல்லையா என்ற உசுப்பேற்றல்கள் நடந்தன. இருக்கிறோம் என committed emotional boys வராமலா போவர். அப்படி வந்தவர்களாக பகத்சிங் பதுகேஸ்வர் இருந்தனர். போலீஸ் அதிகாரி சாண்டர்சை அவர்கள் சுட்டுக்கொன்றனர். இந்த வழக்கில் ராஜகுரு சுகதேவ் உட்பட 32 இளம் தோழர்கள் சேர்க்கப்பட்டனர்.

லாலாஜியின் போக்கிலே முன்னர் அதிருப்தியும்,கோபமும் கொண்ட இளைஞராகத்தான் அந்நேரத்தில் பகத் இருந்தார். ஆனால் லாலாஜி தலைமையில் போராட்டம் என்றபோது அதில் அவர் குழாம் பங்கேற்றது.

காந்தி இப்படியான வன்முறை வழி தியாகங்கள் குறித்து எச்சரிக்கை செய்துகொண்டேயிருந்தவர். இம்மாதிரியான செயல்களை வெளிப்படையாக நிராகரித்தவர்.

அரசின் வழக்கறிஞர் Corden Noad கீழ்கண்ட 7 குற்றச் செயல்களை இத்தோழர்கள் செய்ததாக அடுக்கினார். அவரது மொழியில்

1. Murder of Saunders and Chaman Singh on December 17th 1928

2. Assembly bomb outrage

3. Dacoity at the Punjab National Bank ,Lahore

4. Dacoity at Maulina Bihar

5. Attack on a UP police officer Banerjea

6. Embezzlement of Government funds by a post office employee

7. Manufacture of bombs at factories in Lahore, Calcutta, Agra and other places. வழக்கு விசாரணை , சிறைக்கைதிகளின் நலனுக்கான போராட்டம், சிறை வாழ்வின் சித்திரவதை, அங்கு வாழ்வை நேசிக்கும் ஆக்கபூர்வ வேலைகள் என நாட்கள் கடந்து பகத்சிங் ராஜகுரு சுகதேவ் தூக்கு ஏற்றப்பட்டு பெரும் தியாகம் செய்தனர். முன்னர் ஜதிந்திரநாத் உண்ணா நோன்பிருந்து மரணித்தார்.

காந்தி யங் இந்தியாவில் சாண்டர்ஸ் கொலையை அடுத்து கீழ்கண்டவாறு எழுதினார்

…there is nothing heroic about a cold blooded robbery accompanied by murder..there is equally none in the deliberate secret assassination of an innocent police officer who has discharged his duty however disagreeable its consequences may be for the community to which the assassin belongs

It is time we began, irrespective of nationalities, to regard deeds with mean motives or meaner consequences with nothing but horror, indignation and disapprobation, no matter how daring they may be. I know that this means a new valuation of such terms as heroism, patriotism, religious ness and the like

காந்திக்கு மட்டும்தான் இந்த மாதிரியான ஹீரோயிசத்தை தவறு என்று சொல்லும் துணிச்சல் இருந்தது. இந்த மாதிரி ஹீரோயிசத்தை பலரும் போற்றி புகழ் பாடலாமே தவிர, சொந்த குடும்பங்களிலோ சாதாரண மக்களாலோ பின்பற்ற முடியாது என்பதை காந்தி உணர்ந்தே இருந்தார். இவை மக்களின் போராட்டத்திற்கு தற்காலிக பின்னடைவைக் கூட தந்துவிடும் . வன்முறை வழி, வங்கி கொள்ளை , இரகசிய வழிமுறை குழாம்கள் என்பன விடுதலைக்கு வழியாகாது என அவர் நம்பினார்.

இந்தியாவில் பல அமைப்புகள் வன்முறை வழியை நாடுவதில்லை என்பது ஆறுதலான அம்சம். ஆனால் இன்றும் கூட சில அமைப்புகள் அதன் சில தலைவர்கள் இரகசியம் காக்க வேண்டும் என்கிற மனநிலையில் இருப்பதைக் காணமுடிகிறது.

பென்ஷனர்களின் பொருளாதார நலனுக்காக செயல்பட்டுவரும் அமைப்பில் கூட இந்த இரகசிய மனங்கள் எதற்கு எனத் தெரியவில்லை. இரகசிய மனம் அச்சத்தின்

காரணமாகவும், தங்களைப் பற்றிய போதுமான நம்பிக்கையில்லாத போதும்தான் அதிகம் செயல்படத்துவங்கும்.

வரலாற்றிலிருந்து அமைப்புகளும் கற்றுத்தேறவேண்டும். உலகின் எல்லா இடங்களிலும் வெளிப்படைத்தன்மையைக் கோருபவர் , தான் தொழிற்படும் இடத்தில் இரகசியம் என செயல்படுவது சரியா என சிந்தித்தல் நலம்

**oct 27 2023**

# நேரு குறித்து

நயன் தாரா சாகல் நாவலாசிரியர். இந்திய பன்முக அரசியல் வாழ்விற்கான போராளி. நேரு சகோதரியான விஜயலட்சுமி அவர்களின் புதல்வி. இந்திராவுடன் அலகாபாத் ஆனந்த பவனில் வளர்ந்தவர். ஏராள நாவல்களின் ஆசிரியர். நேரு, இந்திரா குறித்தும் எழுதியவர். இந்திய விடுதலைப்போர் குறித்து குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்வதிலும் ஆர்வமாக இருந்தவர்.

நேருவின் 125 ஆம் பிறந்த ஆண்டில் , தன் பங்கிற்காக சில ஆளுமைகளின் கட்டுரைகளை தொகுத்து , 2015ல் Nehru's India Essays on the Maker of a Nation என்பதை எடிட் செய்து கொணர்ந்தார் நயன் தாரா சாகல். காந்திக்கு பின்னர் உலகமும் இந்தியாவும் போற்றிய இந்தியர் என்றால் நேரு எனச் சொல்லும் அழுத்தமான முன்னுரை ஒன்றையும் அவர் இதில் எழுதியுள்ளார்.

21 ஆம் நூற்றாண்டில் நேருவை விளங்கிக்கொள்வது என்கிற கட்டுரையை மணிசங்கர் தந்துள்ளார். தலைப்பை பார்த்து அதிகம் நான் எதிர்பார்த்துவிட்டேன். வழக்கமாக நேரு குறித்த scholarship எழுத்துக்களை தாண்டியதாக அவர் கட்டுரை ஏனோ எனக்குப் படவில்லை.

பத்திரிகையாளர் குமார் கேட்கர் - நேரு என்கிற தத்துவ அரசியல்வாதி குறித்த பார்வையை இன்றுள்ள இந்துத்துவா அரசியல் சூழலை சுட்டிக்காட்டி வைத்துள்ளார். குமார் காந்தி நேரு ஒப்பீட்டையும் தந்துள்ளார். அவர் வரிகளில்

Though he was a follower of Gandhi, he was less ideological and more political. For Nehru Gita was not the guiding light but Marx was. Spirituality was not his credo, science was. Ram Rajya was not his ideal, socialism was. Ashram was not his medium of political congregation, but trade unions and Kisan sabhas. He was not a vegetarian nor did he believe that being anti alcohol was an important ideological point.

Gandhi did not believe in the idea of class conflict , Nehru did. Gandhi never thought of the Russian Revolution as a forward March of history, Nehru wanted to learn from and emulate Lenin. Gandhiji remained quintessentially a traditional Hindu with Vaishnava ethos. Nehru represented a dialectical synthesis of the west and east.

Gandhi advocated freedom from pleasure, Nehru believed in the idea of materialism. Gandhi thought of sex as almost sun, Nehru was against celibacy

Gandhi looked at large scale industrialisation as a destruction of nature, Nehru saw in large industry and modern technology the progress of civilisation..Gandhi looked tradition as a guide, Nehru thought of modernity as the future and regarded old practices as hurdles to progress

இவ்வளவு மாறுபட்ட சிந்தனைகள் இருந்தாலும் அவர் இறுதிவரை காந்தியின் follower என்கிற ஒன்றிலிருந்து விலகவில்லை என குமார் எழுதுகிறார்.

இந்தர் மல்ஹோத்ரா இரண்டு பக்கங்களில், ஏதோ பத்திரிகை ஒன்றிற்கு article தருவது போல் எழுதியுள்ளார். Essays என ஏன் நயன் தாரா இதில் சேர்த்தாரோ தெரியவில்லை.

ஆதித்யா முகர்ஜி  வரலாற்றாய்வாளர் பிபின் சந்திராவுடன் வளர்ந்தவர். நேரு காலத்து பொருளாதார வளர்ச்சி குறித்து சொல்லப்படும் விமர்சனங்களின் நியாயமின்மையை தனது essayல் விரிவாக எழுதியுள்ளார்.

சிவ் விஸ்வநாதன் எதையும் இலக்கியத்தன்மையுடன் poetic ஆக எழுதக்கூடியவர் . கல்கத்தாவில் தன் தந்தையால் அறிமுகமான நேரு  கொடுத்த சுவையான சிந்தனை செயல்பாடுகளை மிகவும் அழகியல் வடிவில் விஸ்வநாதன் வெளிப்படுத்தியுள்ளார். அவரின் சில வரிகள்

If Gandhi reflected the truth of the satyagrahi, Nehru embodied the privileges of an aristocracy. Clothes were critical. They were statements of a culture..when one looks at photographs of Nehru one senses he was literally model ling for India. He was the great Indian idol- ideal

Science in the Nehruvian era was not an act of faith or a dogma but a way of life. To be part of Nehruvian experiment was to be part of the future

இந்த புத்தகத்தில் அடுத்து என்னை ஈர்த்த கட்டுரை கோபாலகிருஷ்ண காந்தி எழுதிய எதையும் நம்பிய நேரு என்பதாகும். Trustingly, JN. துறவி போல் மக்களை பிரதமர் ஒருவர் நம்பிவிட முடியுமா..நேரு நம்பினாரே எல்லோரையும் நம்பினாரே என அவர் எழுதுகிறார்

Nehru trusted unreservedly, people institutions to plat their roles honestly- trusted officials, colleagues, legislators, scientists, judges to be fair,  lawyers not fraudulent, journalists should be unfettered. Don't spare me Shankar ( cartoon Shankar's weekly), he told.

Trust was his second nature. He saw the world undividedly. In politics no odour of fascism or communalism- he was impatient with the doctrinaire and the prescriptive.

கோபாலகிருஷ்ண காந்தி இந்த கட்டுரையில் வந்த மற்றொரு முக்கிய அம்சம்

A legitimate political majority becoming the argument for a completely illegitimate religious majoritarianism would have seemed impossible in a Gandhi- Nehru - Ambedkar derived political system. But not so any more.

ஆகார் படேல் நேருவின் பன்முக ஆளுமைகளை எழுதியுள்ளார். கிரன் நாகர்கர் நேரு சாதாரண மக்களின் நாயகன் என்பது குறித்து விரிவாக எழுதியுள்ளார்.

வாய்ப்புள்ளவர் வாசித்துப் பார்க்கலாம்

**oct 26  2023**

புலவராக ஆகும் விருப்பம் தவறில்லை. ஆனால் தர்பாரில் புலவனாக வேண்டும் என்றால் சற்று யோசி.

- தோழன் நமரி

oct 26

குறளமுதம்

தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கொணரப்பட்ட ஒன்றுதான் குறளமுதம். வந்து 23 ஆண்டுகள் ஆகிவிட்டது. முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள் தொகுத்த ஆக்கம். 20 ஆம் நூற்றாண்டில் சில முக்கிய ஆளுமைகள் குறள் குறித்து எழுதியவற்றை தொகுத்த அரிய பணியை செய்துள்ளனர். அப்போது இருந்த முதல்வர் கலைஞர் ஆசியுடன் வந்துள்ளது.

1902ல் மறைமலையடிகள் எழுதிய கட்டுரைத் தொடங்கி, அன்று இருந்த அறநிலையத்துறை அமைச்சர் மு.தமிழ்க்குடிமகன் 1999ல் எழுதியது ஈராக 40 குறள் குறித்த அருங்கட்டுரைகள் இதில் இடம் பெற்றுள்ளன.

மறைமலையடிகள், செல்வக்கேசவராய முதலியார், ராகவையங்கார், நல்லசாமிப்பிள்ளை, அயோத்திதாசர், சோமசுந்தரபாரதியார், தண்டபாணிப்பிள்ளை, பெரியார், உ வே சா, திரு வி க, கதிரேச செட்டியார், கி ஆ பெ, இராய சொக்கலிங்கம், மு.வ, ஔவை துரைசாமி, அண்ணா, புலவர் குழந்தை, இறையனார், சக்கரவர்த்தி நயினார், வ சுப மாணிக்கம், சரவணன் ஆறுமுக முதலியார், வையாபுரிப்பிள்ளை, ரா பி சேதுப்பிள்ளை, பாரதிதாசன், சாமி சிதம்பரனார், நாமக்கல் கவிஞர், கலைஞர், தெ பொ மீ, ஸ்ரீபால், ராஜாஜி, மா இராசமாணிக்கனார், தண்டபாணி தேசிகர், இலக்குவனார், கா அப்பாத்துரை, பாவாணர், திருநாவுக்கரசு, திருக்குறள் முனிசாமி, குன்றக்குடி அடிகளார், பேராசிரியர், தமிழ்க்குடிமகன் என ஆண்டு வரிசைப்படி மேற்கூறியவர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பை நாம் காணமுடியும்.

இஸ்லாமியர் எவராது இந்த காலப்பகுதியில் குறள் கட்டுரை எழுதியிருந்தார்களா? வ வே சு கம்பன் பற்றி எழுதியது போல் குறள் பற்றி

தனியாக ஏதும் எழுதினாரா? பாரதி தனிக் கட்டுரை எழுதியதாக ஏதேனும் செய்தி உள்ளதா? சுத்தானந்த பாரதி, வ உ சி என கேட்கத் தோன்றுகிறது. விடுதலைக் கால காங்கிரஸ் இயக்கத்தில் திரு வி க 1939ல் எழுதியது தவிர யாரும் குறள் குறித்து எழுதவில்லையா.. கம்யூனிஸ்ட் இயக்க தமிழ் பற்றாளர்கள் எவரும் எழுதவில்லையா?

விவரம் அறிந்தவர்கள் சரியாக சொல்லவியலும். தொகுப்பாசிரியர் இப்படிச் சொல்லியுள்ளார்

…நூற்றுக்கணக்கான அறிஞர்கள் இத்துறையில் உழைத்துள்ளனர். அனைத்து ஆய்வு முயற்சிகளையும் பதிவு செய்யவேண்டியது இன்றியமையாதது எனினும் கால வரையறைக்குள் ஒரு சிலவே இடம் பெற்றுள்ளன. இடம் பெறவேண்டிய கட்டுரைகள் இன்னும் நூற்றுக்கணக்கில் உள. இத்தகைய முயற்சிகள் மேலும் பெருக இந்நூல் துணை நிற்கும்

600 பக்கங்களுக்கு மேலான இந்நூல் தமிழர்களுக்கு கிடைத்துள்ள குறள் குறித்த நல் ஆவணம்.

**oct 26 2023**

## சாரு மஜூம்தார்…

சாரு மஜூம்தார் வாழ்க்கை குறித்த அசோக் முகோபாத்யாயா புத்தகத்தின் இறுதி பகுதியில் Internal Feud என்ற சிறு அத்தியாயம் இருக்கிறது.

அமைப்புகளில் ஒரே நோக்கத்துடன் ஒன்றாக பணியாற்ற வந்தவர்கள் மத்தியில் மாற்றுக்கருத்துக்கள் வந்து அவை உஷ்ண விவாதமாகும்போது வசவுச் சொற்களும் முத்திரையிடல்களும் அவதூறுகளும் எப்படி அதிகமாகும்- சக தோழர்கள் மீது சந்தேக நிழலை படியச் செய்தலும், அவர்களால் எல்லாம் வீணாகிவிட்டது போன்ற பிரமை கூட்டலும் எப்படி அந்த எம் எல் இயக்கத்தோழர்கள் தலைவர்கள் மத்தியில் நடந்தது பற்றியும் அந்த அத்தியாயத்தில் பேசப்பட்டுள்ளது.

லெனினே முன்னொரு காலத்தில் மார்க்சிய போப் என கருதப்பட்ட காட்ஸ்கியை அவர் சோவியத் புரட்சி குறித்து எழுப்பிய கேள்விகளுக்காக ஓடுகாலி என விமர்சித்ததையும் அறிவோம். டிராட்ஸ்கிக்கும் புகாரினுக்கும் ஸ்டாலின் காலத்தில் பெரும் பட்டங்கள் வராமல் இல்லை.

இது கம்யூனிஸ்ட் இயக்கத்தில் மட்டுமல்ல, எந்த இயக்கத்திலும் அதன் பெரும்பான்மைக்கு எதிராக செயல்படுபவர்கள் மீதும், அல்லது அந்த சிறுபான்மையினர் பெரும்பான்மை தலைமை மீதும் பரஸ்பர முத்திரை குத்தல்களையும் சாடல்களையும் செய்வதைக் காணமுடியும்.

பல தரப்பு வாத பிரதிவாதங்களை செவிமடுத்து புரிந்துகொள்ளும் அறிதல்முறை வளர்த்தெடுக்கப்படவில்லை. தனிநபர்களும் அதற்கான நேரத்தையும் பொறுமையையும் காட்டி கற்கமுடியவில்லை.

பொதுவாக எவரும் தன் கருத்துக்கு மாற்றான கருத்து வருவதை விரும்புவதில்லை. தான் ஓர் அமைப்பால் மிக உயரமான இடத்தில் வைக்கப்பட்டுள்ளதாக நினைப்பவர்களிடத்தில் அவர்கள் உயரத்திற்கேற்ப இந்த சகிப்புத்தன்மையின் அளவு எதிர் விகிதத்தில் அமைவதையும் காணமுடியும். முகநூல் உதாசீனங்களில் இதை நாம் அனுமானிக்கமுடியும்.

Dissent என்பது அதற்கான நியாயங்களுடன் வரும்போதும் கூட அதை அனுமதிக்காத நிலையையே பார்க்கமுடிகிறது. Dissent என்ற பெயரில் அடாவடித்தனம், அமைப்பை சீர்குலைய செய்வது, அமைப்பு நடவடிக்கைகளை நடத்தவிடாமல் கூச்சலிடுவது போன்ற பெயரில் நடைபெறுவதை எந்த அமைப்பு தலைமையும் சகித்துக்கொள்வது கடினமானது. அதேபோல் மாறுபட்ட கருத்தை அடாவடித்தனமாக சொல்வதே புனித கடமை என சிலர் கொள்வதையும் காணமுடிகிறது. விவாதத்தில் பரஸ்பர மரியாதை கலந்த மொழி என்பது பழக்கமாகவேண்டியுள்ளது. கருத்து ஜெண்டில்மேன் எனும் லிபரலிசம் எதற்கு என கேட்பவர்களால் இதை ஏற்க முடியாமல் போகலாம்

அன்றாட அமைப்பின் செயல்பாட்டிற்கு சேதம் விளவிக்காமல், பதவி போராட்டங்களில் முன்வைத்துக்கொள்ளாமல் கருத்துருவாக்கத்திற்காக எழும்பும் Dissent களை அமைப்பின் தலைமை பெரும் ஆபத்தைப் போல எடுத்துக்கொள்வதும், சந்தேகங்களை அவதூறுகளை அந்த dissenters மீது பரப்புவதும் ஜனநாயக இயக்கத்திற்கு ஆரோக்கியமான பாதையாகாது என்று தோன்றுகிறது.

தோழர் நமரி சொன்னதை தந்துள்ளேன்

The 'official' tries to hoist the flag of arrogance on hearing the dissent and stamp its seal on it

oct 25 2023

## சாதிகள்…

இந்தியாவில் சாதி அமைப்பு முறை குறித்து ஏராள ஆய்வுகள் கிடைக்கின்றன. மேற்கு ஆய்வாளர்கள், இந்திய சமூகவியலாளர்கள், மார்க்சியர்கள், சோசலிஸ்ட்கள், அம்பேத்கர், வரலாற்றாய்வாளர்கள் என ஆய்வுலகம் விரிந்த ஒன்றாகவே இருக்கிறது.

இந்த ஆய்வுகளில் ஒன்றை குறிப்பிட்டு அது தான் துல்லியமானது என சொல்லிவிடமுடியுமா என எனக்கு தோன்றவில்லை. பெரும்பாலும் சில தரவுகளைக்கொண்டு, சில பண்டைய நூல்களை சாட்சியாகக்கொண்டு, அந்த அந்த ஆய்வாளர்கள் வெளிப்படுத்தும் ஊகங்களாக உத்தேச முன்வைப்புகளாக, இப்படி வந்திருக்கலாம் எனச் சொல்லக்கூடியதாக அவை அமைந்திருக்கின்றன. அவர்கள் கருதும் உண்மைகள் என்ற முன்வைப்புகள் இருக்கவே செய்யும். அவர்களின் perception சார்ந்த தீர்ப்புரையாகவும், அரசியலுக்கு தோதான சமூக இழுப்புரைகளாகவும் அவை அமைந்துள்ளன.

இந்த தரப்பில் சில வலது ஆய்வாளர்களும் வரத்துவங்கியுள்ளனர். பழம் பெருமையை குறையேதும் இல்லாமல் உயர்த்திக்காட்டி, எல்லாம் காரண காரியங்களின் ஏற்பாடாக நிறுவி, இன்றைய அரசியலுக்கு துணைநிற்கும் ஆய்வு இழுப்புகளாக அவை வருவதைக் காண முடிகிறது. இவர்களும் தாங்கள் காணும் உண்மைகள் என்றே முன்வைப்புகளை, பண்டைய நூல்களை சாட்சியாக வைத்து பேசுகின்றனர்.

முன்னர் ஐ ஐ எம் பேராசிரியாக இருந்த திரு வைத்தியநாதன் ஆய்வுரை ஒன்றின் சில அம்சங்களை முகநூலில் தந்திருந்தேன். இன்று ராஜிவ் மல்ஹோத்ரா மற்றும் விஜயா விஸ்வநாதன் எழுதியுள்ள varna Jati Caste A Primer on Indian Social Structures என்பதிலிருந்து சில அம்சங்களை தர முயற்சித்துள்ளேன்.

ராஜிவ் மற்றும் விஜயா அமெரிக்க கல்வி புலன் சார்ந்தவர்கள். ராஜிவ் கார்ப்பரேட் சார்ந்தவரும் கூட. ஏராளம் எழுதிவருகிறார். விஜயாவும் வேதாந்த தர்ம நாகரிகம் குறித்த ஆய்வுகளை செய்து வருகிறார். கார்ப்பரேட் சார்ந்தவர். இவர்களின்

வர்ணா ஜாதி காஸ்ட் புத்தகம் 2023ல் தான் வந்தது. முடிந்தவரை சொற்செட்டுடன், தங்கள் ஆய்வுரையை சாரமாக தர முயற்சித்துள்ளனர்.

Wokeism மற்றும் மேற்கின் இந்திய சமூக முறை குறித்த அரைகுறை புரிதல்களை இவர்கள் விமர்சித்து, அதை நேர்படுத்தும் வேலையை எடுத்து செய்வதாக சொல்கின்றனர். அதை மேற்கில் வாழ்ந்துகொண்டே செய்கின்றனர் போலும்.

Varna Jati caste என்கிற சொல்லாட்சிகள் பெற்ற கால மாறுதலை இவர்கள் விவரிக்கின்றனர். போர்த்துகீசிய சொல்லின் ஆட்டுவிப்பை கேள்விக்குள்ளாக்க வேண்டும் என்கின்றனர். வர்ணாவை ஒரே குணம் attribute கொண்டு பேசுவது அறியாமை - அதன் குறைந்த அளவான 7 attributes கொண்டு முழுமையாக அறிதல் அவசியம் என்கின்றனர். அதில் புருஷார்த்தம் என்பதுடன் ஆசிரமம், அகிம்சை, தொழில் வகை போன்றவைகளும் இணைத்து பார்த்துள்ளனர் என்கின்றனர்.

Varna can be understood only when the entire ecosystem is considered. Those following a modern, and opportunistic life style are disconnected from varna based society. Varna Jati and Caste are all different and their distinct origins, applications and histories need to be understood.

இந்த மூன்றும் வெவ்வேறு கால புரிதல்கள் என்கின்றனர். இந்திய நாகரீகம் என்பது வேற்றுமையை சகித்துக்கொள்வதல்ல, அதன் இயல்பை கொண்டாடும் நாகரீகம் என்கின்றனர். எங்கெல்லாம் diversity நீக்கம் என வருகிறதோ அங்கெல்லாம் centralised monopoly வந்துவிடுவதாக இந்த ஆசிரியர்கள் சொல்கின்றனர்.

ஓக்கனிசத்தின் அம்சமே இந்த வேற்றுமைகளை நீக்குவதாக சொல்லி அது செய்திடும் cancel culture என்கின்றனர்.

கலப்பு மணம் என்பதை இவர்கள் வேறுவகையில் விமர்சிப்பதைக் காணமுடிகிறது. திருமணம் என்பதை சுய விருப்பம் சார்ந்த கலாச்சார தேர்வு எனச் சொல்லி, இதற்கெல்லாம் அரச கட்டளை போன்ற ஒன்று கூடாது என்கின்றனர்.

Real diversity is possible only when different identities are allowed to exist as per their own choices in an open architecture with no central authority and to dictate social policies .

இங்கு சமூகங்கள் எந்த அதாரிட்டியையும் ஏதோ ஒரு வகையில் வைத்துக்கொள்ளாமலா இயங்குகின்றனர் என்ற கேள்வியை ஆசிரியர்கள் miss செய்திருப்பதாக தோன்றுகிறது.

மேற்கின் ஆய்வை நம்பியவர்கள் ஏதோ ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்திய சமூக அமைப்பு அப்படியே மாறாமல் இருப்பதைப் போன்ற ஒன்றை சித்தரிப்பதை இவர்கள் விமர்சிக்கின்றனர். நிலைத்த ஒன்றாகவும், இன்றுள்ள அனைத்து பிரச்சனைகளுக்கும் அந்த முன்னொரு காலம் காரணமாகவும், இந்தியாவின் நீண்ட வரலாற்று கட்டங்களை குழப்பமாக புரிந்து கொள்ளலும் அவர்கள் செய்யும் தவறாக இவர்கள் சொல்கின்றனர்.

வர்ண சாதியை இனம் என்கிற racism ஆக்கி அதை பெரும் அரசியல் இயக்கமாக்கியுள்ளனர் - அதன் மூலம் இந்துயிசம் என்பதை நீக்கிவிட முயற்சிப்பதாக இவர்கள் விமர்சிக்கின்றனர். கீழ்கண்ட கேள்விகளை பெரும் விவாதப் பொருளாக இந்த ஆசிரியர்களும் எடுத்துக்கொண்டுள்ளனர்.

Is caste a necessary condition for Hinduism?

to be a Hindu can one avoid caste ?

Does conforming to caste automatically make one a Hindu?

Was caste present in ancient Vedic society?

Why did caste enter Indian society?

Varna Jati compatible with modern democracy and capitalism?

Is caste only abusive, or only positive or does it have a combination of good and bad qualities?

How grave is caste oppression today?

How western societies managed to resolve their massive class and wealth disparities?

Who are the Dalit activities working in the west? Who supports them?

போன்ற ஏராள கேள்விகளை முன்வைத்து இப்புத்தகம் தனது உரையாடலை நகர்த்திச் செல்கிறது. இவர்கள் இந்திய சமூக வரலாற்று கட்டங்கள் என 7 யை குறிப்பிட்டுள்ளனர்.

ஆரம்ப வேதகாலம், பின் வேத இதிகாச காலம், தர்மசாஸ்திரங்கள், இஸ்லாமியர் காலம், அய்ரோப்பியர் காலனி ஆட்சி, விடுதலைக்கு பின்னரான காலம், உலகமய சூழல் என்கிற 7 கட்டம் பற்றி விளக்கியுள்ளனர்.

**ஆரம்ப வேத காலம்** - varna, no hierarchy , not birth based, no endogamy, no economic competition

**இதிகாச காலம்-** fluid varnas/ Jatis, no hierarchy, sometimes birth based, no endogamy, no economic competition

**தர்மசாஸ்திர காலம்**- Formalised Jatis, birth based , some endogamy , no rigid hierarchy, no economic competition

**முஸ்லிம் காலம்**- degenerated Jatis, rigid hierarchy, birth based, rigid endogamy, no economic competition

**காலனி ஆட்சி**- caste , rigid hierarchy, officially birth based, rigid endogamy, competing economic interests

விடுதலைக்கு பின்னர்- caste Vote Bank, hierarchy, endogamy, officially birth based, quotas reservations

**உலகமய சூழல்**- caste as race, hierarchy, communal hostility, free market, endogamy

தீண்டாமை பற்றி பேசும்போது ஆரம்பத்தில் இல்லை, தர்மசாஸ்திர காலத்திக் தொடங்கி இஸ்லாம் காலனி காலத்தில் மிக அதிகமாகி, விடுதலைக்கு பின்னர் சட்டப்படி குற்றமாகியுள்ளது என சொல்லியுள்ளனர்.

- மேலும் வாய்ப்புள்ளபோது பார்க்கலாம்

அக் 24, 2023

## காந்தி நேரு

காந்திக்கும் நேருவிற்குமான வெளிப்படை வேறுபாட்டை மதராஸ் டிசம்பர் 1927 காங்கிரஸ் கூடுகை நேரத்தில் காணமுடிந்தது.

நேரு தன் அய்ரோப்பிய பயணம், ஏகாதிபத்திய எதிர்ப்பு லீக் அமர்வு, சோவியத் புரட்சி 10 ஆண்டுகள் கொண்டாட்டம் பங்கேற்பு போன்ற நிகழ்வுகளின் தாக்கத்தில் மதராஸ் மாநாட்டிற்கு வந்திருந்தார். முழுமையான விடுதலை என்ற தீர்மானத்தை நேரு முன்மொழிந்து அது ஏற்கவும் பட்டது. காந்தி மதராஸில் இருந்தாலும் சிறிது நேரம்தான் மாநாட்டில் இருந்தார். உடல் நிலை ஒத்துழைக்காத சூழலிலும் அவர் வந்திருந்தார்.

இந்து முஸ்லிம் ஒற்றுமை குறித்த அருமையான தீர்மானத்தை சரோஜினி அவர்களும், சைமன் பகிஷ்கரிப்பு தீர்மானத்தை ஸ்ரீனிவாசன் அவர்களும், சுயராஜ்ய அரசமைப்பு எழுதுதல் தீர்மானத்தை ஜமனதாஸ் அவர்களும் முன்மொழிந்தனர்.

நேரு தன் தீவிர கருத்துக்களை ஓராண்டிற்காவது ஊறப்போட்டு எதார்த்த நிலைமைகளுடன் சரி பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் என காந்தி கருதினார். முழு விடுதலை தீர்மானம் முன் யோசனை இல்லாமல் அவசரப்பட்டு நிறைவேற்றப்பட்டுவிட்டதாக காந்தி நேருவிற்கு ஜனவரி 1928ல் கடிதம் எழுதினார்.

நேரு இக்கடிதத்தால் பாதிக்கப்பட்டு, தான் செய்தது சரியானதே என நியாயப்படுத்தும் பதில் கடிதத்தை எழுதினார். இந்திய சுயராஜ்யம் போன்ற சிறிய புத்தக கருத்துக்களைவிட நீங்கள் பெரியவர். அவசரப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. மூன்று மணி நேரம் விவாதம் நடந்தது. தாங்கள் அங்கு வராமலே இப்படி சொல்வதை ஏற்கமுடியாது. மேலும் 'மேற்கு' குறித்த தங்கள் சிந்தனையையும் ஏற்கமுடியாது என பதில் எழுதினார்.

நேருவின் பதில் கடிதம் சற்று over doing என் றே எனக்குத் தோன்றும். இளம் போராளிகளுக்கே உள்ள பதட்டமது. காந்தி அதற்கு பதில் எழுதினார். நம்

இருவருக்கும் சிந்தனையில் பெரிய வேறுபாடு இருக்கிறது. என் அன்பு உங்களை கட்டிப்போடக்கூடாது. சுதந்திரமாக என்னை எதிர்த்து நீங்கள் போராட முடிவெடுங்கள்- unfurl your flag என காந்தி நேருவிற்கு எழுதினார். அதாவது நினைப்பது சரி என்றால் , என்னை விடுத்து உன் பாதையில் போவதே உண்மையின் சாலை என அவர் நேருவிற்கு தெளிவு படுத்தினார்.

ஆனால் நேரு அமைதியாக இதை கடந்து , காந்தியுடனே உடன்பாட்டையும் வேறுபாடுகளையும் வைத்துக்கொண்டே பயணித்தார் என்பதை தொடர்ந்த வரலாறு காட்டும்.

இதற்கெல்லாம் முன்பாகவே , 1927 மே மாதமே நேரு காந்தியிடமிருந்து விலகிச் செல்கிறார் என்பதை ரோமயின் ரோலந்த் உணர்ந்தார். தனது நாட்குறிப்பில் அதை பதிவு செய்துள்ளதாக சுசிலா குறிப்பிடுகிறார். சுசிலா எழுதியிருப்பது

" But even before his visit ( Nehru) to the Soviet Union, the change in the younger Nehru's outlook had become quite noticeable. In the entry of May 1, 1927 in his diary Romain Rolland noted that Jawaharlal seemed to be breaking away from Gandhism, claiming that the poorer classes, workers, peasants were also breaking away , though they still revered Gandhi. They saw that Gandhiji was doing next to nothing to improve their material condition, Gandhiji would hear nothing of class conflict and preached purity of life to the workers as a remedy to their poverty.

Romain observed " As far as I can judge, Nehru over the last two years has moved some distance away from the religious and moral side of Gandhi's doctrine" ( Sushila vol 6 page 92)

ரோலந்திற்கு நேருவைப் பற்றி தோன்றியதை அவர் பதிவு செய்துள்ளார். சமயம் குறித்து தள்ளிப் போவதை புரிந்துகொள்ளலாம். ஆனால் 'மாரல்' என்பது கேள்விக்குரியதான ஒன்று.

நேரு , அம்பேத்கர் இருவருக்குமே நவீன இந்திய கட்டுமானத்திற்கு காந்திய பொருளாதார அரசியல் அவசியமில்லை என கருத்து இருந்திருக்கலாம். De Gandhiyisation என்பதில் அம்பேத்கர் வெளிப்படையாக உறுதியாக இருந்தார். அதில் அவர் 'மாரல்' என்கிற தடுப்புகளையெல்லாம் போட்டுக்கொள்ளவில்லை. வேறுபாடுகள் இருந்தாலும் நேரு காந்தியுடனேயே பயணித்தார். காந்தியும் படேலை, ராஜாஜியை வாரிசாக சொல்லாமல் நேருவை தெரிவித்தார். அன்றைய அரசியல் நிகழ்வுகளில் நேரு உச்சம் செல்ல அவருக்கு நல் வாய்ப்பும் கிட்டியது.

தனது அறிவார்ந்த சிந்தனை புலத்திலிருந்து- சோசலிச பொருளாதார ஏற்பாடுகள் - திட்டமிடுதல் என அவர் கருதியதை நோக்கி நேரு பயணித்தார். இந்து முஸ்லிம் ஒற்றுமை என்கிற காந்திய கருத்தியலில் , செக்யூலரிசம் என்கிற மேற்கு பார்வையில் அவர் பயணித்தார். அமெரிக்க சோவியத் என்கிற இரு பகை சார் அரசியலில் சாதுர்யமாக அணிசேரா இயக்கம் ( சற்று சோவியத் சார்பு) உருவாக்கி, தனக்கென உலகில் இடம் பிடித்தார்.

காந்தியுடன் பயணித்த அனைத்து சக தோழர்களுடனும் ஏதோ ஒருவகையில் ( படேல், பிரசாத், ராஜாஜி, குமரப்பா, ஜேபி, லோகியா, கிருபளானி) முரண்பட்டு தனக்கான குழாம் ஒன்றுடன் அவர் தனது ஆட்சியை, தேர்ந்த பாராளுமன்ற ஜனநாயக வழியில் நடத்தலானார்.

சீன யுத்தம் தோல்வி என்கிற துவளல் மட்டும் இல்லாமல் போயிருந்தால், நேருவிற்கு இன்னும் பெரிய இடம் கிடைத்திருக்கலாம். இன்றுள்ள வலது அரசியல் de nehruisation என்பதில் மய்யங்கொண்டுள்ளது.

அக் 24 2023

**பாவாணர்..**

பாவாணர் எழுதிய தமிழ் இலக்கிய வரலாறு குறித்து முன்பு ஒரு இடுகை செய்திருந்தேன். 450 அளவிலான இந்நூலின் இறுதிப்பகுதி 'எதிர்காலம்' என்கிற தலைப்பில் அவர் முன்வைத்துள்ள கருத்து தொகுப்புப் பகுதியாக இருக்கும். அவரின் ஆய்வுக் கண்ணோட்டத்தில் வந்தடைந்த புள்ளிகள் எனலாம். அதில் சில இங்கு வரிசையாக்கப்பட்டுள்ளன. ஒருவர் ஏற்கலாம். மறுக்கவும் செய்யலாம். இனி பாவாணரின் பார்வையில்..

தமிழ் விடுதலையே தமிழன் விடுதலை. ஆங்கில ஆட்சி நீக்கம் நடந்தாலும், தமிழ்நாடு இன்னும் விடுதலை பெறவில்லை

வ உ சி , திரு வி க முதலிய தமிழறிஞரும், தமிழின் தொன்மை முன்மை தாய்மை தலைமைகளை அறிந்தவர் அல்லர்.

ஆங்கிலேயர் இல்லாமல், இந்தியர் இருப்புப்பாதை அமைத்திருப்பின், தொடர்வண்டி வகுப்புக்கள் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர் என ஐவகுப்பாக இருந்திருக்கும். 1வது, 2வது, 3வது என இருந்திருக்காது.

ஆங்கிலம் தமிழனுக்கு மீட்பனாய் வந்தான் என்பதை எவரும் மறுக்க முடியாது. அவனாட்சியால் பிராமணியம் ஓரளவே நீங்கிற்று. அவன் நீங்கின பின்னும் பிராமணியம் பேரளாவியிருப்பதுடன், இந்தி மணியம் என்னும் புத்தடிமைத்தனத்திற்கு இடந்தந்துள்ளது.

வரலாற்றையும் தமிழ நாகரிகப் பண்பாட்டையும் நோக்கின், பிராமணியத்தையும், இந்தி மணியத்தையும் எதிர்ப்பாரே உண்மையான நாட்டுப்பற்றாளர். நயன்மைக் கட்சியாரே ( நீதிக்கட்சி) நாட்டுப்பற்றாளரும் உரிமையுணர்ச்சியரும் விடுதலை மறவருமாவர்.

தமிழ் நாட்டுப் பிராமணர் இன்று தமிழ் நாட்டாரும் தமிழ் பேசுவோருமாயிருக்கின்றனரேயன்றித் தமிழராயில்லை. பிராமணர்க்குந் தமிழர்க்கும் ஊமைப்போர் வரவர வலுத்து வருகிறது. பிராமணர் பழைய

செருக்கை விட்டுவிட்டுத் தமிழரோடு உடன்பிறந்தார் போல் ஒன்றி வாழ்வதே தக்கது.

தமிழர் வழிகாட்டியருள் திருவள்ளுவர்க்கு அடுத்தவர் மறைமலையடிகளே-சுப்பிரமணியபாரதியாரல்லர்.

இந்து மதம் என்பது தனி மதமன்று. சிவனியம், மாலியம் இரண்டும் தூய தமிழ் மதங்கள். தமிழர் மதம் இரண்டும் ஆரியர் படைத்துக்கொண்ட பிரம வணக்கமுங் கலந்த கலவையே இந்து மதம்.

இருமொழி திட்டத்தையே கடைப்பிடிக்க வேண்டும். நேரு உறுதிமொழி, இந்தி திணிப்புப் பிந்தி நிகழும் என்பதேயன்றி நீக்கப்படும் என்பதன்று. இருமொழி திட்டம் எதிர்ப்பவரைத் தமிழ்ப் பகைவராகக் கொண்டு, நாட்டிரண்டகக் குற்றத்திற்குரிய தண்டனையிடல் வேண்டும்.

தமிழும் தமிழரும் முன்னேற தமிழர் ஒற்றுமை இன்றியமையாதலால், தி க திமுக அதிமுக ஆகிய முக்கட்சியும் ஒன்றாதல் வேண்டும்.

கடவுள் இல்லையென்பதற்குப் போன்றே, உண்டு என்பதற்கும் பகுத்தறிவே துணை செய்கின்றது. நடுநிலையாக நோக்கி, இருசாராரும் ஒருவரையொருவர் இகழாதுங் குறைகூறாதும் இருப்பதே பகுத்தறிவிற்கழகாம்.

பகுத்தறிவியக்கம் தமிழரெல்லாருக்கும் பொதுவாயினும், பெரியாரைப் பின்பற்றியவர் அல்லது பகுத்தறிவாளர் என்று தம்மைச் சொல்லிக் கொள்வோர், தாமே முன்பு பகுத்தறிவொழுக்கம் பூண்டு பிறர்க்கு வழிகாட்டல் வேண்டும்..

அக் 23 2023

## வள்ளலார்..

மேலைநாட்டாரின் தாக்கம்தான் தனிஉரை நடை நூல்கள் தமிழில் வரக்காரணமானது. பெரும்பாலும் செய்யுள் வழக்கேயிருந்தது. அந்த காலத்தில்தான் 1854ல் இராமலிங்க அடிகளார் மனுமுறைகண்ட வாசகம் எனும் நூலை உரைநடையில் தருகிறார். அடுத்து அவர் எழுதிய ஜீவகாருண்ய ஒழுக்கம் அவர் சித்தியடைந்த பின்னர் வெளியானது.

அவர் தன் உரைநடையில் சோழர்களின் பரம்பரை ராஜதானியான திருவாரூரின் அழகை இவ்வாறு வர்ணிக்கிறார். பல்லாண்டுகள் அங்கு வாழ்ந்த எனக்கு இந்த வர்ணனையெல்லாம் தெரிய வந்திருந்தால் என் கண்களுக்கும் அவ்வூர் அப்படிப் பட்டிருக்கலாம். நான் பொழுது முழுக்க தெருப்போர்களில் இருந்து அங்கிருந்து சென்னை வந்து அடைந்தவனானேன்.

வள்ளலார் தரும் திருவாரூர் வர்ணணை நீண்ட ஒன்றுதான்.. இன்றுள்ள அவ்வூர்க்காரர்களாவது படித்து இன்புறலாம்

"கடல் சூழ்ந்த உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலிஞ் சிறப்புடையதாய், காவிரி என்னுந் தெய்வத் தன்மையுள்ள நதியினால் எந்தக் காலத்திலுங் குறைவு படாத நீர்வளப்பமுடையதாய், வாழைச்சோலை பலாச்சோலை மாஞ்சோலை தென்னஞ்சோலை கமுகஞ்சோலை கருப்பஞ்சோலை முதலாகிய பலனுள்ள சோலைகல் அணிஅணியாக ஒன்றையொன்று சூழ்ந்தோங்க அசோகு குருக்கத்தி சண்பகம் பாதிரி முதலான விருஷங்களால் நெருங்கி, வண்டுகள் பாடுகின்ற மலர்ச் சோலைகளும் தாமரைத் தடாகங்களும், நீர் நிறைந்து அல்லி நீலம் முதலான புட்பங்கல் மலர்கின்ற ஓடைகளும் பொய்கைகளும் ஏரிகளும் குளங்களும் பலவிடங்களிலுமுள்ளதாய், செந்நெல் முதலாகிய பயிர்கள் மாறாது முப்போகமும் விளைகின்ற குறைவற்ற விளைவையுடைய வயல்கள் நெருங்கியுள்ளதாய், சிதம்பரம் பஞ்சநதம் மத்தியார்ச்சுனம் சம்புகேச்சரம் முதலான திவ்வியக்ஷேத்திரங்கள் இடையிடையிலுள்ளதாய், இல்லற தருமத்தில் எள்ளளவும் பிழைபடாது செல்வத்திலும் கல்வியிலும் நிறைவுள்ள குடிகளுக்கிடமானதாய், பல வளப்பங்களுன்கொண்டு பூமிதேவிக்கு முகம்பொல

விளங்குகின்ற சோழ தேசத்தில்; பாதாள லோகத்தைப் பார்த்திருக்கின்ற ஆழமுள்ள அகழியினாற் சூழப்பட்டு இந்திரலோகத்தை எட்டிப் பார்க்கின்ற உன்னதமுள்ல கோபுரங்களையுடைய மதிலும் உய்யானம் நந்தவனம் பூஞ்சோலை முதலானவைகளும் தெய்வதீர்த்தம் பிரமதீர்த்தம் வசந்தவொடை, செங்குவளை யோடை முதலான நீர்நிலைகளுமுள்ளதாய், தேர்நிலைகள், யானைக்கூடங்கல் குதிரைப்பந்திகல் சேனையிடங்கள் ஆஸ்தான மண்டபம் அரச மண்டபம் நிருத்த மண்டபம் கல்வி மண்டபம் கணக்கறி மண்டபம் பாடல் மண்டபம் பரிசன மண்டபம் சித்திர மண்டபம் தேவாசிரிய மண்டபம் சித்திரத்தெற்றி சிலம்பக்கூடம் ஆயுதசாலை அமுதசாலை அறச்சாலைகளும் உடையதாய், ரதன பீடிகைகளிம் கனகமாளிகைகளும் பளிங்கு மாடங்களும் மணிப்பந்தல்களும் மகர தோரணங்களும் மங்கல கோஷங்களுமுள்ள கடைவீதி கணிகையர் வீதி சூத்திரர் வீதி வைசியர் வீதி அரசர் வீதி அந்தணர் வீதி ஆதிசைவர் வீதி சைவர் வீதி வைதிகர் வீதி தபோதனரிருக்கை சைவமுனிவர்மடம் உட்சமயத்தார் உறையுள் முதலான வளப்பங்களை உடையதாய், தியாகராஜப் பெருமான் எழுந்தருளிய கமலாலயம் என்னும் திருக்கோயிலை உள்ளே உடையதாய், சோழராஜர்கள் பரம்பரையாக அரசாட்சி செய்வதற்கு உரிய ராஜதானியாய், நிலமகள் திருமுகத்திலிட்ட திலகம்போல் விளங்கிய திருவாரூர் என்ற நகரத்தில்....”

ஊரன் அடிகள் எழுதிய இராமலிங்க அடிகள் வரலாறு பக் 99

மனுமுறைகண்டவாசகம் 1910 பதிப்பில் முதல் பக்கத்திலேயே இந்த வர்ணணை துவங்கிவிடுகிறது

அக் 23

Said so MKG

Let us not deceive ourselves into the belief that everything that is written in Sanskrit and printed is Shastra and has a binding effect upon us. That which is opposed to the fundamental maxims of morality, that which is opposed to the trained reason, cannot be claimed as Shastra no matter how ancient it may be.

8th oct 1927 at Nagerkoil

அக் 22 2023

## திராவிடம்

பல்வேறு தரப்புகளை அறிந்து தெளிதல் ( many ness of reality) என்பது பகுத்தறிவிற்குரிய தன்மைதான் என்றால் ஏ என் சட்டநாதன் அவர்கள் ஆற்றிய மதராஸ் பல்கலைக் கழக 1981 உரைகளை எவரும் தள்ளாமல் பொருட்படுத்தி வாசிக்கவே செய்வர்.

சட்டநாதன் உரைகளை 1982ல் மதராஸ் பல்கலை , The Dravidian Movement in TamilNadu and it's Legacies எனக்கொணர்ந்தது. அளந்த வார்த்தைகளுடன், மிகவும் objective ஆக பேசப்பட்ட கன கச்சிதமான ஆய்வுரையாக அதைக்கொள்ளலாம். சட்டநாதன் அவர்கள் ஆற்றிய உரையின் தமிழ் மொழிபெயர்ப்பும், அதன் முக்கியத்துவம் கருதி 1984ல் மதராஸ் பல்கலைக் கழகத்தால் கொணரப்பட்டது. பெரியார் அறக்கட்டளை சார்பில் சொற்பொழிவு மேற்கொள்ளப்பட்டது.

திராவிட இயக்கம் அரசியல் சக்தியாக வளர்ந்ததின் பின்னணி, அதன் பல்வேறு அரசியல் கட்டங்கள், அரசியலில் சாதியம் செலுத்தும் தாக்கம் என்கிற மூன்று உரைகளின் தொகுப்புதான் அளவில் சிறிய ஆனால் அடர்த்தி நிறைந்த இந்த புத்தகம்.

மகராஷ்ட் ராவில் ஏற்பட்ட பிராமண எதிர்ப்பு பின்புலம், தமிழகத்தின் பின்புலம் பற்றி சட்டநாதன் பேசுகிறார். முதல் தலைப்பே இப்படித்தான் ஆரம்பிக்கப்பட்டிருக்கும்- இயக்கத்தின் தொடக்கம் திராவிடத்திலிருந்தா? அவர் பதிலில்..

பார்ப்பனர்களுக்கு எதிரான, பார்ப்பனர் அல்லாத பிற சாதியினரின் இயக்கம் என்றால், ஆரியர் குடியேறிய நாள் முதலே ஏதாவது வடிவில் இருந்திருக்கலாம். பௌத்தமும் சமணமும் கூட பார்ப்பனர் எதிர்ப்பு இயக்கங்கள் என கூறப்படலாம். ஆனால் இவை எவ்வகையிலும் திராவிட இயக்கங்கள் அல்ல.

வடபுலத்து ஆரியப் பார்ப்பனர் முழுமையான சாதிய அமைப்புடன் ஒட்டுமொத்தமாக தென்னிந்தியாவில் குடியேறவில்லை. மாறாக, வருணாசிரம அமைப்பை, சாதியப் பண்பாட்டினை மறைமுகமாக அறிமுகப்படுத்தினர்…இந்த

பண்பாட்டு தழுவலை எதிர்த்து முற்கால தமிழர்கள் போராட்டமோ புரட்சியோ மேற்கொண்டதற்கு எச்சான்றும் இல்லை.

திராவிட இயக்கம் என்னும் பெயரில் அமைந்த பார்ப்பன எதிர்ப்பு / பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் ஆங்கிலேயர் ஆட்சியில் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தலையெடுத்த ஒரு புது அற்புதமாகும்…புது நெறியாகும்.

ருடால்ப் அவர்களின் ஆய்வை மேற்கோள்காட்டி, சட்டநாதன் தென்னிந்தியாவில் தோன்றிய திராவிட இயக்கம் வட இந்தியாவில் தோன்றாதது குறித்து விளக்குகிறார். அங்கு சத்திரியர், வைஸ்யர் போன்றவர்களும் இரு பிறப்பாளராக கருதிக்கொண்டனர். அங்கு உடை, பேச்சு என்பதில் பிராமணர் என தனி மாற்றம் இல்லாமல் இருந்தது.

பார்ப்பனியம் ஆழமாக இருந்த கேரளத்தில் எதிராக திராவிட இயக்கம் எழவில்லை. டாக்டர் நாயரும் சொந்த அனுபவத்தில் தமிழகப் பகுதியில் இயக்கத்தை தீவிரப்படுத்தினார். நீதிக்கட்சியின் பிறப்பு அதன் பிராமணர் அல்லாதார் கொள்கை அறிக்கை , இங்கு 'சூத்திரர்' ஆட்சிக்கு அடிப்படையை அமைத்துக்கொடுத்தது.

அவ்வியக்கத்தின் முக்கிய மூன்று படிநிலைகள்- 1916-26 நீதிக்கட்சி காலம், 1926-49 பெரியார் தலைமையில் திராவிட சார்பு எழுந்த காலம், 1949 அண்ணா பிரிந்து திமுக உருவாக்கி ஆட்சிக்கு வந்த காலம். பார்ப்பனர் எதிர்ப்பு அல்லது திராவிட இயக்கம் சமூக அரசியல் எதிர்ப்பு இயக்கம் என்ற நிலை 1949ஆம் ஆண்டில் மங்கலாயிற்று.

நீதிக்கட்சி ஆரம்பத்தில் ஆங்கிலேயர்களால் வழிநடத்தப்படும் தன்னாட்சி என்று கோரினர். இயக்கமும் தென்னிந்தியர் விடுதலை கழகம் என்றே பெயரிடப்பட்டது. திராவிடர் விடுதலை எனப்பெயர் இடப்படவில்லை. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் முக்கியமாக பேசப்பட்டது. சவுத்பரோ குழு, மெஸ்டன் அவார்ட் என்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பம்பாயில் பிராமணர் அல்லாத இயக்க அனுபவங்களைக்கொண்ட கவர்னர் வெலிங்டன் மதராஸ் வந்து உதவிகரமாக நடந்துகொண்டார்..

1920, 23,26 தேர்தல்களில் 51,61,56 பெரும்பான்மை இடங்களை பிராமணர் அல்லாதார் நீதிக்கட்சி சார்பில் பெற்றனர்.

பெரியாரின் நுழைவு பிராமணர் அல்லாதார் இயக்கத்தை திராவிடர் இயக்கமாக அடையாளமாக்கியது. திராவிடர் நாடு கோரிக்கை உருவாக்கப்பட்டது. கிரிப்ஸ் தூதுக்குழுவிடமும் திராவிட நாடு வைக்கப்பட்டது. ஜின்னாவின் two nation theory யை பெரியார் three nation theory ஆக மாற்றினார் எனச் சொல்லலாம். பிராமணர் அல்லாதார் என்பதைவிட 'திராவிடர்' என்பது இனப்பற்று மொழிப்பற்றை தூக்கிக்காட்டியது.

பெரியாரின் சமூக குறிக்கோளே அண்ணாவின் திமுகவிடமும் இருந்தாலும் , அரசியலில் தேர்தல் பங்கேற்பு என முடிவெடுத்து முன்னேறியது. ஆட்சி பிடித்து அண்ணா முதல்வரும் ஆனார். இந்த மாற்றம் சூத்திரர்களில் தாழ்ந்த வகுப்பாரிடமும், தாழ்த்தப்பட்ட வகுப்பாரிடமும் எவ்வளவு விரைவாக செல்லும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

சட்டநாதன் அவர்களின் அடுத்த முக்கிய உரை தமிழக அரசியலில் சில முக்கிய சாதிகளின் செல்வாக்கு பற்றியதாக இருக்கிறது. பெரிய சிறிய சாதிகள் எப்படி பங்கிட்டுக்கொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளது என்பதை விரிவாக சட்டநாதன் பேசுகிறார். 40 ஆண்டுகளுக்கு முந்திய ஆய்வாக இருந்தாலும், இன்றும் அவர் சொல்லிய நிலைதான் எதார்த்தமாக இருக்கிறது. வன்னியர், கொங்கு வேளாளர், கள்ளர்- மறவர்- அகமுடையார், நாடார், யாதவர் கம்மாளர் உள்ளிட்ட சாதி தொகுப்புகள் செல்வாக்கு எப்படி உள்ளது எனப் பேசுகிறார்.

அரசியலில் செல்வாக்கு மிக்க குழுவாக தீவிரமாக செயல்படுவது ஆதிக்கச் சாதியினருக்கு எளிதாயிருக்கிறது. எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் அவர்கள் செல்வாக்கை நடைமுறையில் செயல்படுத்தி வருகின்றனர். சமமற்ற நலம் பெறுவோர் என்பது எதார்த்தமாகியுள்ளது. பிற்பட்டோரில் சில சாதியினர் மட்டுமே கல்வி, அரசுப்பணிகளில் 60 விழுக்காட்டிற்கு மேல் பெற்றுள்ளனர். சில பிற்பட்ட சாதிகள் பின் தங்கியுள்ளன. மேல் தட்டில் உள்ளவர்களை நீக்குதல் என்பது வரவில்லை.

இப்படித்தான் சட்டநாதன் தன் உரையை முடித்துள்ளார்

தாழ்த்தப்பட்டோர் இயக்கம் பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்திலிருந்து தன்மானக் கருத்துக்களையும், தொழிலாளர் இயக்கத்திலிருந்து அரசியல் சமூக உரிமைகளை எல்லோரும் சமமாக பெறவேண்டும் என்பதையும் எடுத்துக்கொண்டுள்ளனர். அவர்கள் நீண்ட நாட்களுக்கு பொறுத்துக்கொண்டிருக்க மாட்டார்கள். அரசியல் சமுதாய கட்டமைப்பு காக்கப்பட, மய்ய மாநில அரசுகள் , இந்து சமூகம் - தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு உரிய இடத்தை அளித்துப் போற்ற வேண்டும்

சமூக நீதி அப்பக்கம் பயணிக்குமா?

அக் 21 2023

## சுசிலா நாயரின் மகாத்மா

பியாரிலாலைத் தொடர்ந்து அவரது சகோதரி சுசிலா எழுதிய காந்தியின் பல்தொகுப்பின் 6வது வால்யூமிற்கு Salt Satyagraha The Watershed எனத்தலைப்பிட்டுள்ளார். சுசிலா இதை சரிபார்த்து அச்சிற்கு அனுப்பும் வேலையை 1992 ல் முடித்திருக்கலாம்.

சுசிலாவும் அவரது அலுவலக ஆய்வு நண்பர்களும் வழக்கம்போல பெரும் உழைப்பை நல்கியுள்ளனர். Indian Council of Social Science Research மற்றும் நவஜீவன் உதவியின்றி இந்த ஆக்கம் 1995 அக்டோபரில் வந்திருக்காது. முதல் பதிப்பு 1000 காப்பிகள் என்பதற்கு பின்னர் இந்த ஆக்கம் மீண்டும் பதிப்பைக் காணவில்லைபோல் தெரிகிறது. 1925 பிற்காலத்திலிருந்து 1932 ஆரம்பம்வரை- உப்பு சத்தியாகிரகம், இர்வின் உடன்பாடு - கராச்சி மாநாடு- வட்டமேஜை மாநாடு போன்ற முக்கிய வரலாற்று நிகழ்வுகளின் வழி பயணமாகும் இந்த ஆக்கம் 1000த்தை தாண்டிய பதிப்பை இந்நாள் வரை பெறவில்லை என்றால், அது பெரும் துக்கமான ஒன்றேயாகும்.

இதற்கு திரு G இராமச்சந்திரன் மிகச்சுருக்கமான முகப்புரை எழுதியுள்ளார். அதில் ஒரு பாரா மகாதேவ தேசாய் பியாரிலால் குறித்து எழுதப்பட்டுள்ளது. அந்த வரிகள் ..

Gandhiji had two intimate personal secretaries. They were Mahadeva Desai and Pyarelal. No two people were more different and yet so utterly united in their devotion to Gandhiji. Mahadeva Desai was a forthcoming personality. Pyarelal, on the contrary, was a withdrawing personality. But both were scholars given to deep study of subjects dear to the heart of their master. Gandhiji trusted them both implicitly and entrust matters of importance for them to do. A comparison of the two secretaries will yield profound knowledge of not only themselves but of Gandhiji and his circle. The secretaries came to know almost every person of consequence in the Gandhian Revolution. I have a feeling that they knew all the great men in India of the time…

If you met Pyarelal you would know at once here was a scholar and thinker at the highest level. Pyarelal's great volumes of Gandhiji's biography will for all time give him a place among the great biographers in any country or language..

சுசீலா அவர்கள் நீண்ட அறிமுகவுரையில் இந்த 6 வது தொகுப்பில் இடம் பெற்றுள்ள நிகழ்வுகளை தொட்டுக்காட்டியிருக்கிறார். காந்தியின் 100 collected volumes 28லிருந்து 48 வரையிலான 21 பெரும் தொகுப்புகளின் சாரத்தை இதில் கொண்டுவர தங்கள் ஆய்வு குழாம் உழைத்ததாக சுசிலா சொல்லியுள்ளார்.

இந்த அறிமுகவுரையில் சமயம் -அரசியல் -பொருளாதாரத்தின் ஊடாட்ட உறவை காந்தி எப்படிக் குறிப்பிட்டார் என சுசிலா எழுதியுள்ளார்.

I believe from its very nature religion embraces economic, political and other problems. Religion which is opposed to true economics is no religion, nor that which is opposed to true politics. Economics devoid of religion should be shunned and political power uninformed with the spirit of religion is satanic..

I look upon untouchability as an excrescence of Hinduism, it did not protect religion but suffocates it...

இப்படி ஏராள வாழ்க்கை குறித்த தெறிப்புகளுடன் இந்த வால்யூமை சுசிலா தனது பெரும் உழைப்பால் தந்துவிட்டு சென்றுள்ளார். அவர்களின் உழைப்பின் வழியாக காந்தியின்- விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு தருணங்களை நாம் உணர்ந்து உள்வாங்கிக்கொள்ள முடியும்.. பெருந்தொண்டு போற்றுவோமாக!

அக் 20   2023

## காந்தி ஜின்னா அம்பேத்கர்

Tale of Three Lawyers  எனும் ஒப்பீட்டு ஆய்வு நூலை N C Beohar எழுதியுள்ளார். நோஷன் பிரஸ் சென்னை 2020ல் இதை வெளியிட்டுள்ளது. பியோஹர் மத்தியபிரதேச உயர்நீதிமன்ற வழக்கறிஞர். வக்கீல் தொழிலில் பெரும் பங்களித்த முகம் தெரியாத அனைவருக்கும் இப்புத்தகத்தை ஆசிரியர் சமர்ப்பணம் செய்துள்ளார். அவர் காந்தி மற்றும் கஸ்தூரிபா குறித்தும் தனி புத்தகங்களை எழுதியுள்ளார்.

'மூன்று வக்கீல்களின் கதை' புத்தகம் கையில் வந்தும் படிக்கப்படாமல் இருந்தது. இரு மாதங்களுக்கு முன்னர் படித்திருந்தும் அது குறித்து அறிமுகத்தை உடன் எழுதமுடியவில்லை. ஆனால் எழுதவேண்டும் என உள்ளம் பேசிக்கொண்டிருந்தது - தற்போது கைகூடியுள்ளது.

மூன்று வரலாற்று புருஷர்கள் இதில் ஒப்பீட்டிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். மூவரும் வக்கீல் பட்டம் பெற்றவர்கள். மகாத்மா காந்தி - காய்தே ஆசம் முகமது அலி ஜின்னா- பாரத் ரத்னா டாக்டர் அம்பேத்கர் ஆகிய மூவர் குறித்த விவாதம்தான் இப்புத்தகம். அறிமுகப்பகுதி தவிர புத்தகம் 4 பகுதிகளாகச் செல்கிறது. முன்னுரையில் ஆசிரியர் த்ரும் ஒரு பாரா மனங்கொள்ளத்தக்கது.

Today's opposition can be in the governmental responsibility tomorrow  and the 'government of the day' can sit in the opposition tomorrow. seats can alternate every now and then. But narrow selfish vested interests remain trasfixed. This vicious circle continues unabetted. The common voters suffers perpetually...

மதம் என்பதின் அர்த்தம் என்ன என்பதை இந்த மூவரும் புரிந்து எவ்வாறு அணுகினர் என்பதும் முன்னுரையில் தொட்டுக்காட்டப்பட்டிருக்கிறது.

ஆசிரியரின் அறிமுக உரையிலும் சுதந்திரப்போராட்டத்தில் மதத்தின் பங்கு என்பது பேசப்படுகிறது. what crimes have not been committed in the world in the sacred name of Religion என்ற காந்தியின் பொருத்தமான மதிப்பிடல் இதில் இடம் பெறுகிறது. எம் சி

சாக்ளா பேசிய தேசபக்தி மதபக்தி வித்தியாசம் ஆசிரியரால் எடுத்தாளப்பட்டிருக்கிறது.

We can see three front leaders of three different sections of human community pulling their drives in three different directions but during one period of history என ஆசிரியர் முக்கிய புள்ளி ஒன்றை தன் நூலில் எட்டுகிறார். காந்தியை உலக மானுடராகவும் குறைந்தபட்சம் இந்தியராகவும் எந்த செக்ஷனிலும் அடைபடாதவராக பார்க்கப்புரிந்தவர்களுக்கு இவ்வரிகள் நெருடலைத்தரும். ஆனால் காந்தியை ஜின்னா இந்து தலைவர் என்றே விமர்சித்துவந்தார். அம்பேத்கருக்கும் காந்தி மீது கடும் விமர்சனம் இருந்தது. அனைத்து சாலைகளும் ரோம் நோக்கியே என்பதைப்போல இங்கு விடுதலைக்கான போராட்ட இந்தியாவில் அனைத்து விமர்சனங்களும் காந்தி நோக்கியே என்பதே தொழிற்பட்டன.

முதல் பகுதி காந்திக்கு. அதில் அவரின் தென்னாப்பிரிக்கா- இந்தியா அனுபவங்கள் விவாதிக்கப்படுகின்றன. குறிப்பாக காந்தி- ஜின்னா பேச்சுவார்த்தை விவாதிக்கப்படுகிறது. நாடு பிரிவினைத் துயர் காந்தியை எப்படி துன்புறுத்தியது என்பதும் பேசப்படுகிறது. அவரைப் பற்றிய மதிப்பீடு என ஓர் அத்தியாயமும், காந்தியம் பொருந்தக்கூடியதுதானா என்கிற மிகச்சிறிய பகுதியும் அதில் இடம் பெற்றுள்ளன.

இரண்டாம் பகுதி ஜின்னா குறித்தது. ஆரம்பகால தேசியத்தலைவராக ஜின்னா, பாகிஸ்தான் விதை, இரு தேச கொள்கை, அடைந்தால் பாகிஸ்தான் - பிரிவினை இப்பகுதியில் விவாதிக்கப்படுகின்றன. மூன்றாம் பகுதி அம்பேத்கருடையது. அவரின் ஞானத்தேடல், விரிவான படிப்பறிவு, வட்டமேசை பங்களிப்பு, சாதியை ஒழிக்க வழி, காந்தி- காங்கிரஸ்- இந்து மத விமர்சனங்கள், மதமாற்றம், இட ஒதுக்கீடு போன்றவைகளுடன், மிகக்குறைந்த 5 பக்க அளவில் அம்பேத்கர் சுதந்திர போராட்டத்தில் நின்றாரா என்பதும் விவதிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் இதில் மிக எச்சரிக்கை உணர்வுடன் ஆம் இல்லை எனும்படியான இரு விக்கி பீடியா பதிவுகளை தந்துவிட்டு செல்கிறார்.

இறுதிப்பகுதி 4ல் மூவரும் எந்த மாதிரியான மரபுகளை தந்து சென்றுள்ளனர் என்பது சிறிய அளவில் பேசப்பட்டுள்ளது. இந்திய விடுதலைக்கால வரலாற்று புருஷர்கள் என்கிற வகையில் மூவரையும் குறித்து ஓரளவு தெரிந்துகொள்ள

இப்புத்தகம் பயன்படும். விரிவான தனித்த ஆய்வுகள் இவர்கள் குறித்து ஏராளம் உள்ளன. அவற்றை பார்த்தவர்களுக்கு இப்புத்தகத்தால் பெருமளவு பயன் இல்லாமல் போகலாம்.

அக் 20 2023

## ராஜாஜி.. இந்தி

ராஜாஜி 1937, 1952 என இரு முறை முதல்வராக இருந்தபோதும் முக்கிய முரண்களில் சிக்கிக்கொண்டார். 1937ல் கட்டாய இந்திப்பாடம் ( 6-8 வகுப்புகளில்), 1952ல் திருத்தப்பட்ட கல்வித் திட்டம் ( குலக்கல்வி) .

இந்த இரண்டும் குறித்து அரசாங்க ஆவணங்கள், சட்டமன்ற குறிப்புகள், வெளிவந்த பத்திரிகை செய்திகள், கூட்டங்களில் பேசப்பட்ட உரைகள், அதிகாரிகளின் வினைகள்- தனி உரையாடல்களில் பேசப்பட்டவை என அனைத்தும் பாரபட்சமில்லாமல் இணைத்து ஆவணமாக்கப்பட்டு வந்த ஆய்வு புத்தகங்கள் மிகக் குறைவாகவே இருக்கின்றன.

தமிழக பொது புத்தியில் ராஜாஜி குறித்து விமர்சனங்களை இன்றும் பெருமளவு எடுத்துச் செல்லும் வாகனங்களாக இந்த இரண்டு பிரச்சனைகளும் இருக்கின்றன. பலநேரங்களில் அவர் மீது உள்நோக்கம் கற்பித்து வசைபாடும் , சாதி இழுத்து அவதூறு செய்யும் எழுத்துக்களாகவும் ( உச்சிக்குடுமி ராஜ்யம்) அவை மிகுந்து போகின்றன.

டாக்டர் இ சா விஸ்வநாதன் அவர்கள் எழுதிய ராமசாமி நாயக்கர் (பெரியார்) அரசியல் வரலாற்று நூலில் 1938 இந்தி எதிர்ப்பு எழுச்சியை எவரெல்லாம் முன் நின்று நடத்தினார்கள் என்ற ஆய்வு அவர் திரட்டிய அளவில் ஆதாரங்களுடன் தரப்பட்டுள்ளது. இதில் பலர் தமிழக பொது புத்திக்கு போய் சேரவேயில்லை என்பதை, விஸ்வநாதன் தரும் ஆதாரங்களை படிப்பவர் உணரமுடியும்.

நெல்லையிலிருந்து எழுச்சி கிளம்பியதையும் காண்கிறோம். ஓய்வுபெற்ற தாசில்தார் நெல்லையப்ப பிள்ளை, கந்தசாமி முதலியார், திருவரங்கம் பிள்ளை தமிழ் பாதுகாப்பு அமைப்பை ஏற்படுத்தி இந்தி எதிர்ப்பைக்காட்டினர். இவர்கள் ராஜாஜிக்கு இந்தியின் போதாமையை, தமிழின் மேன்மை மற்றும் அவசியத்தை சுட்டிக்காட்டிய 'வெளிப்படைக்கடிதம்' எழுதினர்.

விஸ்வநாதன் தன் ஆய்வில் இந்தி எதிர்ப்பு போராட்டத்தின் தந்தையர் என சோமசுந்தரபாரதி, ஈழத்து சிவானந்த அடிகள், காஞ்சி சாது

ராஜகோபாலாச்சாரியார் ஆகியோரைக் குறிப்பிடுகிறார். திருச்சியில் டிசம்பர் 26, 1937ல் ஆயிரக்கணக்கானவர்களைக் கூட்டி இந்தி எதிர்ப்பு மாநாட்டை இவர்கள் நடத்தினர். இதில் தமிழ் அறிஞர்கள் பற்றாளர்கள் தவிர, முக்கிய பிரமுகர்களாக முத்தையா முதலியார், நீதிக்கட்சி பன்னீர்செல்வம், பெரியார், கருமுத்து தியாகராஜ செட்டியார் கலந்துகொண்டனர். மறைமலையடிகள் பங்களிப்பு பற்றிய செய்தி இதில் இல்லை

கவர்னரை சந்திக்கவென சோமசுந்தர பாரதி, ராமசாமி நாயக்கர், கரந்தை உமாமகேஸ்வரம் பிள்ளை கொண்ட கமிட்டி போடப்பட்டது. இவர்கள் சந்தித்தார்களா என்கிற விவரம் கிடைக்கவில்லை..

தமிழ் பாதுகாப்பு இயக்கங்கள் மாவட்டந்தோறும் உருவாக்கப்பட்டன. இதில் கதிரேசன் செட்டியார், சுப்பிரமணிய பிள்ளை போன்ற அறிஞர்களும் பங்காற்றினர். சோமசுந்தரபாரதியின் தலைமை பொதுவாக ஏற்கப்பட்டிருந்தது.

சுயமரியாதை இயக்க ஸ்டாலின் ஜகதீசன் மே 1938ல் கட்டாய இந்திக்கு எதிராக பட்டினிப்போர் மேற்கொண்டார். மதுரைப்பகுதிகளில் சௌந்திரபாண்டிய நாடார் போராட்டம் தீவிரமாக நடத்தப்பட துணை நின்றார். பெரியார் குடி அரசில் எழுச்சி உருவாக்க எழுதி வந்தார். கூட்டங்களில் பங்கேற்று உற்சாகப்படுத்தினார்.

மதராஸ் மாகாண பிரதமர் ராஜாஜி வீட்டு முன் மறியல் இயக்கத்தை சி டி நாயகம் ஜூனில் துவங்கினார். காவி அடிகள் அருணகிரி அடிகள், சண்முக அடிகள், ஈழத்து அடிகள், விமலானந்த அடிகள் மறியல் களத்தில் நின்றனர். ஜூன் 3 அன்று கோடம்பாக்கத்திலிருந்து தி.நகர் பிரதமர் இல்லம் நோக்கி ஆயிரம்பேர் பேரணி சென்றது. நாயகம், சண்முக அடிகள், பல்லடம் பொன்னுசாமி மீது போலீசார் வழக்குபோட்டனர். முதல் இருவரும் பிணையில் பணம் கட்டியும், இனி கலந்துகொள்ளமாட்டோம் என எழுதிக்கொடுத்தும் வெளிவந்தனர். பொன்னுசாமி உறுதியாக நின்று தண்டனை பெற்றார்.

இது போன்ற பொதுவாக அதிகம் சொல்லப்படாத சிறு சிறு தகவல்களை விஸ்வநாதன் சேகரித்து இதில் கொடுத்துள்ளார். ராஜாஜி எடுத்த, அவர் சகாக்கள் எடுத்த நிலைப்பாடுகளும் இதில் சொல்லப்பட்டுள்ளன.

6, 7,8 வகுப்புகளுக்கு வாரம் இரண்டே கால் மணி நேரம் இந்தி பாடம் சொல்லித்தரப்படும் என அரசாங்கம் அறிவித்தது. ஆனால் Compulsory attendance என்றனர். அது பிரச்சனையானது. இந்தியில் 'பாஸ்' தேவையில்லை என அரசாங்கம் சொன்னதை போராட்டக்காரர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

பொப்பிலி ராஜா நீதிக்கட்சி அரசாங்கத்தை ஆண்டவர் என்ற அனுபவத்தில் சமரச திட்டம் சொன்னதை ராஜாஜி கேட்காமல் சற்று அலட்சியம் செய்துவிட்டார் என்றே எனக்குத் தோன்றுகிறது. பொப்பிலி compulsory என்பதை optional என மாற்றுங்கள் என்றார். போராட்டக்காரர்களையும் அமைதி வழியில் போராடுங்கள் என அவர் வலியுறுத்தியிருந்தார்.

'இந்துஸ்தானி' என்பது காங்கிரஸ் கொள்கை- அதை அமுல்படுத்தாமல் இருக்க முடியாது. தமிழர்களுக்கு இதனால் அரசியல் பலன் உண்டு என ராஜாஜி பேசி வந்தார். மதராஸ் கிறிஸ்டியன் கல்லூரியில் ராஜாஜி பேசியதில் காணப்படும் சில வரிகள்

'We shall find ourselves handicapped and unable to take part in the federated India of the times to come, and we will be at great disadvantage in every way if we do not know Hindi. It will affect our bread, our taxation and budgets, and many things will be done over our heads if we are not able to understand Hindustani' .

அப்போது கல்வி அமைச்சராக இருந்த சுப்பராயன் இந்தியை வாரம் சில மணி நேரம் படிப்பதால், தமிழுக்கு எந்த இடையூறும் வராது- தமிழ்வழியில் தான் மற்ற பாடங்கள் நடத்தப்படும் என அறிவித்தார். எடுபடவில்லை.

அரசாங்கம் நீண்ட விளக்கத்தை கொடுத்தது. நமது மாகாணத்தின் நன்மைக்காகவே இந்த சோதனை, ஆரம்ப பள்ளிகளில் முழுமையாக தமிழ்தான், 6-8 மூன்று வகுப்புகளில் மட்டும் வாரம் இரண்டே கால் மணி நேரம் இந்தி, இந்திக்கு பரிட்சை கிடையாது, உயர் வகுப்புகளிலும் இந்தி கிடையாது. மாணவர் இந்தி வகுப்பு வருகை என்பது மட்டுமே கட்டாயம் எனச் சொல்கிறோம் என்றெல்லாம் கொடுக்கப்பட்ட விளக்கம் ஏற்கப்படவில்லை. போராட்டம் தீவிரமாகி, ராஜாஜிக்கு மரியாதை குறைந்தது தான் மிச்சம்.

காலங்கள் மாறும்போது காட்சிகள் மாறும் என்பார்கள். 1960 களில் நடந்த இந்தி எதிர்ப்பு போராட்டங்களுக்கு ராஜாஜி ஆதரவாக நின்றார். இந்தி திணிப்பை ஏற்க

முடியாது என்றார். பெரியார் எங்கே திணிப்பு- போராடுபவர்களை சுட்டுத்தள்ளாமல் என்ன அரசாங்கம் என்ற நிலைப்பாட்டை திமுக எதிர்ப்பில் அப்போது மேற்கொண்டதை பார்க்க முடியும்.

ராஜாஜியின் 1952 ஆட்சியின் கல்வித்திட்டம் குலக்கல்வி என்கிற எதிர்ப்பை தீவிரமாகக் கண்டது. இது குறித்து விரிவான புத்தகம் ஒன்றை மறைந்த ஆய்வாளர் வீரராகவன் ஆங்கிலத்தில் எழுத அதை Leftword கொணர்ந்தது. பின்னர் ஆய்வாளர் வெங்கடாசலபதி பதிப்பு அறிமுகத்துடன் வீரராகவன் புத்தகம் தமிழிலும் வந்தது. வாய்ப்பு கிடைக்கும்போது அதில் இடம் பெற்ற செய்திகளைக் காணலாம்…

குலக்கல்வி யாரால் எப்படி ஒழிந்தது என்பது குறித்து பெரியார் திராவிடர் கழகமும் நூல் ஒன்றை கொணர்ந்துள்ளது. அதை நான் இன்னும் பார்க்கவில்லை.

**அக் 19 2023**

அருட்பா பற்றி கி ஆ பெ விசுவநாதம்

தமிழகத்தில் நான்கு நூல்களுக்குத் தனித்தனியான சிறப்புகள் உள்ளன. முதல் சிறப்பு பகவத் கீதைக்கு; அது மனிதன் கேட்க கடவுள் சொன்னது. இரண்டாவது சிறப்பு திருவாசகத்திற்கு; இது கடவுள் கேட்க மனிதன் சொன்னது, மூன்றாவது சிறப்பு திருக்குறளுக்கு; அது மனிதன் கேட்க மனிதன் சொன்னது. நான்காவது சிறப்பு அருட்பாவிற்கு. இது மனிதரிலும் அருளாளர்கள் கேட்க அருளாளன் சொன்னது

1980 ஜனவரி 9,10 சென்னை பல்கலைக் கழக சொற்பொழிவில்

அக் 18 2023

## மார்க்ஸ் எங்கெல்ஸ் லெனின்..

மார்க்ஸ் எங்கெல்ஸ் போன்ற மூத்தவர்கள் தங்கள் கால முதலாளித்துவ உற்பத்தி முறை அதன் உற்பத்தி உறவுகளில் நிலவும் கொடுமையான சுரண்டல் குறித்து பெரும் ஆய்வு உழைப்பை தந்தனர்.

முதலாளித்துவ சுரண்டல் முறை ஒழிக்கப்படவேண்டும். மாற்றான சோசலிச சமூகம் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்துடன் தொடங்கி, வர்க்கமில்லாத , முதலாளி மட்டுமில்லை- பாட்டாளிகளும் இல்லாத கம்யூனிச சமூகம் நோக்கி நடைபோடவேண்டும் என விரும்பி தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர். அப்படி பின்னொரு காலத்தில் உருவாகும் அந்த கம்யூனிச சமூகத்தில் அரசு என்பதும் உதிர்ந்துவிடும் என நம்பினர். இந்த இடைக்காலத்தில் அரசுவாதம் பேசுகிறார் மார்க்ஸ் என்றுதான் அவரை எதிர்த்து அனார்க்கிஸ்டான பகுனின் போன்றவர் போராடினர்.

மார்க்ஸ் எங்கெல்ஸ் இப்படியெல்லாம் கருத்துக்களை முன்வைத்தபோது, தங்கள் கருத்துக்கள் அறிவியல் பார்வையுடன் செல்லவேண்டுமே தவிர ஆசைகளின் வெளிப்பாடாக, கனவுகளின் நகர உடோபியாவாக இருந்துவிடக்கூடாது எனவும் தங்களை கட்டுப்படுத்திக்கொண்டனர். அமையப்போகும் சோசலிச சமூகம் குறித்து விரிவாக பேசாமல் தங்களை கட்டுப்படுத்திக்கொண்டனர்.

லெனினுக்கு நடைமுறை சார்ந்த பிரச்சனை எழுந்தது. அவருக்கு 1917 அக்டோபரில் சோசலிச புரட்சி கைகூடும் என்கிற வலுவான எண்ணம் இருந்தது. தன் தோழர்களுக்கு அதற்கான நம்பிக்கையை தரவேண்டிய தீவிரம் அவரிடம் தொழிற்படவேண்டியிருந்தது. அவர் அரசும் புரட்சியும் எழுதினார். அதே நேரத்தில் ஒருவேளை புரட்சித்திட்டம் கைகூடினால் அமையப்போகும் தங்களின் பாட்டாளி வர்க்க சர்வாதிகார ஆட்சி என்ற பெயரில் போல்ஷ்விக்குகள் கட்சியினர் ஆட்சி பழுதில்லாமல் அமையுமா என்கிற சந்தேகமும் மிக நேர்மையாக அவரிடம் எழுந்திருக்க வேண்டும். அவர் மார்க்ஸின் இந்த வரிகளை துணைக்கு அழைத்து குறைகளுடனேயே அந்த ஆட்சி துவங்கும். உரிமைகள் என அதிகம் எடுத்துக்கொள்ளமுடியாது என தன் தோழர்களுக்கு புரிய வைக்க முயற்சித்தார்.

..defects are inevitable in the first phase of Communist society as it is when it has just emerged, after prolonged birth pangs, from capitalist society. Right can never be higher than the economic structure of society and its cultural development which this determines"

அதேபோல் சோசலிச கோட்பாடாக இந்த வரிகளை லெனின் தந்திருப்பார்

He who does not work, neither shall he eat- An equal amount of products for an equal amount of labour

மேலும் மக்களின் இந்த எதார்த்த எதிர்பார்ப்பையும் லெனின் வைக்கிறார்

If we are not to indulge in Utopianism, we must not think that having over thrown capitalism people will at once learn to work for society without any standard of right

ஆனால் புரட்சிக்குப் பின்னர் அங்கு அரசாங்கத்தை மேற்கொண்ட போல்ஷ்விக் அமைச்சர்குழு, போல்ஷ்விக் கட்சியின் பொலிட்ப்யுரோ தான் மக்களின்/ தொழிலாளரின் உரிமை அளவையும் கடமையின் நீளத்தையும் முடிவுசெய்து அமுல்படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டது. தொடர்ந்து அச்சோதனை லெனின் மறைவிற்கு பின்னர் ஸ்டாலினால் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது.

இந்தியாவில் ஆட்சியாளர்கள் பெரும்பாலும் பிறர் கடமை உபதேசிகளாக இருப்பர். போராளிகள் தங்கள் உரிமை உபதேசிகளாக இருப்பர். இரண்டும் சந்திக்கும் புள்ளிகள் மிகக் குறைவாகவே அமையும். ஏற்படும் மாற்றம் குறிப்பிட்ட சூழலில் நேரும் பலப்பரிட்சையை பொறுத்து அமையும். உரிமைப் போராட்டங்கள் எல்லா நேரங்களிலும் தோற்பதில்லை. அவ்வப்போது பெரும் தியாக இழப்புகளுடன் வெற்றியும் பெரும்.

காந்திய வழியோ கடமையை முன்னிறுத்தி, அதன் வழி கிடைக்கும் உரிமைகளுடன் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளும் தன்மை கொண்டது. தொழிற்சங்க போராட்ட அனுபவத்தில் என் போன்றவர் உரிமைக்குரல் உயர்த்தல் வழிதான் பயணித்திருந்தோம். இயல்பாக கடமையுடன் பயணித்த தோழர்கள் இல்லாமல் போகவில்லை. இருந்தனர்.

முதலாளித்துவ சமூகமோ, கனவு காணும் சோசலிச சமூகமோ காந்திக்கு இருந்த acid test கடமையுடன் கூடிய உழைப்பின் மேன்மையை வற்புறுத்தும் bread labour முறை. ...எல்லோரும் உயர் சாதி கனவை விதைத்த நிலையில் அவர் அனைவரும் உழைக்கும் சாதியாகலாம் என சொல்லிவந்தார்.

அக் 18

**MK Gandhi said so**

Every formula of Religion has, in this age of reason, to submit to the acid test of reason and universal justice if it is to ask universal assent

YI 26th Feb 1925

அக் 17 2023

## காந்தியின் உரையாடல்கள்_

1924ல் காந்தி எவ்வளவு உரையாடல்களை பல தரப்போடு மேற்கொண்டுள்ளார் என்பதற்கான சில மாதிரிகள் இங்கு தரப்பட்டுள்ளன..

காந்தி பம்பாயில் புத்த ஜெயந்தி நிகழ்வொன்றில் மே 18, 1924ல் கலந்துகொண்டார். இந்து மதத்தின் திருத்தம் செய்யப்பட்ட முயற்சியாகவே புத்தத்தைப் பார்த்தார். இந்தியாவின் வீழ்ச்சி புத்தத்தால் எனப்பேசிவருவோர் கருத்துக்களை ஏற்கவியலாதென்றார். அன்பும், இரக்கமும் உலகை தாழச்செய்யுமா என்பது அவரது வினா. புத்தத்தை கடைபிடிக்காமல் விட்டதால் இந்தியா தாழ்ந்திருக்கலாம் என்றும் அவர் கருதினார். அவரின் சாரமான வரிகள்

To me Buddhism is part of Hinduism. Buddha did not give the world a new religion, he gave it a new interpretation. He taught Hinduism not to take but to give life. True sacrifice was not of others but of self..

It has become a fashion in some quarters nowadays to say that India's downfall dates from her acceptance of Buddha's teachings. It is tantamount to saying that love and piety, if sufficiently practised, will degrade the world. In other words, according to critics, evil should triumph in the end. It is my unalterable belief that India has fallen not because it accepted Gautama Buddha's teaching, but because it failed to live up to it. The priest has ever sacrificed the prophet.

இந்த மாதங்களில் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு ஓய்வில் இருந்த காந்தியுடன் விவாதிக்க சுயராஜ்ய பிரிவு தலைவர்கள் மோதிலால் மற்றும் சி ஆர் தாஸ் வந்தனர். உடன்பாடு ஏற்படவில்லை. அவரவர் சரி என்று நினைப்பதை ( காங்- சுயராஜ்ய கட்சி) அவரவர் இயக்கத்தின் மூலம் செய்வதே சரி. ஆக்கபூர்வ வேலைக்கு காங்கிரசில், சட்டமன்ற வேலைக்கு சுயராஜ்ய கட்சி என கூட்டணி வேலைமுறை சரியாக அமையாது என காந்தி கருதினார்.

இது பற்றி கேள்வி எழுப்பிய பத்திரிகையாளர்களிடம் மே 31, 1924ல் இந்த வரிகளை காந்தி வெளிப்படுத்தியிருந்தார்.

I do not believe in coalition government at any time, but certainly not when there are vital differences of opinion or, if you will, different mentalities, making for different and diametrically opposite courses of action

YI ஜூலை 3, 1924 ல் நேர்மையான வழிகளை மேற்கொண்டு, பலன்களில் கவனம் இல்லாமல் இருந்தாலே ஊழல் இருக்காது என்றார்

The best way of avoiding corruption is to be indifferent to the result after having adopted all honest measures for influencing voters

இந்த நாட்களில் காந்தி 'சுத்தி மற்றும் தப்ளிக்' என்கிற இரு இயக்கத்தாரின் போக்குகள் குறித்தும் உரையாடினார். இந்து முஸ்லிம் மோதல்களை அவர் கவலையுடன் பார்த்தார். ஆரிய சமாஜிகளின் பைபிளாக பார்க்கப்பட்ட தயானந்த சரஸ்வதி அவர்களின் சத்யார்த் பிரகாஷ் மிகவும் ஏமாற்றம் தந்த ஆக்கம் என காந்தி பேசியதால், ஆரிய சமாஜிகள் காந்தியை கடுமையாக விமர்சித்தனர். இந்து முஸ்லிம் இணக்கத்திற்காக காந்தி செப்- அக் 1924ல் 21 நாட்கள் உண்ணா நோன்பு மேற்கொண்டார். ஒற்றுமை மாநாடுகளை இந்து முஸ்லிம் சீக்கிய கிறிஸ்துவ தலைவர்கள் நடத்தி மத நல்லிணக்க தீர்மானங்களை உருவாக்கினர்.

அதே போல் இக்காலத்தில் எம் என் ராயுடன் போல்ஷ்விசம் பற்றிய உரையாடல் ஒன்றை காந்தி மேற்கொண்டார்.

ஆர்ய சமாஜிகள் மற்றும் முஸ்லீம்களில் சிலர் காந்தி மதம் எனப்பேசிக்கொண்டே போல்ஷ்விசம் கொணரப் பார்க்கிறார் என தாக்குதல் தந்தனர். அப்போது காந்தி சிலர் போல்ஷ்விசம்தான் விடுதலைக்கான சரியான வழி என்கின்றனர். வேறு சிலர் அது மிக மோசமானது என சித்தரிக்கின்றனர். எனக்கு அதன் அர்த்தம் தெரியாது என எழுதியிருந்தார். காந்தியின் வரிகள்

I did not know the meaning of it ( Bolshevism). Some people painted it in the blackest colours. Some others hailed it as deliverance for downtrodden masses. What was one to believe?

எம் என் ராய் அப்போது பெரும் மார்க்சிய ஆசானாக பார்க்கப்பட்டார். லெனினுடனேயே விவாதித்த ஆக்ரோஷ இளைஞனாயிற்றே? அவர் காந்தி பேசியதை எந்தவித இந்திய அனுபவமும் இல்லாமல் அப்படியே literary ஆக எடுத்துக்கொண்டு மார்க்ஸின் 'டெக்ஸ்ட்புக்' சோசலிச விளக்கங்களை, சோசலிசம் என்றால் என்ன , முதலாளித்துவத்தை தனியார் சொத்துரிமையை ஒழித்து வர்க்க பேதமில்லா சமுதாயம் அமைப்பது , போல்ஷ்விக்குகள் ஆட்சியில் கடவுள் மதம் எதிர்த்த போராட்டங்களும் உண்டு என அதன் எழுதப்பட்ட கோட்பாடுகளை விளக்கலானார்.

காந்தியோ உரையாடலின் பெரும் ஆளுமை. அவர் தனது பதிலை சொன்னார். எம் என் ராய் சொன்னதுதான் சரியான போல்ஷ்விசம் என்றால், பாவம் மோசமான விளக்கம் என்றார். எனக்கு மானுட கட்டுமானம் வேண்டும், அழிவு வேலையல்ல என்றார். பல்வேறு குறைகளுடன் இருக்கின்ற நாம், ஒவ்வொன்றையும் குறை எனச்சொல்லி அழிக்க ஆரம்பித்தால் எவர் மிஞ்சுவர். கும்பலாட்சி மிகமோசமானது. எம் என் ராய் சொன்னதைவிட போல்ஷ்விசம் மேலானதாக இருக்கும் என நம்புகிறேன் என காந்தி எழுதியதைக் காண்கிறோம். அவர் வரிகள்

If Roy's article is correct representation of Bolshevism, it is a poor thing...I believe in conversion of mankind, not its destruction..we are all imperfect and weak things and if we are to destroy all whose ways we do not like, there will be not a man left alive. Mobocracy is autocracy multiplied a million times. I hope, and I am almost sure, that real Bolshevism is much better than Mr M N Roy's

Inputs from Mahatma vol 5 India Awakened by Sushila

அக் 15 2023

**So wrote Gandhiji**

Although this is the age of democracy, I do not know what the word connotes; however, I would say that democracy exists where people's voice is heard, where the love of the people holds a place of prime importance.

In my Ramrajya public opinion cannot be measured by counting of heads or raising of hands. I would not regard this as public opinion...public opinion is the opinion of people who practise penance and who have good of the people at heart.

Democracy is not a state in which people act like sheep. Under democracy, individual liberty of opinion and action is jealously guarded

Swaraj of the people means the sum total of the self rule of individuals. And such Swaraj comes only from performance by individuals of their duty as citizens. In it, no one thinks of his rights. They come, when they are needed, for better performance of duty.

My goal is friendship with the whole world and I can combine the greatest love with the greatest opposition to wrong

- Living in Truth The Gandhian Paradigm by Ramin Jahanbegloo and Pooja Sharma

அக் 15 2023

பாவாணர்..

திரு தேவநேயப் பாவாணர் அவர்களின் தமிழ் இலக்கிய வரலாறு முற்றிலும் புதிய கோணத்தில் ஆய்வு செய்யப்பட்டு நமக்கு கிடைக்கும் நூல். இதற்கான முன்னுரையை பாவாணர் தந்து 50 ஆண்டுகள் முடியப்போகிறது. (30-11-1973ல் எழுதியுள்ளார்) . நூலுக்கான உழைப்பை அவர் முன்னரே செய்திருக்கவேண்டும். அவரை நன்கு அறிந்தவர்கள் சரியாகச் சொல்லவியலும்.

பூம்புகார் பதிப்பகம் 2006 முதல் இதன் பதிப்புகளைக் கொண்டு வந்துள்ளனர். 448 பக்கங்களைக்கொண்ட விரிவான , ஆழமான ஆய்வு உள்ளடக்கத்தைக்கொண்ட நூல். பாவாணர் வந்தடைந்த இடங்கள் பொதுபுத்திக்கு தமிழ் நாட்டில் அதிகம் எடுத்துச் செல்லப்படவில்லை என்ற எண்ணமே , அந்நூலை வாசிக்கும்போது ஏற்பட்டது. வாழ்நாட் செலவை தமிழ் வேர்ச்சொல் தேடலுக்காகவே செலவிட்ட பேரறிஞர் பாவாணர். அவர் கண்டடைந்த சில புள்ளிகளை இங்கு தருகிறேன்.

இலெமூரியாவினின்றும் அதன் மக்களின்றுமே மாந்தனின் இற்றை வகுப்பினங்கள் தோன்றியுள்ளன

தோராயமாக கிமு 50,000 தமிழன் பிறந்தகம் குமரிநாடே. திராவிட சொற்கட்கெல்லாம் பெரும்பாலும் மூலமும் முந்திய வடிவும் தமிழிலேயே உள்ளன

உணர்ச்சி ஒலிகள், விளியொலிகள், குறிப்பொலிகள், வாய்வினை ஒலிகள், குழவி வளர்ப்பொலிகள், சுட்டொலிகள் போன்றவையால் இயற்கைமொழியும்-முழைத்தல் மொழி ( inarticulate speech) வளர்ச்சியடைந்த பின்னர், பண்பட்ட மொழி ( cultivated language)- இழைத்தல் மொழி ( articulate language) தோன்றிற்று

குறிஞ்சி மக்கள் குறவர் வேட்டுவர், முல்லையில் ஆயர், இடையர், பொதுவர், தொழுவர், தொறுவர், கோவர், கோவலர்- மருதத்தில் உழவர், வெள்ளாளர், காராளர் இவர்களுக்கு துணையாக ஊரில், நெயவர், குயவர், தச்சர், வண்ணார், செக்கார் போன்ற 18 தொழிலாளரும் தோன்றினர். நெய்தலில் பரவர், முக்குவர்

என்பாரும், பாலையில் கள்ளர், மறவர், எயினர், வேட்டுவர் என வகுப்பார்களும் தோன்றினர்.

நிலவாணிகர் சாத்துவர், நீர்வாணிகர் நாவிகர் ( நாய்கர்) எனப்பெயர் பெற்றனர்.

வேளாளரில் சிலர் ஓய்வு நேரங்களில் கல்வியை வளர்த்தனர். மதவியற் கல்வியும் உருவானது. இல்லற சார்ந்த கற்றோர் நூல்களைப் பார்ப்பார் என்பதால் அவர்கள் பார்ப்பனர் என்றும், துறவறம் பூண்ட கற்றோர் அருள் பூண்டமையால் அந்தணர் என்றும் இருதிறத்தாராயினர். ( வேளாளரில் கற்றோர் பார்ப்பனர், அந்தணர் என பாவாணர் சொல்வதைக் காண்கிறோம் ..இச்சிந்தனை பொதுபுத்தியில் இல்லை).

பார்ப்பனர் என்பது பிராமணன் என்னும் வடசொல்லின் திரிபு என்பது பிதற்றல். குமரிநாட்டுத் தமிழ்க்காலம் ஆரியர் இனக்கருவே தோன்றாக்காலம்.

செய்யும் தொழில் பற்றியே ஒருவன் குலம் அமைந்தது. பெரும்பாலும் பெற்றோர் தொழிலையே மக்கள் வழிவழி செய்து வருவாராயினர். பெரும்பாலும் உறவினர்க்குள்ளேயே கொள்வனையுங் கொடுப்பனையுஞ் செய்து வந்தனர். அரசர்க்கு விலக்கு தடை இருந்ததில்லை.

எக்குலத்தாராயினும், துப்புரவும் ஒழுக்கமும் உண்டாட்டுறவிற்குக் கவனிக்கப்பட்டன. கல்வி, தவம், அதிகாரம், செல்வம், ஈகை, மறம்,

ஆற்றல் என்பவற்றாலன்றிப் பிறப்பாற் சிறப்பில்லை.

ஏறத்தாழ எல்லாரும் தமிழில் எழுதப் படிக்கக் தெரிந்தவராயிருந்தனர். பாட்டாளியுட்படப் பல தொழிலாரும் பாவலராகவுமிருந்தனர்.

எல்லாத் திருக்கோவில்களிலும் தமிழ் ஒன்றே வழிபாட்டு மொழியாயிருந்தது.. உவச்சர்,குருக்கள், திருக்கள், புலவர், பண்டாரியர், நம்பிமார், போற்றிமார், சாத்துவார் முதலிய தமிழ்ப் பூசாரியரே- சிவன், திருமால், காளி முத்தெய்வக் கோவில்களிலும் வழிபாடு நடத்தி வந்தனர்.

இடுகாடு பொதுவாயிருந்தது. பிணத்தை சுடுவது தமிழர் வழக்கமன்று.

உலகில் முதன்முதல் உணவை நாகரிமாய்ச் சமைத்துண்டவன் தமிழனே. உண்ணல் தின்னல் நக்கல் பருகுதல் என்கிற நால்வகை ஊண் வினையும் ஒருங்கே சேர்ந்தது சாப்பிடுதல்.

உடலுழைப்பிற்கும் மனவுழைப்பிற்கும் உயர் பதவிக்கும் தாழ் பதவிக்கும் ஏற்றவாறு குணங்களும் திறமைகளும் பிறப்பிலேயே அமைந்துவிடுகின்றன. ஆதலால் பெரியோரை புகழ்தலும் சிறியோரை இகழ்தலும் தக்கதன்று

மந்திரம் என்பது தூய தென்சொல்லே.

தமிழ் வளர்ச்சியடைந்த பின் அவர் பரவிச் சென்றது வடக்கு நோக்கியே. வங்க காளிகோட்டம் தென்சொற் பெயரே.

கிரேக்கத்திற்கு இனமான மொழி பேசிய கூட்டத்தார் பாரசீக வழியாக இந்தியா புகுந்தனர். வட இந்திய பிராகிருத இனத்தோடு கலந்தனர். அப்படி கலந்து போனாலும், ஆரிய பூசாரியார் பிரிந்து நின்று வேதம் , வேள்விகள் வழியாக ஆரியப் பழக்கவழக்கங்களை அவியாது காத்து வருகின்றனர். சிலர் தென்னாடு வந்து தமிழர் தொடர்பில் இலக்கியம் கற்று, தமிழை வேதமொழியுடன் கலந்து சமற்கிருதம் தோற்றுவித்தனர். தமிழ் நூல்களை சமற்கிருதத்தில் மொழிபெயர்த்து பின்னர் மூலநூல்களை அழித்துவிட்டனர். மொழிபெயர்ப்பு நூல்களை முதனூல்களாக காட்டி ஆரியர் நாகரிகம் மேலானது என நம்பவைத்தனர்.

பாண்டவ கௌரவர் பிறந்த திங்கட்குலம் பாண்டியர் குடிக்கிளை- இரகுராமன் பிறந்த கதிரவக் குலம் சோழர் குடி.

வடநாட்டிற் சிவ, திருமாலைப் பரப்பியது அங்கு குடியேறிய தமிழரே..

அருணகிரிநாதர்- வில்லிபுத்தூரார் மோதல் கதை -தோற்றவர் காது அறுத்தல் என்கிற தண்டனையுடன் கூடிய புலமைப் போட்டி பற்றி பாவாணர் சொல்லிவிட்டு , அப்போட்டியில் வில்லிபுத்தூராரை அதிர வைத்த அருணகிரிநாதரின் பாட்டைத் தந்துள்ளார்.

திதத்தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தத்திதா

திதத்தத்தத் தித்த திதித்தித்த தேதுத்த தித்திதத்தா

திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாததத்து

திதத்தத்தத் தித்தித்தி தீதீ திதி துதி தீதொத்ததே

மேற்கண்ட பாடலை டி எம் எஸ் சௌந்தரராஜன் சினிமாவில் பாடியுள்ளார்.

- முதல் 150 பக்கங்களில் கிடைத்த செய்திகளில் சில மேலே  தரப்பட்டுள்ளன

அக் 14

**So wrote Gandhiji**

A civilisation that is based on greed, in which mammon has replaced God, which measures progress in terms of profits, which puts corporate health and the stock market above human health and well being can hardly be called a civilisation. A civilisation that has destroyed the environment and threatens the very existence of the planet can surely not be considered progressive

I believe that if one man gains spiritually, the whole world gains with him, if one man falls, the whole world falls to that extent.

I would say means are after all everything..If I want to cross the ocean, I can do only with of a vessel; if I were to use a cart for that purpose, both the cart and I would soon find the bottom.

As is the God so is the votary..there is the same inviolable connection between the means and the end as there is between the seed and the tree

Living in Truth The Gandhian Paradigm by Ramin Jahanbegloo and Pooja Sharma

அக் 14 2023

## கலை குறித்து காந்தி

காந்தி எரவாடா சிறையில் இருந்தபோது உடல்நிலை பாதிக்கப்பட்டார். அவருக்கு குடற்புண் அறுவை சிகிட்சை மேற்கொள்ளப்பட்டு மருத்துவமனையில் 1924 ஜனவரியில் குணமாகிக்கொண்டிருந்தார்.

தினந்தோறும் ஏராளத் தோழர்கள் பார்க்க வந்துகொண்டிருந்தனர். லாலாஜி கவலையுடன் இருமுறை வந்து, காந்தியை பார்த்து உற்சாகமாக திரும்பினார். மோதிலால், அலி சகோதரர்கள் , சாஸ்திரி, ஜெயகர் எனப்பலரும் வந்தனர். ரெங்கசாமி அய்யங்காரும், முகம்மது அலியும் காந்தியின் உடல் உபாதையை பார்த்து கண்ணீர் வடித்துச் சென்றனர். இந்த சூழலிலும் காந்தி தன்னைப் பார்க்க வந்த திலிப் குமார் ராயுடன் விவாதம் ஒன்றை மேற்கொண்டார்.

உங்களுக்கு இசை மீது கலை மீது ஆர்வம் இல்லாமல் எதிர்ப்பு உணர்வா இருக்கிறது என்பது தான் ராயின் கேள்வி. உடல் முடியாமையுடன் காந்தி தனது பதிலை உடன் தந்தார். கலையுலகவாதி குறித்து அவர் தன் பார்வையைத் தந்தார்.

என்னை பற்றி ஏராள மாயக் கதைகள் பரப்பப்படுகின்றன. இதுவும் அதில் ஒன்றுதான் என்றார் காந்தி . உங்களின் துறவிகோலம் தான் உங்களைப் பற்றி இப்படிப்பட்ட எண்ணத்தை தருகிறதா என மீண்டும் ராய் கேள்வியை வைக்கிறார். இல்லை இல்லை துறவுத்தன்மை என்பதே பெருங்கலை என்கிறார் காந்தி. இந்தியாவின் சமய வரலாற்றை இசை என்பதை விட்டுவிட்டு எவராவது எண்ணமுடியுமா? என்ன தேவை எனில் இசையின் நுணுக்கத்தை புரிந்து கொள்வது என்பதைவிட , இசைக்கான இதயம் என்ன - அது கொடுக்கும் மனம் என்ன என்பதேயாகும் என காந்தி பதில் தந்தார். மேலும் அழகான அவரது பார்வையை இந்த வரிகள் நமக்குக் காட்டும்

Life is and must always be greater than all the arts put together. I go still further. For I say that he is the greatest artist who leads the best life. For what is art without the background and setting of a worthy life? An art is to be valued when it ennobles life. Art has a place in life, but art is not life. Life on the contrary is art. Art should be subservient to life. It should act as its handmaid , not master. It should be alive to life and the universe

வாழ்க்கை எனும் பெரும் பரப்பில் அதன் ஒரு பகுதியாக கலையும் இலக்கியமும் இன்னும் சமயமும், அறிவியலும், இசங்களும், தொழிநுட்பங்களும், அரசியலும் அதிகாரமும் அடக்கமாக அமர்ந்து வாழ்வை உன்னதப்படுத்த வேண்டிய சேவகர்களாக இருக்க வேண்டும் என காந்தி சொல்லித்தருவதை இதிலிருந்து நாம் விரித்து பார்க்கமுடியும்.

நான் யார் தெரியுமா என சிம்மாசனம் கேட்கும் குரல்களை நாணச் செய்யும் வரிகளை காந்தி மென்மையாக சொல்லி கண்ணாடி காட்டுகிறார்.

வாழ்வே பெரும் கலை . மக்கள் தொண்டாற்ற தன்னை ஒப்படைத்துவிட்டதாக உரிமை பாராட்டிக்கொள்ளும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் சுய கம்பீரம் காட்டிட அலைகிறோம். அங்கு தான் காந்தி நம் காதில் மென்மையாக சொல்கிறார்.

Learn the art of making yourself zero when you decide to do service to others. Don't demand high chairs to command. Don't think of yourself high. All the chairs that you sit are to serve only. The life is always bigger than any one of us…

**அக் 13 2023**

## மூன்று முகம்

இவ்வுலகில் மனிதர்கள் நம்பிக்கையுள்ளவர்கள், நம்பிக்கையற்றவர்கள் என்கிற இருபிரிவுகளாகவும்- அதன் சரி ஏற்பு- சரியின்மை ஏற்பின்மை என வாதாடக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் பெரும்பாலும் activistsகளாக இருப்பர். வேறொரு passive பகுதியினர் ஏதும் தோன்றவில்லை- கருத்தில்லை என பொருட்படுத்தாதவர்களாக பயணிப்பார்.

ஒரே மனிதன் வெவ்வேறு தருணங்களில் இந்த மூன்று முகம் கொண்டவனாக இருப்பார். அதாவது அனைவருக்கும் இந்த மூன்று முகங்களும் பொதுவாக இருக்கும்.

கடவுள் விஷயத்தில் நம்பிக்கையுள்ளவர் ஆத்திகராகிறார். அப்படியெல்லாம் சக்தி இல்லை என மறுப்பவர் நாத்திகராகிறார். இதில் மூன்றாமவர் அறியொணாவாதி எனும் புத்த சாயல் பெறுகிறார். நம்பிக்கையுள்ளவர் பக்தனாகிறார். இல்லாதவர் ‘துஷ்டன் தூஷிப்பவர்’ என பக்த பிரிவால் ஏசப்படுகிறார். நாத்திகர் பக்த பிரிவை ‘பத்தாம்பசலி- மூடநம்பிக்கையாளன்- ரீ ஆக் ஷனரி’ எனத் தூற்றுவார்.

பக்தப்பிரிவினர் இல்லாமல் கடவுள் சமய அமைப்புகள் நகரா.

இதை அரசியல் , ஆட்சி, கட்சி, வேறு அமைப்புகள் என எல்லாவற்றிற்கும் பொருத்திப் பார்க்கலாம். அங்கும் கடவுள் துதி உண்டு. ஆத்திக பக்த விசுவாசப் பிரிவு உண்டு. மறுத்து ஏற்க மறுக்கும் நாத்திக ‘துஷ்ட ஓடுகாலி’ பிரிவு உண்டு. இதையெல்லாம் பொருட்படுத்தாது சரி தவறு என அறிய விரும்பா passive பிரிவு உண்டு.

என் நண்பன் நமரி 30 ஆண்டுகளுக்கு முன்னர் சொன்னான்..கடவுள் ஆனாலும் கம்யூனிசம் ஆனாலும் , வேறு கொண்டாடப்படும் எந்த இசமானாலும் கற்பிக்கப்படுபவையே..நீ அங்கு பக்தன் -நாத்திகன் -அறியவொணாவாதி என்கிற மூன்று முகத்தையும் வெவ்வேறு தருணங்களில் அடைவாய் என்று…

வாழ்வு பெரும் தரிசனங்களை அதாவது அனுபவங்களை மன நெகிழ்வுகளை, பகுத்துப் பார்க்கும் அறிவை மனிதனுக்கு தந்துகொண்டேயிருக்கிறது. மனிதன்

அதற்கு  கடவுள் சமயம், அறிவியல் தொழில்நுட்பம், கலை இலக்கியம் போன்ற பொது அடைப்புகளிட்டு - உலகை சக சமூகத்தை வியாக்கியானப்படுத்திக்கொண்டேயிருக்கிறான்.

சமயமே பாதை என்கிறான்- பகுத்தறிவே பகலவன் என்கிறான்- அறிவியலே ஆசான் என்கிறான்- தொழில்நுட்ப ஆயுத பூஜை செய்கிறான்- கலை இலக்கியமே இதயம் என்கிறான். அதனதன் பக்தன் ஒன்றை மற்றதிற்கு மேலாக நிறுத்த விழைகிறான். ஒவ்வொன்றிற்குள்ளும் உள்போட்டிகளையும் உருவாக்கிக்கொள்கிறான். தன் மார்க்கமே உயர் வழி என அடையாளம் காட்டுவதற்காக தியாகம் செய் என அறைகூவி அழைக்கிறான். பலரை பலிகொடுக்கும் பூசாரியாகிறான்.

உலகம் எல்லாவிடங்களிலும் தனக்கான புரோகிதர்களை priesthood களை வாதாட உருவாக்கிக்கொண்டேயிருக்கிறது. புரோகிதர்களின் பகடைகாயாக உலகம் தன்னை நகர்த்தவும் அனுமதித்துக்கொண்டேயிருக்கிறது…

அக் 12 2023

## தீனதயாள் உபாத்யாய..

ஜனவரி 1964ல் விஜயவாடாவில் கூடிய ஜனசங்கம் Principles and policies என்ற தீர்மானத்தை எடுத்தது. அதில் Integral Humanism என்பது பேசப்பட்டிருந்தது.

அப்படியென்றால் என்ன என்பதை விளக்குவதற்கான சொற்பொழிவுகளை தீனதயாள் உபாத்யாய் ஏப்ரல் 22-25, 1965 மும்பாயில் வழங்கினார். அந்த சொற்பொழிவுகள் அவர்களின் கோட்பாடுகளாக இன்றளவும் போற்றப்படுகிறது.

அந்த ஒருங்கிணைந்த மனிதாயம் என்பதன் சாரம் என்ன? விடுதலைக்கு பின்னரும் இந்திய மேற்குலகையே காப்பி அடிக்கிறது. அதையே சிறந்ததாக மனித வாழ்க்கைக்கு முன்வைக்கிறது. இந்தியா தன் சொந்த வேர்களை கொண்டிருக்கிறது. அதில் தள்ளத்தக்கன இருக்கலாம். ஆனால் கொள்ளத்தக்கன, நமக்கான பல்லாண்டு சிறந்த வாழ்வியல் இல்லாமல் இல்லை. எனவே இந்தியாவின் வேரை காணத்தவறக்கூடாது. எனவே நமது கூட்டு self Identity என்பதை அறிதல் வேண்டும். பழம் பெரு நாட்டின் சுயம் என ஏதுமே யில்லையா..அதை தீவிரமாக விசாரித்தல் வேண்டும்.

சரி மேற்கு பேசிவரும் தேசியம், ஜனநாயகம், முதலாளித்துவம், சோசலிசம் என எதிலும் முரண்பாடுகளே இல்லாமல் தூய சிறந்தவைகளாகவா இருக்கின்றன. ஒன்றில் பெரும் சுரண்டல் இருந்தால், மற்றதில் தனிநபர் பாடோ அதோகதியாக இருக்கிறது. இதன் பொருள் இந்தியா கதவடைத்துக்கொள்ளவேண்டும் என்பதல்ல. மேற்கின் துதியாளராக அதனை அப்படியே நகலெடுக்க வேண்டாம் என்கிறோம்.

இந்த உலகில் இந்தியா எப்படி முன்னேறவேண்டும் என்பதற்கான திட்டம் நமது சொந்த வகைப்பட்டு அமையவேண்டும். West is not the last word என்ற புரிதல் வேண்டும். இந்திய நாட்டில் பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகிறது. ஆயிரம் வருடங்களுக்கு எங்கு விட்டோமோ அங்கு துவங்கவேண்டும் என சிலர் நம்மை வற்புறுத்தலாம். அது definitely impossible. அன்று வந்த அந்நியர்களிடமிருந்து ஏதோ ஒருவகையில் இருந்தவர்கள் தற்காத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

While the past cannot be disowned, the ideas that originated in the foreign countries are also not universal as they, too, are product of their own time and situations and many outdated. But human knowledge is common property and should not be ignored completely.

Wherever truths these developments contain must be taken note of and accepted. The rest must be scrupulously avoided.

'பாரதிய கலாச்சாரத்தின் ' அடிப்படை அனைத்தையும் integrated ஆக பார்ப்பதுதான். தனித்தனி என பார்ப்பதல்ல. மேற்கு வாழ்க்கையை 'செக்ஷன்ஸ் ' வழி பார்க்கிறது. அதில் ஒட்டு செய்கிறது. தனிமனிதன் அவன் அவயங்கள், சிந்தனை, ஆன்மா என ஒருங்கிணைந்தே இருக்கிறான். மேற்கு அவனை வெறும் political animal என சுருக்குகிறது. மற்ற அவனது பண்புகள் என்னவானது..

தனிமனிதனை வாக்குரிமை பெற்ற ராஜா என முடித்துவிடுவதோ, உணவுக்கு வழியாகிவிட்டது வேறு என்ன என அவனை கட்டுக்குள் வைப்பதுடன் அவன் வாழ்க்கையை முடித்துவிடலாமா ?.

Indian thought considers body mind and soul an an integrated whole - the ideal of fourfold responsibilities for catering to the needs of body mind and soul for achieving the integrated process of man. Responsibilities are Dharma, Artha, Kama and Moksha.

இந்த நான்கும் ஒன்றுடன் ஒன்று தொடர்புகொண்டவை மட்டுமல்ல ஒன்றை ஒன்று செல்வாக்கு செலுத்துவன. ஒன்றுக்கொன்று நிரப்பிகளாகவும் உள்ளன.

This concept of a complete human being, integral individual, is both our goal as well as our path.

அடுத்து மேற்கில் பேசப்படும் social contract theory . அது என்ன தனிநபர்களனைவரும் சேர்ந்து ஒப்பந்தம் போட்டதால் உருவானதா.. நமது பார்வையில் society is self born, comes into existence in an organic way. People do not produce society. It is not a club or joint stock company. Society is an entity with its own SELF, it is sovereign like an individual, not an arbitrary association. Society too has body, mind , intellect and soul.

நம் பார்வையில் சமூகத்தில் நிரந்தர முரண்கள் தவிர்க்கமுடியாத மோதல்கள் என இருப்பதில்லை. மனித வளர்ச்சி இந்த conflictல் தான் என்பதில்லை.

தனிநபர், குடும்பம்,கம்யூனிட்டி,தொழிற்சங்கம்,கிராம சபை, ஜனபதா. அரசு என ஏராள நிறுவனங்கள் தேசத்தில் limbs போல ஒன்றுக்கொன்று நிரப்பியாக இருக்கவேண்டும். இணக்கமாக செயல்படவேண்டும். State is an important one but not

above all other. அரசாங்கத்தை சமூகம் என பொருத்திக்கொண்ட தவறு நடந்துவருகிறது. State not synonymous with the society not the sole representative of the society. மற்ற எல்லா நிறுவனங்களையும் ஒன்றுமில்லாமலாக்கி அரசு ஆகப்பெரும் அதிகாரத்தை பெற்று வருகிறது. ஆனால் இந்திய சிந்தனை முறையில் அரசு என்பதற்கு limited role தான்.

ஓர் பகுதியில் நிலப்பரப்பில் வசிப்பது தேசிய உணர்வாகாது. Ideal , motherland என இரண்டும் வேண்டும். Ideal is the soul. Chiti soul of the nation is the concept.

National culture is continuously modified and enlarged by the historic reasons and circumstances. But Chiti is the fundamental, it determines the direction. Whatever is in accordance with Chiti, is included in culture.

Chiti is the touchstone of each action. Dharma is the repository of the nation's soul. Anyone who abandons dharma betrays the nation. Dharma is not Religion. Dharma Rajya is not a theocratic state. There all religions have freedom to practise their own religion. State sovereignty is actually vested in Dharma. The true democracy is only where there is freedom as well as Dharma encompasses all these concepts.

மனிதனுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளான உணவு, உடை, உறையுள், ஆரோக்கியம் என்பதை அரசாங்கம் செய்து தரவேண்டும். அதேபோல் தனிமனிதர் சமூகத்திற்கு தன் கடமையை செய்திட பயிற்சிக்கப்படவேண்டும். அடிப்படைகளை செய்யாத அரசாங்கம் தர்மராஜ்யமாகாது.

கல்வி என்பது சமூக பொறுப்பாகும். விதை மரமாவது போன்ற ஒன்று. அதற்கு fees என வசூலிப்பது விநோதமானதாக உள்ளது. மனிதன் கல்வி, கலாச்சாரம் மூலம்தான் சமூகத்தில் பொறுப்பானவாகிறான். வேலைக்கான உத்தரவாதம் என்பது மிக முக்கியமானது. உழைப்பில் ஈடுபடுத்தப்படாத மனிதன் liability to society ஆகிறான்.

The guarantee of work to every able bodied member of the society should be the aim of our economic system. Labour and capital bear the same relation to each other as that between man and nature. Neither of them can be neglected.

விஸ்வேஸ்வரய்யா பேசிய 7 M கள் Man, Material, Money, Management, Motive power, Machine in production process, Market முக்கியமானவை. எனவே நாம் விரும்புவதெல்லாம் Everyone who eats must get work as the basis of our economy. Let us

support Decentralisation and Swadeshi. The centralisation of power both in economy and politics may result in dehumanisation of man.

நாம் பேசும் தர்மா என்பது Education, culture and legal system

Artha: Economy, Employment, production, distribution, utility as per dharma

Kama means all,indulgences come true  cultural moderation thro music and arts. If in opposition to dharma then distortion

Moksha means highest goal ..when individual is free from the complexities of scarcity and influence

அனைவருக்கும் கல்வி மூலமே பொருளாதார ஜனநாயகம் சாத்தியமாகும். If a vote for everyone is the touchstone of political democracy, work for everyone is a measure of economic democracy. Let us support self sufficient self reliant integral village. Let us have the vision of increased production, restraint consumption and equitable distribution. Let us oppose unrestrained exploitation of nature.

Shiv Shakthi sums up DeenaDayal messages as the followings:

1. Building a strong and prosperous India on the foundation of Indian culture

2. Dharma Rajya that guarantees freedom,equality justice to all

3. Sarvodaya and Antyodaya maximum good to all

4. Samanvaya synthesis not conflict as the basis of life

சிவசக்தி நாத் பக்ஷி எழுதிய தீனதயாள் உபாத்யாய் எனும் சிந்தனையாளர் வாழ்க்கை எனும் ஆங்கில புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ள integral humanism என்பதின் சாரத்தை நான் புரிந்துகொண்ட அளவில் மேலே கொடுத்துள்ளேன். இதை பாஜக தனது கோட்பாடாக அறிவித்துள்ளது.

அக் 12 2023

## போர்

உலகம் ரம்மியமானதுதான். ஆனால் எங்காவது நடக்கும் போர்களும் அவை ஏற்படுத்தும் பேரழிவுகளும், மனதை வாட்டுகின்றன.

சமீபத்தில் ரஷ்யா- உக்ரைன் போரானாலும், நடந்துகொண்டிருக்கும் ஹமாஸ் - இஸ்ரேல் போரானாலும் கொல்லப்படும் அப்பாவி சிவிலியன்களும் , அவர்களின் பெரும் உழைப்பால் சேர்ந்துபோன உடைமைகளுக்கு ஏற்படும் நாசங்களும் அடிமனதில் பெரும் சோகத்தை ஏற்படுத்துகின்றன.

எவரோ சிலரின் சாகசங்களுக்காக வாழவேண்டிய ஆயிரக்கணக்கான உயிர்ப்பலிகளும், கோடிக்கணக்கான மதிப்பில் அழிவுகளும் எந்த நியாயத்தை எவரின் நியாயத்தை மீட்கப்போகின்றன. எல்லா பக்கங்களிலும் வெறியூட்டும் 'பாக்டரிகளாக' மனிதர்கள் மாறிப்போவதேன்?

எல்லாவற்றிலும் தரவரிசையில் முதல் 5 / 10 நாடுகள் என மார்தட்டிக்கொள்ளும் நாட்டின் தலைவர்கள் இந்த நாசங்களைக் கண்டும் தடுக்க முடியாமல் போவதேன்? ஏன் இந்த நாடுகளின் ஆட்சியாளர்களும், பேசப்படும் இசங்களும் மரத்துப்போய் ஏதும் இயலா நிலையில் உள்ளன?

அய்நா அவைகளும், இன்னும் அமைதிக்காக பேசும் மண்டபங்களும் அழிவை நிறுத்த ஏதும் பெரிதாக செய்ய இயலாதா?

இவ்வுலகால் constructive conflict management க்கான தீர்வை எட்டமுடியாதா? ஹமாசின் தலைவர்களும், இஸ்ரேல் ஆட்சி அதிகாரமும் மனித கொலைகளுக்கு பொறுப்பேற்று , போதும் என நிறுத்திக்கொண்டு பேசி உடன்பட மாட்டார்களா?

மக்களின் தலைவர்கள் என்ற உரிமை பாராட்டும் நாடுகளின் தலைவர்கள் போர் நிறுத்தத்திற்காக தாங்களே முன்வந்து தங்கள் நாட்டின் கோடிக்கணக்கான மக்களுடன் குறைந்தபட்சம் ஒரு நாள் உண்ணாநோன்பு என்கிற அறவழியை உலகறிய உணர்வை வெளிப்படுத்த மேற்கொள்வார்களா?

அமெரிக்க சீன இந்திய அய்ரோப்பிய தலைவர்கள் கூட்டாக இந்த அறவழியை காட்டுவார்களா? அல்லது நெருப்பை விசிறி மேலும் எரிய விடுவார்களா?

- டிப்ளமசி என்பதெல்லாம் அறியாத சாதாரண பாமரனின் குரல்

**அக் 11 2023**

## காந்தி எழுதினார்_

1922 காந்தி வழக்குப்பற்றி அவர் குறித்து ஆர்வமுள்ளவர் அறிவர். மார்ச் 20, 1922 இரவில் அவர் புனே எரவாடா சிறைக்கு 6 ஆண்டுகள் தண்டனைக்கைதியாக அழைத்துச் செல்லப்படுகிறார்.

எரவாடா சிறை வாழ்வில் அவர் செய்த சோதனைகள், அவருக்கு கிடைத்த அனுபவங்கள், பிறருக்கு அவர் அளித்த அனுபவங்கள் தனித்து விரிவாக எழுதப்படவேண்டியவை.

சிறைக்கு செல்லும்போது ஜமன்லால் பஜாஜ் அவர்களுக்கு அவரின் வேண்டுகோள்படியே காந்தி ஒரு கடிதம் எழுதுகிறார். ஜமன்லால் அக்கடிதம் பெரும் பொக்கிஷம், துன்பம் வரும் வேளையில் மருந்து என தன் துணைவியார் ஜானகிதேவியிடம் சொன்னார். அதை நீயும் படிக்கவேண்டும் எனவும் தூண்டியுள்ளார்.

காந்தி அக்கடிதத்தில் நீ எனக்கு அய்ந்தாவது மகனாகத்தான் கூட இருந்தாய். தனது சிறை வாழ்க்கை மேலும் உண்மை தேடலுக்கான வாய்ப்புதான் என சொல்லியிருப்பார். அதில் உண்மை என்பது அந்த அந்தக் கணத்தின் தருணம் எனவும் சொல்லியிருப்பார். மனிதன் எவ்வளவு அடக்கமாகவும், அன்பாகவும் , எளிமையாகவும் தன்னை வைத்துக்கொள்கிறானோ, அதைப் பொறுத்து அவனின் உண்மைக்கான தேடலும் வாய்க்கும்.

மேலானவன் என்கிற எண்ணம் தொலைந்து பொறுமையுடன் நடக்கும்போது உண்மைக்கான பாதை திறக்கும். நான் பேசிய இந்திய சுயராஜ்யம் என்பது புறத்திற்கான அடையாளம். ஒவ்வொரு தனிமனிதரின் விடுவிப்பு தான் சுயராஜ்யத்தின் உண்மை வடிவம் என அக்கடிதத்தில் சொல்லியிருப்பார்.

அவர் எழுதிய கடிதத்தில் இருக்கும் பொருத்தமான ஆங்கில வரிகளை தந்துள்ளேன்

" ..what is perceived by a pure heart and intellect is truth for that moment. Cling to it, and it enables one to reach pure truth. There is no question there of divided duty..

Out of truth emanates love, tenderness, humility. A votary of truth has to be humble as the dust. His humility increases with his observance of truth. I see this every moment of my life.

Brahma is real, all else unreal grows on me from day to day. It teaches us patience..it will make us magnify the mole- hills of our errors into mountains and minimise the mountains of others into mole-hills…

…outward form is Hind Swaraj. It's true form is the Swaraj for each individual

You have made yourself my fifth son. But I am striving to be worthy.."

- inputs Sushila Nayar vol 5 Mahatma India Awakened

**அக் 10, 2023**

தோழர் பேரா ஹிரன் முகர்ஜி காந்தி குறித்து

காந்தியத்தைவிட காந்தி பல மடங்கு உயர்ந்து நிற்கிறார். நான் உண்மைக்கான வழியைத்தான் காட்டுகிறேனே தவிர உண்மையையே காட்டவில்லை என காந்தி தெளிவுபடுத்தினார். தனிநபர் ஒழுக்கம், நன்னெறி மேம்பாடு என்பவற்றை அவர் வலியுறுத்தி வந்தார். வாழ்ந்தும் காட்டினார். எந்த சமூக இயக்கமும் இதை புறக்கணிக்க முடியாது. அன்புநிறை செயல்- அன்பின்பாற்பட்டு செயல் என்பதையும் எவரும் மறுக்க முடியாது.

எந்த நேரத்திலும் எதையும் சந்திக்க வேண்டிய நிலையில் நடைமுறை சார்ந்தவர்களாக சோசலிஸ்கள் இருக்க வேண்டியுள்ளது. சோசலிசம் என்பதே கூட moral objective கொண்டதுதான். முன்கூட்டியே முடிந்த முடிவான ஒன்றாக எதுவும் எப்போதும் இருக்க முடியாது என்பதையும் புரிந்து செயலாற்றவேண்டியுள்ளது

(பக் 147-148 காந்தியைக் கண்டுணர்தல்)

தோழர் இ எம் எஸ் காந்தி குறித்து

இந்திய மக்களுக்கு குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு அவர் பெரும் தீர்க்கதரிசி. காந்தியின் அன்பு, அகிம்சை, உண்மை, நீதி என்பன அனைவரையும் வசீகரித்தவை…

காந்தி உயர் அளவில் சிக்கலான ஆளுமை. அவரது போதனைகளும் அப்படிப்பட்டவையே. எளியவகை முடிவுகளுக்கு நாம் வந்துவிட முடியாது. மக்களை திரட்டி ஏகாதிபத்திய எதிர்ப்பை முன்னெடுத்து சென்றவர் என்பது ஒரு பக்கம். எதிர் புரட்சியாளர் என்கிற வகையில் மக்கள் எழுச்சியை மட்டுப்படுத்தியவர் என்பது மறுபக்கம். ஏராள நிகழ்வுகளின் பெரும் பரப்பு அவரது வாழ்க்கை. ..அவர் குறித்து வரலாற்று பார்வையில் ஒருங்கிணைந்த புரிதலுக்கு வருவது கடினமான ஒன்றாகும். அவர் குறித்து எளியவகை புகழ்பாடல்களும், எளியவகைப்பட்ட வசைப்பாடல்களும்தான் உள்ளன

(பக் 170 காந்தியைக் கண்டுணர்தல்)

எம் என் ராய் காந்தி குறித்து

தேசப் பெருமித துறவி காந்தி. அதே தீவிர இறைவியாக எழுந்த அகண்ட ஹிந்துஸ்தானுக்கு அவர் பலியிடப்பட்டார். அதன் வெறித்தனம் அதன் சொந்த துறவியையே பலியாகக் கேட்டுவிட்டது. மகாத்மாவின் மொழியானது தியாகம், சுயதுன்பம் அனுபவிப்பதை தாண்டிய ஒன்று. நெறிசார்ந்த மனிதாபிமான 'அப்பீல்' கொண்டது.

காந்தியின் அரசியல் முதிர்ச்சி அற்றது, பழுதானது என விமர்சிக்கலாம். வரலாறே சிறந்த மனிதர்களின் சுயவரலாறுதான் என்கிற புரிதல் இப்போதில்லை. அவர்கள் அவதாரமல்ல.ஆனால் தன் காலத்தின் சரியான பிரதிநிதி என்பதில் தான் அவர்கள் மேன்மை தங்கியுள்ளது. காந்தி அப்படிப்பட்ட மேன்மையாளர்.ஆனால் greatness may not be unlimited. நான் காந்தியை முட்டாள்தனமாக தொழுது வணங்கமாட்டேன். அவரின் உண்மையான மகத்துவம் போற்றுவேன்.

(பக் 182 காந்தியைக் கண்டுணர்தல்)

லோகியா காந்தி குறித்து

மார்க்ஸ் எழுதியவை சித்தாந்தமாகிவிட்டது. ஆனால் காந்தி தீர்க்கதரிசிகளைவிட திட்டவட்டமாகவும், தத்துவ அறிஞர்களைவிட பொதுப்படையாகவும் எழுதியும் பேசியும் வந்தார். அவரது செயல்கள் மூலம்தான் அவர் மிளிர்கிறார். அன்றாட செயல்பாடுகள் மூலமே அதிகம் பரவினார்..

காந்தி தனது பெரும் எழுத்துப் படைப்புகளால் உலகத்தை வசீகரிக்கவில்லை. வாழ்ந்துகாட்டுவது மூலம் மக்களை ஈர்த்தார். வாழ்ந்ததற்கும் செயல்பாட்டிற்குமான கமெண்டரி என அவர் எழுத்துக்களை எடுத்துக்கொள்ளலாம்..

அநீதிக்கு எதிரான நியாயத்திற்கான சுயதுன்பத்தை ஏற்றுக்கொண்ட உலக அடையாளம் என காந்தியை சொல்லமுடியும். ..அவர் பன்மைத்துவவாதி. அவரிடம் 'மோனிசம்' இல்லை. அனைத்துவகை சாத்தியங்களையும் காரண விளைவுகளையும் பார்பவராக இருந்தார். காந்தியிடம் pragmatic liberalism இருந்தது எனலாம்

( பக் 131, 133 காந்தியைக் கண்டுணர்தல்)

அக் 9 2023

**Caste as Social capital**

பேராசிரியர் ஆர் வைத்தியநாதன் ஐ ஐ எம் பெங்களூரில் நிதிப்பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். சென்னை லயோலா மாணவரும் கூட. கல்கத்தா ஐ ஐ எம் லும் படித்து பணியும் ஆற்றியவர். சாஸ்த்ரா, ICSSR தொடர்பு கொண்டவர். அரசியல், சமூகம், பொருளாதாரம், ஊழல் என பல்வேறு அம்சங்கள் குறித்து ஏராளமாக எழுதியும் பேசியும் வருகிறார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் சென்னை காமராஜர் அரங்கில் இவர் பேசிய உரை ஒன்றை ( வெளிநாட்டு வங்கிகளில் நிதி பதுக்குதல்) தொழிற்சங்க தோழர் சிலருடன் சென்று கேட்ட நினைவு இருக்கிறது.

இப்போது இவர் வலது மேடைகளில் அதிகம் தென்படுகிறார். வலது அறிஞர்களுடன் இவர் உரையாடல்கள் கிடைக்கின்றன. கட்டுரைகள் மற்றும் புத்தகங்களின் ஆசிரியரான இவர் சமீபத்தில் ஒரு பேட்டியில் அவர் எழுதிய caste as a social capital என்கிற புத்தகத்தைப் பற்றி குறிப்பிட்டிருந்தார். மேற்கு நாடுகளில் 2019 ல் வெளிவந்த ஒன்று. இவ்வாண்டு 2023 ல் பெங்குவின் இந்தியா இதைக் கொண்டுவந்துள்ளது.

இப்புத்தகத்தின் மய்ய ஆய்வு நோக்கமாக திரு வைத்தியநாதன் சொல்வது, மாறி வரும் இந்திய அரசியல் சூழலில் சாதி என்பது ஒடுக்குமுறை வடிவம் என்கிற உரையாடலின் வழி, அது சமூக மூலதனமாக social capital என்பதான வடிவத்தை பெற்றுள்ளது என்பதை நிறுவுவது என்கிறார். ஒவ்வொரு சாதியும் அதன் மேல் நோக்கிய இயங்கு திசைக்கான போராட்டத்தை மேற்கொண்டு வருவதை சீனிவாஸ் மற்றும் திபங்கர் குப்தா ஆய்வுகளையும் கணக்கில் கொண்டு வைத்தியநாதன் பேசுகிறார்.

மாயை சுற்றும் உரையாடல்களிலிருந்து நம்மை மீட்டுக்கொண்டு, டேட்டா தரவுகளின் வழிபட்ட உரையாடல் வழி சமூக நீதி கட்டமைக்கப்படவேண்டும் என வாதாடுகிறார். அவருக்கு கிடைத்த டேட்டாக்களை தருகிறார்.

இன்று பெரும் சூடான பிரச்சனையாகவுள்ள சாதிவாரி கணக்கெடுப்பு துல்லியமாக எடுக்கப்படவேண்டும் என இவர் வற்புறுத்தும்போது, பாஜக ஆதரவு வலதுகள் அதை ஏற்பார்களா எனத் தெரியவில்லை.

1931 பிரிட்டிஷ் கால சாதி கணக்கெடுப்பை நீட்டித்தான் மண்டல் அறிக்கை வந்தது. எனவே அதை துல்லியப்படுத்த சாதிவாரி கணக்கெடுப்பு வரவேண்டும் என்பது இவர் சிந்தனையாகவுள்ளது.

மருத்துவம் பொறியியல் பட்டப்படிப்பு இடங்களில் பயன் பெற்றோர் குறித்து இவர் தரும் சில 'டேட்டாக்கள்' , பிற்பட்ட வகுப்பினர் மத்தியில் தமிழகத்தில் கடும் கோபத்தை உருவாக்கக்கூடும்.

அடுத்து மிக முக்கிய புள்ளியாக இவர் எட்டுவது ஏன் பெரும்பாலும் சாதி மோதல்கள் 'பிற்பட்டவர் எதிர் தலித் பிரிவினர் ' என்று அமைகிறது. அது பிற்பட்டவர் மத்தியில் ஏற்படுவதில்லை என்கிற ஆய்வாக இருக்கிறது. மேலும் இந்தியாவில் மதமாற்றம் அடைந்து கிறிஸ்துவர், இஸ்லாமியர், சீக்கியர் எனச் சென்றாலும் அங்கும் சாதியம் தொழிற்படுகிறது என்கிற ஒன்றை வைத்தியநாதன் முன்வைக்கிறார்.

1951ல் நேருதான் ' stopped enumerating caste in the census, pursuing its goal of a classless society ' என்பதை மறக்காமல் சொல்கிறார் பேராசிரியர். ராகுல் இன்று வேண்டும் எனச் சொல்வதைக் காண்கிறோம்.

1901 கணக்கெடுப்பில் 1646 சாதிகள் எனச் சொல்லப்பட்டிருந்தால், 1931ல் 4147 ஆக உயர்ந்ததைக் காட்டுகிறார். 1881 சென்சஸ் படி ஏறத்தாழ 58 சத சாதிகள் எண்ணிக்கையில் 1000க்கும் கீழ் இருந்தனராம். 1929ல் எடுத்த கணக்கில் 74 சத சாதிப்பிரிவுகள் பெரும்பாலும் ஒரே locality என்ற இட இருப்பையே கொண்டிருந்தனவாம்.

இங்கு வைத்தியநாதன் எழுதியிருப்பது

But post independence, the situation changed to the aggregation of castes. Caste/ sub caste/ sub sub caste was the order of the day. Democracy creates its own fascinating opportunities. Due to power of voting and mass mobilisation caste aggregations are becoming common

இந்த சாதி ஒருங்கிணைப்பு திரட்சி வடிவில் பல உபசாதிகளை உள்ளடக்கி பெரும் அடையாளமாகுதல் என்பது இன்றுள்ள வாக்கு அரசியலில் முக்கிய காரணியாகிவுள்ளதைக் காண்கிறோம். பிராமணர் என்கிற முன் கால வர்ணம் இன்று சாதி என்கிற பல உபசாதிகளை உள்ளடக்கிய அடையாளமாகியுள்ளது. தமிழகத்தில் அதேபோல் முக்குலத்தோர் என்பதும், குஜராத்தில் படேல், அரியானாவில் ஜாட் என்பதும் மிக முக்கிய dominant அடையாளமாகியுள்ளது.

இந்த வகைப்பட்ட caste aggregation- a powerful negotiating block ஆகவும் வாக்கு அரசியலில் தொழிற்படுகின்றன. Social Engineering என்கிற பெயரில் பல்வேறு சிறு சாதி குழுக்கள் இந்த செல்வாக்கு கொண்ட சாதி அதிகாரத்திற்கு எதிரான திரட்சியாக வாக்கு அரசியலில் பயன்படுத்தப்படுவதையும் காண்கிறோம்.

இரண்டு முக்கிய ஆய்வாளர்கள் சொல்லிய புள்ளிகளைக் காண்போம்.

எம் என் சீனிவாஸ் வரிகளை அப்படியே தந்துள்ளேன்

" An important feature of social mobility in modern India is the manner in which the successful members of the backward castes work consistently for improving the economic and social condition of their caste fellows. This is due to sense of identification with one's own caste,and also a realisation that caste mobility is essential for individual or familial mobility"

அதாவது பிற்படுத்தப்பட்ட சாதியார்கள் சமூகத்தில் ஏற்றம் பெற்று வருகின்றனர் என்பதும், அதற்கு சுயசாதி அடையாள உணர்வை அவர்கள் வைத்துக்கொண்டிருப்பதும், அது உயர்விற்கு அவசியம் எனக் கருதுவதும் என்கிற செய்தி சீனிவாசிடம் கிடைக்கிறது.

அதே போல் திபங்கர் குப்தா வந்த புள்ளியும் இன்றைய புரிதலுக்கு மிக முக்கியமான ஒன்று. அவரின் வரிகளை தந்துள்ளேன்

In fact, it is more realistically to say that there are probably as many hierarchies as there are castes in India. To believe that there is a single caste order to which every caste, from Brahmin to Untouchable, acquiesce ideologically, is a gross misreading of facts on the ground. The truth is that no caste, how so ever lowly placed it may be, accepts the reason for its degradation.

திபங்கர் வந்த புள்ளி சமூக உரையாடல்களில் இடம் பெறாமல் போவதைக் காண்கிறோம். இங்கு ஒரே படிநிலையில் மேல் மற்றவை அதற்கு கீழ் என சாதிகள் தங்களை ஒப்புக்கொடுக்கவில்லை. எவ்வளவு சாதிகளோ அவ்வளவு படிநிலைகள்

என்ற மன உணர்வே தொழிற்படுகிறது. மேலும் மிக முக்கியமானது , சாதிகள் தங்களை தாழ்த்தியமைக்கான / பிற்படுத்தியமைக்கான காரணங்களை ஏற்றுக்கொண்டு ஒப்பு கொடுப்பதும் இல்லை. போராடும் தன்மைகொண்டதாகவே உள்ளன. நீ இவ்வாறு செய்து எங்களை தாழ்த்தி வஞ்சித்தாய் என்ற குற்றப்பத்திரிகையுடன், உன்னை அனுமதிக்க மாட்டோம் என்கிற உணர்வுடன் தான் சாதிகள் தொழிற்படுகின்றன.

1820 களில் பல சாதி வகுப்பாருக்கும் கல்வி என்ற சூழலே இருந்தது என்கிற தரம்பால் அவர்களின் ஆய்வை வைத்தியநாதன் எடுத்துக்கொண்டு அது தேயத்துவங்கியதும் - அப்படி தேய்ந்து போன நிலைகளிலிருந்து மாற்றி உயர்த்திக்கொள்ள நடக்கும் போராட்டமே நடை பெற்று வருவதாகவும் வைத்தியநாதன் சொல்கிறார். பிரிட்டிஷ் ஆட்சி சூழலை அவர் விமர்சிக்கிறார்.

..movements are basically attempting to achieve the restoration of the position, status and rights of these people prior to 1800.

வைத்தியநாதன் தரம்பாலை முன்வைத்து செய்திடும் ஆய்வின் மூலம், முக்கிய விவாதம் ஒன்றை துவங்கி வைக்கிறார். பண்டைய இந்திய கல்வி முறையில் காலம் காலமாக பிராமணர் அல்லாதவர்க்கு கல்வி மறுக்கப்பட்டதா என்ற கேள்விக்கான விவாதமாக அவர் சில டேட்டாவை தருகிறார். அவரின் வரிகள்

..so the widespread notion that discrimination in opportunities for education existed for millennia is a dangerous misconception that clouds our policies .. இதை ஒருவர் ஏற்காமல் மறுக்கவும் கூடும்.

2021-22 ல் தமிழ் நாடு மெடிக்கல் டாக்டர்கள் குறித்த நீட் தேர்வு

டேட்டா தருகிறார். சரியா தவறா தெரியவில்லை. அவர் தந்திருப்பது 4238 டாக்டர்களில் 79 தான் உயர் சாதியிலிருந்து வந்தனராம். சரி என்றால் வரவேற்கவேண்டிய சமூக மாற்றம்தான். இதில் பிற்பட்ட வகுப்பினர் 1990, மிகவும் பிறபட்டவர் 1130, பிற்பட்ட முஸ்லிம் வகுப்பினர் 204, பட்டியல் இனத்தவர் 670, பட்டியல் இன அருந்ததியர் 123, பழங்குடி பட்டியல் பகுதியிலிருந்து 42.

அதேபோல் tamilnadu MBBS admissions 2015-16 என்பதற்கான டேட்டா ஒன்றை அவர் தந்துள்ளார். 31525 இடங்கள். BC 12944, MBC 6754, BC Muslim 1690, SC 7257, SC Arunthathiyar

1079, ST 308, FC 1493 என்கிற டேட்டாவைத் தருகிறார். சமூக நீதியின் மலர்ச்சியை இது காட்டலாம். இனி எங்கு அது நீட்டிக்கப்படவேண்டும் என்கிற தேவையையும் சுட்டலாம். Creamy layer என்கிற விவாதம் பற்றியும் பேராசிரியர் சொல்லிச் செல்கிறார்.

Caste categories and Entrepreneurs, social capital, caste Economic clusters, vaishya- visation of India , caste in service sector போன்ற பல்வேறு தலைப்புகளில் சுருக்கமாக பேராசிரியர் இந்த புத்தகத்தில் விவாதித்துள்ளார். வாய்ப்பிருந்தால் பார்க்கலாம்.

விவேகானந்தர் அவரது மொழியில் பிராமணர் ஆட்சி சத்திரியர் ஆட்சி வைஸ்யர் ஆட்சி எல்லாம் முடிந்து சூத்திரர் ஆட்சி வரட்டும் எனப்பேசினார். இன்றைய மொழியில் அரசியலில் ஆட்சி அதிகாரம் பிராமணர்களிடமிருந்து பரவலாக BC களிடம் சென்றுள்ளதை உணரமுடியும். அது பட்டியல் இன பழங்குடி இன மக்களிடம் பரவலாகும் காலம் நோக்கி இந்திய தன் அரசியல் செல்திசையை அமைத்துக்கொள்ளுமா?

அக் 8 2023

## காந்தி எனும் செயல்

காந்தியைப் பொறுத்தவரை பக்தன் என்பவன் சேவகன். செயல்படாதவன் பக்தனல்ல...செயலில் மரணம் கிட்டுமெனில் அது மோட்சம். இந்த வாழ்க்கை சந்தோஷங்களை தேடுவதற்கானதல்ல-கடமைக்காகத்தான்...சந்நியாசம் என்பது செயல்களை விடுதல். ஆனால் தியாகம் செயல்களின் பலன்களைத் துறத்தல்- பக் 19 காந்தியைக் கண்டுணர்தல்

**அக் 8 2023**

ஒத்துழையாமை...

1920 ஆகஸ்டில் ஒத்துழையாமை என முடிவெடுத்து அதற்கான செயல்களில் மும்முரமாக காந்தியும் அவரது குழாமும் இருந்தனர். 1920-21 பம்பரமாக அவர்கள் சுழன்றுகொண்டிருந்தனர். ஓய்வு ஒழிச்சல் இல்லா பயணம் கூட்டங்கள் - உரையாடல்கள், பெற்ற நாணயம் -ரூபாய் தாள்களை பிரித்து கணக்குப்பார்த்தல், பேரேடு பதிதல் என தினம் நள்ளிரவைத்தாண்டும் வேலைகள்.

ஒருநாள் விடியற்காலை துவங்கிய வேலை மறுநாளின் விடியல் 3 மணிவரை சென்றுகொண்டிருந்தது. அருகில் மகாதேவ தேசாய். சரி வா பிரார்த்தனைக்கு போவோம் என அழைக்கிறார் காந்தி. அவ்வளவு வேலைக் களைப்பிலும் மகாதேவின் சிறு குறும்பு வெளிப்பட்டது. பாபு நாம் போவது மாலை பிரார்த்தனைக்கா இல்லை இன்றைய காலை பிரார்த்தனைக்கா, காந்தியிடம் புன்முறுவல் மட்டுமே பதிலாக இருந்தது.

1920 ஒத்துழையாமை கிலாபத் மற்றும் பஞ்சாப் ஜாலியன்வாலாபாக் அநீதிகளுக்கு நியாயம் கேட்பதற்காக திட்டமிடப்பட்டது. மூத்த தலைமுறையை ஏற்கவைக்க காந்தியால் ஆரம்பத்தில் முடியவில்லை. லாலாஜி, மாளவியா, சி ஆர் தாஸ் , அன்னி, ஜின்னா போன்ற மூத்தவர் ஏற்பில்லை.

ஒத்துழையாமை குறித்து பரிசீலிக்க காங்கிரஸ் 'சிறப்பு அமர்வு' ஒன்றை கல்கத்தாவில் செப்டம்பர் 4-9 , 1920 நாட்களில் கூட்டியது. பெரும் வாதப்போர் நடந்து வாக்கெடுப்புவரை அந்த அமர்வு சென்றது. லாலாஜி தான் அமர்வின் தலைவர். கஸ்தூரி ரங்க

அய்யங்கார் காந்தியை கடுமையாக தாக்கினார். காந்தி தன் சொந்த புகழைப் பெருக்கிக்கொள்ளவே இந்த ஒத்துழையாமை என்றார். வாக்கெடுப்பு தவிர்க்க முடியாமல் போனது.

மாகாணவாரியாக பெட்டிகள் வைக்கப்பட்டன. காங்கிரஸ் மாநாடு என்றால் பத்தாயிரம் பேர் கூடுவர் என்ற நிலை. எவர் சார்பாளர் எவர் பார்வையாளர் என்கிற குழப்பங்களும் இருந்தன. இதை சரிசெய்யவே காங்கிரஸ் அமைப்புவிதிகளை

முறைப்படுத்தி புதிய விதிகளைக் கொணர காந்தி தலைமையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

வாக்கெடுப்பு 6 மணிநேரம் நடந்தது. பலர் கலந்துகொள்ளாமல், வேறு வேலைகளுக்கு சென்றனர். கலந்து கொண்டவர்கள் எண்ணிக்கைப்படி மாகாணவாரியாக எண்ணப்பட்டு ஒத்துழையாமைக்கு ஆதரவாக 1855 வாக்குகளும், எதிர்ப்பாக 873 வாக்குகளும் விழுந்தன. பெரிய மாகாணங்களான வங்கம், உ பி, பம்பாய், மதராஸ், பஞ்சாப், பிகார் என அனைத்திலும் ஒத்துழையாமைக்கு பேராதரவு வாக்குகளாக விழுந்தது.

முடிவை அறிந்து அன்னி பெசண்ட், அடுத்த காங்கிரஸ் அமர்வு வரை இனி AICC கமிட்டிகளுக்கு நான் வரமாட்டேன் என அறிவித்து சென்றுவிட்டார். மாளவியா தான் பெரும்பான்மை பெறாததால் வருவது சரியா என யோசிக்கலானார். வல்லபாய் சகோதரர் ஒத்துழையாமைக்கு ஆதரவாக வைஸ்ராய் கவுன்சிலிருந்து வெளியே வந்தார். வேறுபாடுகளை தணிக்கக்கூடிய இடமாக அடுத்துக் கூடிய டிசம்பர் 1920 நாக்பூர் அமர்வு இருந்தது.

நாக்பூரில் பலப்பரிட்சை செய்யலாம் என்கிற முடிவில் ரூ 36000 சொந்தப்பணத்தை செலவு செய்து 250 ஆதரவாளர்களை கல்கத்தாவிலிருந்து சி ஆர் தாஸ் அழைத்து வந்தார். டிசம்பர் 26 ல் கூடிய அமர்விற்கு விஜயராகாவாச்சாரியர் தலைமை ஏற்றிருந்தார்.

Swarajya or Responsible Govt within the Empire என்பதும் விவாதமானது. மாகாணாவாரி மாநிலம் அமைப்பு, சார்பாளர் எண்ணிக்கை வரையறை என்கிற அமைப்பு திருத்தங்கள் பேசப்பட்டன. ஜின்னா மாளவியா within empire என்பதை அதிகமாக வலியுறுத்தினர்.

நாக்பூரில் தலைவர்களுக்கு இடையே சமாதானம் உருவாகி, சி ஆர் தாஸ் ஒத்துழையாமை தீர்மானத்தை முன்மொழிய லாலாஜி உட்பட அனைவரும் ஏற்கும் சூழல் உருவானது. காந்தி அனுசரித்த நிதான அணுகுமுறையால் மூத்தவரும் ஒத்துழைத்து இணங்க சம்மதித்த காட்சியை நாக்பூர் உருவாக்கியது என்பதை பட்டாபி சீதாராமையா பதிவில் பார்க்கலாம்.

- Inputs Sushila Nayar Mahatma vol 5 India Awakened

அக் 7 2023

## பெரியார் குறித்து பெருஞ்சித்திரனார்

பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமிழ் புலமையை பலரும் அறிந்திருக்கக்கூடும். பாவாணருடன் பயணித்தவர். அவருடன் முரண்பட்டவரும் கூட. மொழிஞாயிறு பாவாணர் என்கிற நல்ல அறிமுக நூலையும் அவர் எழுதியவர். திருக்குறள் மெய்ப்பொருளுரை மற்றும் ஆரியர் கொட்டடங்கள் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட நூல்களை தனித்தமிழில் தந்தவர். தனித்தமிழ் இயக்கத்தை இதழ்கள் வழி உயர்த்தியவர்.

பாவலரேறு அவர்கள் தென்மொழியில் அவ்வப்போது எழுதிய பெரியார் குறித்த கட்டுரைகளை தொகுத்து , அவர் மறைவிற்கு பின்னர் வெளியிட்டுள்ளனர். முதல் பதிப்பு 2005லும், அடுத்த பதிப்பு 2015லும் வந்தது. பெரியார் குறித்து மிக உயர்ந்த மதிப்பீடுகளையும், போற்றும் நலங்கூர் நாவினர் என்கிற பாவையும் பெருஞ்சித்திரனார் எழுதியுள்ளார். அதேபோல பெரியாரிடம் அவர் வேறுபட்டு செய்திருக்கிற விமர்சனங்களையும் இந்த நூலில் பார்க்கமுடியும்.

நலங்கூர் நாவினர்- நுரைப்பஞ்சின் நரைதாங்கி, நெறியாற்றின் நெஞ்சு படர, வெய்யினும் மழையினும் விதிர்க்கும் பனியினும், தொல்குடிமை கட்டழித்த ஆரியத்தை அடிதுமித்து என்று அப்பாடல் செல்கிறது. இப்பாடலில் பெரியாரின் இறைமைக்கொள்கையை பாவலரேறு ஏற்காமையைக் காட்டுகிறார். எனினும் பிறர்க்கு அருமையானவற்றை செய்கின்ற தன்மையாலேயே இவர் பெரியார்- முதுமையான் வந்தன்று எனவும் மொழிவார். இப்பா தென்மொழி 1970 இதழ் ஒன்றில் வந்தது.

…" தமிழகம் வள்ளுவர் பலரைக் கண்டிருக்கலாம். கம்பர் பலரைப் பார்த்திருக்கலாம். இளங்கோவடிகள், மாணிக்கவாசகர் போலும் சமயத் துறவியர் பலரப் பெற்றிருக்கலாம். ஆனால் ஒரே ஒரு பெரியாரைத்தான் அது பெற்றுத் தந்திருக்கிறது" .." அவரால் தொண்டு என்னும் சொல்லுக்குரிய முழுப்பொருளையும் உருவாக்கிக் காட்டமுடிந்தது" தென்மொழி 1971 இதழ் ஒன்றில்

“ ..சாக்ரடீசு, புத்தர், திருவள்ளுவர், ஏசு, நபி, காந்தி போலும் காலத்தின் எல்லையாக அமர்ந்துவிட்டவர் பெரியார். அவர்கள் செய்த அருஞ்செயல்களைவிட ஒருபடி மேலாகவே செய்தார் பெரியார்.அவர்கள் நன்மைகளை செய்தார்கள்; பரப்பினார்கள். ஆனால் பெரியார் தீமைகளையே எதிர்த்துப் போரிட்டார். விதைகளைத் தூவுகிறவர்களைவிட, மண்டிக்கிடக்கும் களைகளை அகற்றுபவனுக்கும், முட்களை வெட்டியெறிபவனுக்கும், கற்களைப் பொறுக்கி அப்புறப்படுத்துபவனுக்குத்தான் வேலைகள் மிகுதி. முயற்சிகள் மிகுதி. உடலுழைப்பு ஏராளம்” ( தென்மொழி செப் 1978)

இனி பாவலரேறு பெரியார் குறித்து எழுதிய விமர்சனங்களை சிறிதளவு பார்ப்போம்.

..பெரியாரின் வரலாற்றை பெரியார் எழுதிக்கொண்டிருக்க போவதில்லை. அவர் இறுதி நாட் செயல்கள் வரலாற்றில் படியப்போகும் கறையாகும் ( காமராஜருக்காக திமுக எதிர்ப்பில் காங்கிரசை ஆதரித்தபோது) -தென்மொழி 1966 இதழ் சுவடி 4 ஓலை 2

“ திரு வி க இவரிடம் ( பெரியாரிடம்) ஏன் ஐயா திராவிட நாடு திராவிடருக்கே என்று கூறுகின்றீர்கள். தமிழ்நாடு தமிழர்களுக்கே என்று கூறினால் நாங்களும் உங்களுடன் இணைந்து கொள்வோமே என்று கூறினாராம். பா வே மாணிக்கம் நாயக்கர் அவர்களும் திரு வி க கருத்து சரியே என்றாராம். திரு வி க எழுந்து போய் வந்தாராம். அவர் வருவதற்குள் ஈ வே இரா, மாணிக்கம் நாயக்கர் அவர்களிடம் ஏன் ஐயா, நீங்களும் அவரோடு சேர்ந்துகொண்டு, தமிழ் நாடு தமிழருக்கே என்று கூப்பாடு போடச் சொல்கிறீர்களே, அப்படியே தமிழ்நாடு கிடைத்தால் அதில் உங்களுக்கும் எனக்கும் எப்படி ஐயா இடமிருக்கும்? முதலில் நம்மையன்றோ தெலுங்கு நாட்டிற்கும் கன்னட நாட்டிற்கும் ஓடச் சொல்லுவார்கள். இது தெரியாமல் பேசுகின்றீர்களே என்று கூறினாராம்( பெரியார்)..”

“ பாவாணர் ஒருகால் தாம் எழுதிய ஓர் அரிய ஆராய்ச்சி நூலை அச்சிட இவர் உதவி கேட்டார். இவரோ ( பெரியார்) பண உதவி செய்யமுடியாது. அதை அச்சிட்டுக் கொண்டு வாருங்கள், நான் விற்றுத்தருகிறேன் என்று கூறினாராம். பாவாணர் அவர்களும் அதை மெய்யென்று நம்பி தம் துணைவியார் கழுத்தில் கிடந்த பொன் தொடரியை விற்று அதை அச்சிட்டுக்கொண்டு போய்,

விற்றுக்கொடுக்கக் கேட்டாராம். பெரியார் இரண்டு மூணு உருபா மதிக்கப்பெறும் அந்நூலை நான்கணா மேனி விலைக்குக் கேட்டாராம். இது போன்ற நிகழ்ச்சிகள் நிறைய உள "

" தமிழில் என்ன இருக்கின்றது என்று கேட்கும் வெறுப்புக்கொள்கை தான் இவர் காணும் பகுத்தறிவு என்றால் அப்பகுத்தறிவு நமக்கு வேண்டுவதில்லை…பொது மக்களின் அறியாமைகளை இவர் நன்கு உணர்ந்தவர் என்பதாலேயே, அறிஞர்களின் அறிவை இவர் நன்கு உணர்ந்தவர் ஆகிவிடார்…இற்றைத் தமிழகத்தில் நிலவியிருக்கும் பண்பாட்டுத் தாழ்விற்கு இவரும் இவரின் மட்டையடி செய்கைகளும் கூட ஓரளவு காரணம் என்று கூறலாம்"

" பெரியார் ஈ வே இரா ஒரு குமுகாயச் சீர்திருக்காரர், பகுத்தறிவு வழிகாட்டி. அவர் பேராசிரியரோ அறிவியல் அறிஞனோ அல்ல..". தென்மொழி 1967 சுவடி 5 ஓலை 3

பாவலரேறு தன் மதிப்பீட்டு சமனை வேறு ஒரு கட்டுரையில் இவ்வாறு தருகிறார்.

" நம்மை பொறுத்த மட்டில் பெரியார் குமுகாய சீர்திருத்தத்தில், பிராமண சூத்திர பெரும் போராட்டத்தில் பெரியார் தாம். அதில் ஐயமில்லை.ஆனால் மொழி பற்றியோ, தமிழர் வரலாறுபற்றியோ, பிற அறிவியல் செய்திகளைப் பற்றியோ பேசுவதில் அவர் சிறியாரே. அவர் முதியவர், தலைவர் சீர்திருத்தக்காரர் என்பதற்காக அவரை எவ்வளவு போற்றுகிறோமோ, அவ்வளவு பிற துறைகளில் தலையிட்டுக் கருத்தறிவிப்பதற்காக அவரைக் கண்டிக்கிறோம்"

அளவில் சிறிய 120 பக்கங்களைக் கொண்ட நூல்தான். ஆர்வமுள்ளவர் படித்தறியலாம்

அக் 6 2023

## ராமகிருஷ்ணர்

ராமகிருஷ்ண பரமஹம்சரின் தலை சீடன் என விவேகானந்தர் பொது புத்தியில் உறைந்திருப்பார். ஆனால் எல்லா குருமார்களுக்கும் அவரது முதன்மை சீடரால்

ஏற்படும் நிலை ராமகிருஷ்ணருக்கும் நேராமல் இல்லை. குருவை விஞ்சுவது, அவர் பெயரை சொல்லிக்கொண்டு தன் பாதையில் செல்வது என்பது உலகில் அதிசயமான ஒன்றல்ல.

ராமகிருஷ்ணர் occult powers அமானுஷ்ய சக்தி என்பதை ஏற்றவர் அல்ல. இதை ராமகிருஷ்ணர் சொல்லிய கதை வழி நாம் பார்க்கமுடியும். ஆனால் அவரிடத்தில் சில trance அப்படியே சமாதி நிலை அசையாமல் நிலைகுத்தி நிற்பது- திடிரென பெரிதாக அழுவது போன்ற செயல்கள் இருக்கும். இதை விவேகானந்தர் ஆரம்பத்திலிருந்தே ஒருவகை ஹலுசினேஷன் பிரமை என்றே கருதிவந்தார். அதே போல் அவரின் காளி வழிபாட்டிலும் விவேகானந்தர் நம்பிக்கை வைக்கவில்லை.மிஸ் மேரி ஹால் எனும் பெண்மணிக்கு அவர் ஜூன் 17, 1900ல் எழுதிய கடிதத்தில் காளி வழிபாட்டை தான் எப்போதும் மதத்தின் பகுதியாக கருதியதே இல்லை. இன்னும் எனக்கு அதில் வெறுப்புத்தான் இருக்கிறது என தெளிவுபடுத்தியிருந்தார்.

டாக்டர் மகேந்திரலால் ராமகிருஷ்ணர் காலத்தவர். புகழ் வாய்ந்த மருத்துவர். கல்கத்தாவில் எம் டி பெற்ற இரண்டாவது நபர். ஏழை எளியவர்களுக்கு சேவை எனில் அது ஹோமியோ மூலம்தான் என நகர்ந்தவர். அவர் ராமகிருஷ்ணருக்கும் மருத்துவம் பார்த்ததாக அறிகிறோம். அவர் பரமஹம்சரிடம் உங்கள் காளி நமது சந்தால் பழங்குடி பெண் போராளிதான் என்றாராம். பரஹம்சர் சிரித்துக்கொண்டாராம்

ராமகிருஷ்ணர் ஒருமுறை எனது சக்தி முழுக்க யோகஷேமத்திற்காக உன்னிடம்(விவேகானந்தரிடம்) அளித்துவிட்டு பிச்சைக்காரன் போல் நிற்கிறேன் என அழுதாராம். இப்படிப்பட்ட கைமாற்றி தரும் சக்திகளில் நம்பிக்கையுடன் விவேகானந்தர் இருந்திராப்பாரா ?

இப்படி ஓர் உரையாடல் நடந்ததான பதிவைக் காண்கிறோம். அந்த நாள் ஏப்ரல் 9, 1887. முந்திய ஆண்டில்தான் ராமகிருஷ்ணர் மறைந்தார். மகேந்திரநாத் என்பாருடன் விவேகானந்தர் நடத்திய உரையாடலாம்..

ராமகிருஷ்ணர் சக்தியை மாற்றித் தந்து சென்றுள்ளார். காளியை ஒருநாள் என் கையைப் பிடிக்கச் சொன்னேன். உன்னைத் தொடும்போது எலக்ட்ரிக் ஷாக் போல்

உணர்கிறேன் என்றாள். ஆனால் சத்தியமாக இதை யாரிடமும் தெரிவிக்கக்கூடாதென்றாள் என விவேகானந்தர் தெரிவித்தாராம்.

ராமகிருஷ்ணரிடமிருந்து மாறுபட்ட வகையில் இந்து மதம் குறித்த தன் போதனைகளை விவேகானந்தர் செய்யலானார். ஆரம்ப நாட்களில் பல இராமகிருஷ்ணருடன் இருந்த துறவிகள் ஏற்கவில்லையாம். அவர்களைப் பார்த்து கீழ்கண்டவாறு விவேகானந்தர் பேசினாராம்.

You are sentimental fools! What do you understand of religion? You are only good at praying with folded hands, 'O Lord! how beautiful is Your nose! How sweet are your eyes!' and all such nonsense...and you think your salvation is secured and Shri Ramakrishna will come at the final hour and take you by the hand to the highest heaven...Study, public preaching, and doing humanitarian works are, according to you, Maya, because he said to someone, 'Seek and find God first; doing good in the world is a presumption!' ...As if God is such an easy thing to be achieved! As if He is such a fool as to make Himself a plaything in the hands of an imbecile

You think you have understood Shri Ramakrishna better than myself! You think Jnana is dry knowledge to be attained by a desert path, killing out the tenderest faculties of the heart! Your Bhakti is sentimental nonsense, which makes one impotent. You want to preach Ramakrishna as you have understood him, which is mighty little.

Hands off! Who cares for your Ramakrishna? Who cares for your Bhakti and Mukti? Who cares what your Scriptures say? I will go into a thousand hells cheerfully, if I can rouse my countrymen immersed in Tamas, to stand on their own feet and be men inspired with the spirit of Karma-Yoga...I am not a servant of Ramakrishna, or anyone, but of him only who serves and helps others, without caring for his own Bhakti or Mukti!

செய்திகளுக்கு ஆதாரம் : A Restatement of Religion Swami Vivekananda and the making of Hindu Nationalism by Jyotirmaya Sharma

பி.கு சர்மா தெலங்கானா பகுதி பேராசிரியர் அறிஞர். இந்துத்துவா கோல்வால்கர் குறித்து எழுதிவருபவர். இந்து தேசியத்தின் தந்தையாக விவேகானந்தரை இவர் கருதுகிறார்.

**அக் 5 2023**

## பெரியார் குறித்து விஸ்வநாதன்

The political career of E V Ramasami Naicker by Dr E Sa visswanathan, ஏராள தகவல்களுடன் பின்னப்பட்டுள்ள புத்தகம். அப்புத்தகத்தின் 40 ஆம் ஆண்டு என முன்னொரு பதிவை செய்திருந்தேன்.

அதிகம் சொல்லப்படாத ஒரு செய்தி இதில் விஸ்வநாதனால் தரப்பட்டுள்ளது. நீதிக் கட்சி தலைவர்களும் அனைத்திந்திய அளவில் ஒத்தக் கருத்துக்கொண்டவர்களை அணுகி கட்சி ஒன்றை அமைக்கலாம் என 1920 களில் முயற்சி எடுக்காமல் இல்லை. அவை பலனைத் தரவில்லை. மீண்டும் சைமன் கமிஷன் வந்து போன பின்னர், வட்டமேஜை மாநாட்டில் பெடரல் சிந்தனை தீவிரமாக விவாதிக்கப்பட்ட தருணத்தில், ராமசாமி முதலியார் formation of federal party என்பதை வலியுறுத்தினார். சரிந்து வரும் ஜஸ்டிஸ் கட்சி செல்வாக்கை தடுக்க இது உதவலாம் என்பது அவரது தரப்பாக இருந்தது.

அடுத்து ஒரு பிரச்சனை நீதிக் கட்சி அமைப்பு விதிகளில் பிராமணர்களை சேர்ப்பது குறித்த சர்ச்சை உருவானது. பெரும் விவாதத்திற்கு பிறகு பெரியாரும் தனது தோழர்களிடம் சுய மரியாதை குழுவினர் இதில் பிடிவாதம் காட்டவேண்டாம் எனத்தெரிவித்ததாக விஸ்வநாதன் எழுதுகிறார்.

1935 சட்டப்படியிலான மாகாணத்தேர்தலில் காங்கிரசும் பங்கேற்பது என்ற முடிவு எடுத்தவுடன், பெரியார் தனது பத்தம்ச கோரிக்கைகளை காங்கிரஸ்- நீதிக்கட்சி இரண்டில் எவர் ஏற்கிறார்களோ அவருக்கு ஆதரவு எனச் சொல்லத்துவங்குகிறார். இந்த Ten point programme யை நீதிக்கட்சியின் செயற்குழு நவம்பர் 1935ல் சென்னையில் கூடி விவாதித்தது. பொப்பிலி ராஜா போன்றவர், காங்கிரசின் செல்வாக்கை எதிர்கொள்ள பெரியார் தங்களுடன் இருப்பதை விரும்பினர்.

பொப்பிலி மற்றும் ராமசாமி நாயக்கர் இருவரும் இணைந்து திட்டத்தை இறுதிப்படுத்துவது, ஜனவரி 1936ல் சந்திப்பது என நீதிக்கட்சி செயற்குழு முடிவெடுத்ததாம். இதில் ராமனாதன் போன்றவர் அதிருப்தி அடைந்து எதிர்ப்பு தெரிவித்தனர். சத்தியமூர்த்தி, காங்கிரசின் கராச்சி தீர்மானத்தின் சாயலில் ஒன்றை எழுதி பெரியார் தனது திட்டம் என்கிறார் என நவம்பர் 19, 1935ல் விமர்சித்தாராம். பெரியாரின் ஆதரவைப்பெற்ற போதும், நீதிக்கட்சியால் வெற்றி பெற இயலவில்லை. காங்கிரஸ் அமோக வெற்றி பெற்றது.

இப்புத்தகத்தில் பக் 360ல் appendix 5 Ramasami Naicker's Ten point programme கொடுக்கப்பட்டுள்ளது.

ஆலைகள் தேசியமயம், கந்துவட்டி ஏஜெண்ட்களிடமிருந்து காப்பற்ற கூட்டுறவு முறை, விவசாயிகளை கடனிலிருந்து காப்பாற்றுதல், அனைத்து குழந்தைகளுக்கும் குறைந்தபட்சக்கால கல்வி, குடி பழக்கத்திலிருந்து மக்களை விடுவித்தல், லோக்கல் போர்ட்- நகராட்சி- கூட்டுறவு துறைகளுக்கு அதிக அதிகாரம், வருவாய் அற்றவர்களிடம் எந்த வரியும் செய்யாமை போன்ற பல அம்சங்கள் அத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. அவர் சோவியத் சுற்றுப்பயண செல்வாக்கிலிருந்து முற்றிலும் விடுபடாமையை இதில் காணமுடிகிறது.

வேறு இரண்டு சுவையான அம்சங்கள் அரசு ஊழியர் சம்பளம், மதம் குறித்து அதில் இருக்கின்றன. விஸ்வநாதன் கொடுத்த வரிகளை தந்துள்ளேன்

In as much as the salaries paid to Govt servants are likely to spoil the purity of minds of the people by making them greedily aspire for them, and in as much as they are unbearably heavy for the economic conditions of India, they should be reduced as to barely meet the necessaries of life..

மதத் தலையீடு பற்றியுள்ள அம்சம்

"

6. Religion should be treated as a personal affair and religious institutions should be treated as private ones. They should have no connection or significance whatsoever with the politics and administration of the State. The State should incur no expense whatsoever or show any partiality or give preference or privilege or make special provisions on account of any caste or religion "

அக் 4 2023

## சாவர்க்கர் குறித்து தனஞ்செய் கீர்

சாவர்க்கர் வாழ்க்கை வரலாறு குறித்த தனஞ்செய் கீர் புத்தகம் அவருக்கான புகழ்பாடலாக எழுதப்பட்டுள்ளது. A type of Hagiography or idolising bio sketch.

தனஞ்செய் கீர் எழுதிய அம்பேத்கர் வரலாற்றை படித்தவுடனேயே , சாவர்க்கர் குறித்த அவரது புத்தகத்தையும் படிக்க நினைத்தேன். அம்பேத்கர் புத்தகத்தில் பக்கத்திற்குப் பக்கம் சாவர்க்கரை கீர் வலியக்கொணர்ந்திருப்பார். அதே போல் சாவர்க்கர் புத்தகத்தில் அம்பேத்கருக்கு நிறைய space இருக்கிறதா எனப் பார்க்க விழைந்தேன்.

சாவர்க்கர் புத்தகம் முதலில் Savarkar and his times என்று 1950ல் அவர் இருக்கும்போதே எழுதப்பட்ட ஒன்று. அதன் இரண்டாம் பதிப்பு

சாவர்க்கர் மறைவிற்கு பின்னர் திருத்தப்பட்ட ஒன்றாக கூடுதல் அத்தியாயங்களுடன் 1966 அக்டோபரில் கொணரப்பட்டுள்ளது. தலைப்பை veer Savarkar என கீர் மாற்றிக் கொணர்ந்தார்.

கீரின் அம்பேத்கர் புத்தகத்தை சமீபத்தில் வெளியிட்ட பாபுலர் பிரகாஷன் தான் சாவர்க்கர் புத்தகத்தையும் 2019ல் மறு பதிப்பாகக் கொணர்ந்துள்ளனர். 600 பக்க அளவிலான புத்தகம்.

அம்பேத்கர் பெயர் முதலில் எம் என் ராயுடன் சேர்ந்து 161 பக்கத்தில் தான் வர ஆரம்பித்துள்ளது. அந்தமான் சிறைக்கொடுமைகளை கடந்து, தொடர் வேண்டுகோள்களுக்கு பின்னர் ரத்னகிரி சிறைக்கு சாவர்க்கர் கொணரப்படுகிறார். அங்குதான் மிகுந்த சர்ச்சைக்குரிய ‘ஹிந்துத்துவா’ புத்தகத்தை எழுதுகிறார். கீர் இதைச் சொல்லும்போது, இப்படிப்பட்ட தெளிவான ideological ஆக்கத்தை எழுத எவருமில்லை. எடுத்துக்கொண்டதை தெளிவாக எழுதக்கூடியவர்கள் என்றால் எம் என் ராய், அம்பேத்கர் தான் எனச் சொல்லமுடியும் என்கிற ஒப்பீட்டைத் தருகையில் அம்பேத்கர் பெயரை கீர் தருகிறார்.

இதன் பின்னர் காந்தி குறித்த bias இப்புத்தகத்தில் துவங்கிவிடுகிறது. சாவர்க்கர் புகழ் பாடுவதை புரிந்துகொள்ளலாம். அவரின் லண்டன் சாகசங்கள், British

தனிநபர் annihilation கொள்கைகள், ஆயுதம் ஏந்த வற்புறுத்தல், அந்தமானில் பெரும் அவதி போன்றவைகளை புரிந்துகொள்ளலாம். வழிமுறை மீதான விவாதம் இருந்தாலும் அவர் சிறை வாழ்க்கை தியாகங்களை மதிக்க முடியும். குடும்ப சுகங்கள் இழந்ததை புரிந்துகொள்ள முடியும்.

அவருடன் ஏற்படும் முரண் 'ஹிந்துத்துவா ' கொள்கை நிலைப்பாற்பட்டது என்ற புரிதலையும் ஒருவர் கொள்ளமுடியும். 'காந்திக்கு எதிர் சாவர்க்கர் ' என்கிற பெரும் பரப்புகொண்ட அரசியல் 20 ஆம் நூற்றாண்டில் துவங்கி 21 ஆம் நூற்றாண்டிற்கும் கைமாற்றப்பட்டுள்ளது.

சாவர்க்கர் அரசியல் மத்திய ஆட்சிஅதிகாரத்தில் என்கிற நிகழ்தல் நடந்தேறியிருக்கிறது. அதற்கான பேரடையாள கட்சி இருக்கிறது. காந்திக்கான அரசியல் கட்சி என ஏதாவது இருக்கிறதா? காங்கிரசால் அந்த அடையாளத்தை நேரு காலத்திலேயே தரமுடியவில்லை. இப்போது அப்படி தரும் நிலையில் இருக்கிறதா என்பது கேள்விக்குரிய ஒன்றே. வேறு கட்சிகள் எதுவும் காந்தி அடையாளங்களை காட்டுவதில்லை. காந்திக்கு காந்தி மட்டுமே அடையாளமாக இருக்கிறார். வேறு எந்த அமைப்பும் காந்தியின் முழு அடையாளத்தை தருவதாக உணரமுடியவில்லை என்கிற சிக்கல் நிறைந்த அரசியல் சூழலில் நாம் இன்று இருப்பதாகத் தோன்றுகிறது.

இப்புத்தகத்தில் இந்து முஸ்லிம் ஒற்றுமை எனும் வரும் இடங்களில் எல்லாம் காந்தியை சரண்டர் ஆனவர், இந்துக்களை அகிம்சை எனப்பேசி பலவீனமாக்கியவர் என்கிற பாரபட்ச மதிப்பீடுகள் கீர் அவர்களால் செய்யப்பட்டுள்ளது. திலகரை சாவர்க்கரை வலிமையாக சித்தரிக்கும் முயற்சிகளும் இப்புத்தகத்தில் காணப்படுகிறது. காந்தியை 'முஸ்லீம்களை appease ' செய்துகொண்டிருந்தவர் எனவும் காட்ட முயற்சித்துள்ளார் கீர். இந்த appeasement யை அம்பேத்கர் ஏற்கவில்லை எனும் சொல்லும்போது இரண்டாவது முறையாக அம்பேத்கர் பெயர் வருகிறது. காந்திக்கு எதிர் என்கிற கணக்கில் அம்பேத்கரை சேர்த்துக்கொள்வதைக் காணமுடிகிறது.

தீண்டாமை எதிர்ப்பு, அவர்கள் கோயில் நுழைதல், பொதுப்பள்ளியில் படித்தல் போராட்டங்களை ரத்னகிரி பகுதியில் சாவர்க்கர் நடத்தியதும், அம்பேத்கரை அழைத்து சந்திப்பு நிகழாமல் போனாலும் அம்பேத்கர் சாவர்க்கர் செயல்களை

பாராட்டினார் என்ற செய்தி அடுத்த பக்கங்களில் சொல்லப்பட்டுள்ளது. ஏக இந்து ஒருங்கிணைப்பு என்றசட்டகத்திற்குள் அனைத்து சாதி இணைப்புடன் கூடிய அரசியல் சமூக ஹிந்துத்துவாவை சாவர்க்கர் பேசி வந்தார். அவர் 1920 களிலேயே one God, one goal, one language, one country and one nation முழக்கத்தை தந்தார். அவரின் வாரிசுகள் அதை இன்றும் எடுத்துச் செல்ல முயற்சிக்கிறார்கள். இன்றைய இந்திய அரசியல் போக்கில் இந்த ஏக இந்து ஒற்றுமை என்பதற்கான அரசியல் மாற்றைத்தேட மீண்டும் பண்டைய அடையாளம் ஒன்றே எதிர் கட்சிகளுக்கு தேவைப்படுகிறது போலும்- caste census.

டிசம்பர் 9, 1930ல் சாவர்க்கர் இப்படியான அறிவிப்பை கொடுத்தார் என பக் 186 ல் கீர் எழுதுகிறார்

From today I shall not believe in highness or lowness of caste. I shall not oppose intermarriage between high and low castes. I shall eat with any Hindu irrespective of caste. I shall not believe in caste by birth or profession and henceforth I shall call myself a Hindu only- not Brahmin vaishya etc

இந்த வரிகள் வாழ்நாள் முழுவதும் அவரால் கடைபிடிக்கப்பட்டிருந்தால் ஒருவகையில் மகிழ்ச்சிதான். இதுவே பிற மதங்களுக்குமான அறிவிப்பாகவும் சேர்ந்து வந்திருந்தால், சாவர்க்கரும் controversy யைத் தாண்டி அனைத்துப் பகுதியினராலும் கொண்டாடப்பட்டிருப்பார். அவரின் broadness அல்லது narrowness - Hindu unity என்பதுடன் நின்று போனது. இந்து assertion என்பதற்கு பிற மத நீக்கம் - நிந்தனை என்கிற பொருளாகவும் சாவர்க்கர் நீட்சியானார்.

Back to Gandhi with all honesty and dedication commitment என்பதுதான் , வேறு எந்த பெயர் தாங்கும் அரசியலை விட ஆழமானதாக, conflict managementல் தீர்வை நோக்கி நகர்த்துவதாக அமையும். அதில் உடனடி அரசியல் அதிகார பலன்களை பார்க்க முடியாமல் போகலாம். Self suffering என்பதை பழகிக்கொள்ளாத அரசியலால் அதன் எதிர் அரசியலை வெற்றி கொள்ளமுடியுமா? 'மாரல் மனிதர்கள் ' எழ காந்தி தான் நம்மிடம் உள்ள பெரும் வாகனம்.

இந்த நூலின் முதல் 200 பக்கம் படித்த அளவில் தோன்றிய செய்திகள் மேலே தரப்பட்டுள்ளன. மீதியை கடக்கும்போது பார்க்கலாம்..

அக் 3 2023

The role of leaders in any organisation is giving confidence and hope to its members. Fair.

But when spreading false Faiths, when they themselves not sure about the issues in their hearts, having faith in miracles, then they carry to deliver disappointments to their members.

Disappointment of the hope means a road to disillusion. Leaders may escape by blaming others for the failure of the nourished hope.

Though nothing is impossible, a converse is also there- everything is not wholly possible

**Com Namari**

அக் 2 2023

## அகமதாபாத் மில் தொழிலாளர்

காந்தியின் 1918 அகமதாபாத் மில் தொழிலாளர் போராட்டம் குறித்து அதன் நூற்றாண்டு தருணத்தில் விரிவாக எழுத முடிந்தது. எனது வலைப்பூவில் அதைக் காணமுடியும்.

அனசுயாபென் பெயரில் ( முதலாளி அம்பாலால் சாராபாய் அக்கா) தினம் காந்தி leaflet எழுதி தொழிலாளர் மத்தியில் கொடுக்க செய்தார். அவை வேலைநிறுத்தக் காலத்தின் moral dimension classic என காலங்கடந்து எனக்கு புலப்படுகிறது. நாங்கள் பங்கேற்ற தொழிற்சங்க வேலை நிறுத்தங்களில் , இதில் பலவற்றை அனுசரிக்கவில்லை. கற்றுக்கொள்ளவும் இல்லை.

27-2-1918 வெளியீட்டில்

The workers should be truthful and firm. A truthful man is never defeated. ( அறிந்தவற்றிற்கு உண்மையாக இருந்திருக்கிறோம். எங்காவது உண்மைக்கு மாறாக நடந்திருக்க வாய்ப்புண்டு- இல்லை என மார்தட்ட முடியாது)

Cultivate courage and must not scared of losing jobs( என் போன்றவர்க்கு ஒரு வகை முரட்டுத்தனமும் அசட்டு துணிச்சலும் இருந்தது. Job Risk எடுத்தோம். காந்தி சொல்லிய courage இருந்ததா , சரியாக உணரமுடியவில்லை)

They should not bear ill will for the employers nor harbour any grudge against them ( சில நேரங்களில் என்னிடம் இருந்ததில்லை)

Workers must realise that the struggle must involve suffering ( suffering இருந்தது ஆனால் அதுவே நெறி என்பதாக இல்லை)

The workers must remain peaceful and have faith in God ( சில நேரங்களில் அகிம்சை வழி இல்லாமல் போனது. கடவுள் நம்பிக்கையோ நிந்தனையோ பொதுவாக இல்லை. நம்பிக்கை கொண்ட சக தோழர்களிடம் பிரச்சனை செய்ததில்லை- ஓரிரு முறை அவர்கள் நம்பிக்கையை காயப்படுத்தியதுண்டு)

28-2-1918ல்

The workers should not waste time in gambling ( gambling செய்ததில்லை time waste நிறைய செய்திருக்கிறோம்)

The workers should not spend time in sleeping during day ( செய்ததில்லை)

The workers should not keep talking all the time of employers( இதை மிக அதிகமாக செய்திருக்கிறோம்)

They should not frequent tea stalls ( அது அதிகம்)

Use the enforced holiday to keep dwellings clean( செய்ததில்லை வீட்டு பக்கம் வேலை நிறுத்தக் காலத்தில் அரை மணிக்கு மேல் போனதில்லை..)

Those who are illiterate should increase their knowledge. Teach those illiterate( சில தொழிலாளர்களாவது படித்து BA MA வாங்க encourage செய்தோம்)

காந்தி leadersக்கு சொன்னவை

1-3-1918 அறிக்கையில்

We shall not help the workers in doing anything which is wrong( பல நேரங்களில் தவறை திருத்துவதைவிட , அவர்களுக்கு வக்காலத்து வாங்கி அவர் குடும்பத்தை காக்கவேண்டும் என போராடியிருக்கிறோம். )

We shall promote the workers interest while duly safeguarding the employers ( சில தோழர்கள் இதில் சரியாக இருந்தனர்..எனக்கு பற்ற காலம் பிடித்தது)

We are with the workers so long as they conduct themselves well ( கடைபிடிக்கவில்லை)

We shall not rest till the workers get what they are entitled to( இதில் உண்மையாகவும் உறுதியாகவும் எங்களில் பலர் இருந்தோம்)

We shall not ourselves eat or dress without providing food or clothing to such workers as are reduced to destitution ( உணவு விஷயத்தில் இதை பெரும்பாலும் கடைபிடித்தோம்)

Employers க்கு காந்தி

The employers ganging up against the workers is like raising an army of elephants against ants. If they had any regard for dharma, the employers would hesitate to oppose the workers ( மிகச் சிலரைத் தவிர பலர் மோசமாக நடந்த அனுபவமே கிடைத்தது. நாளடைவில் நாங்கள் வேலைப்பார்த்த பகுதியில் employers மனமாற்றமும் நடந்ததைக் கண்ணுற்றோம்)

அக் 1 2023

கிருபளானி..

எளிமை சிக்கனம் என்பன அரசியல்வாதிகளுக்கு இருக்க வேண்டிய அவசிய குணங்கள் என கிருபளானி பேசிவந்தார். கோடிக்கணக்கான மக்கள் ஏழ்மையில் இருக்கும்போது இக்குணங்களை கடைப்பிடிக்கவேண்டியது அவசியமானது. குடியரசு தலைவர், கவர்னர்கள் எளிய ஆடைகள் அணிவது அவசியமானது. வெளிப்பகட்டு அவசியமில்லை. கண்ணியம் என்பது வெளித்தெரிவதில் இருப்பதில்லை. உள்ளொளிப் பண்பாட்டின் வெளிப்பாடு ( Dignity is the result more of inner culture) - பக் 192 நவீன சிந்தனையின் இந்தியப் பன்முகங்கள்

**அக் 1 2023**

## பெரியார் குறித்து விஸ்வநாதன்

டாக்டர் E Sa visswanathan அவர்கள் எழுதிய The Political Carreer of E V Ramasami Naicker புத்தகத்தின் 40 ஆம் ஆண்டை நாம் கடந்து கொண்டிருக்கிறோம். இந்த 40 ஆண்டுகளில் இந்த புத்தகம் பெரியார் குறித்த பொது புத்திக்கு பெரிதாக ஏன் எடுத்துச் செல்லப்படவில்லை எனத் தெரியவில்லை. பெரியார் குறித்த ஆய்வுலகில், குறிப்பாக ஆங்கில மொழி ஆய்வில் இப்புத்தகம் பேசப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் தமிழில் பேசக்கூடியவர், எழுதக்கூடியவர் அதிகமாக இதை refer செய்யாமல் விடுவதைக் காணமுடிகிறது.

விஸ்வநாதன் தனது ஆஸ்திரேலியா பல்கலை டாக்டர் பட்டத்திற்காக மேற்கொண்ட ஆய்வுதான் ( 1968-72) 1983 ல் இந்த நூலாக்கமாக வெளிவந்தது. விஸ்வநாதன் சென்னையில் பிறந்து , சென்னை பல்கலையில் 1959 ல் எம் ஏ பட்டம் பெற்றவர். பின் மலேசியா, ஆஸ்திரேலியா, கானா, நைஜீரியா என பல்வேறு நாடுகளில் பேராசிரியப்பணியை செய்தவர் என்கிற விவரம் கிடைக்கிறது.

இந்த புத்தகம் பெரியாரின் -தமிழக அரசியலில் பெரியாரின் வருகை பங்களிப்பு என்கிற அவரது அரசியல் வாழ்க்கையை 1920-1949 கால எல்லைக்குள் நின்று செய்துள்ளது. இதில் பெரியார் என்கிற ஆளுமை மீதான வசைப்பாடல்கள் என்கிற bias இருக்காது. அதேபோல் அவருக்கு பீடம் எழுப்பி ஆரத்தி காட்டும் துதிகளும் இருக்காது. தனக்கு கிடைத்த, தான் கடுமையாக தேடித்தேடிப் பெற்ற ஆவணங்களின்வழியாக, பல்வேறு பிரமுகர்களின் உரையாடல் வழியாக பெரியாரின் அரசியல் வாழ்வை தொகுத்து கட்டமைக்கிறார் விஸ்வநாதன்.

இப்படி இயன்றவரை நேர்மையான பதிவு என்பதால் கூட, விஸ்வநாதனுக்கு ஆசிரியர் எனச் சொல்லப்பட்ட புகழ் வாய்ந்த ஏ எல் பாஷம் மிகச் சிறிய முன்னுரையை இதற்கு தந்துள்ளார். முன்னர் இணையத்தில் இந்த புத்தகத்தை புரட்டியபோது, எப்படி பாஷம் எழுதியதை miss செய்தேன் எனத் தெரியவில்லை. இப்போது மீண்டும் வாசிக்க ஆரம்பிக்கையில், பாஷம் தலையிட்டு இருப்பதை பார்த்தப் பின்னர், இந்த புத்தகம் மீது மரியாதை கூடியதை உணர்கிறேன். இதை

மேற்கின் பாசம் பக்தி எனக் கருதவேண்டாம். Methodology க்கு கொடுக்கும் மரியாதை எனக் கருதலாம்.

400 பக்க அளவிலான இந்த புத்தகம் இணையத்தில் கிடைக்கிறது. காலச்சுவடில் எழுதிவரும், நெல்லை சீனிவாசன் எனக்கு கொடுத்த புத்தகம். அவருக்கு நன்றி. பாஷம் 1982ல் , அமெரிக்க பேராசிரியராக இருந்தபோது இந்த புத்தகத்திற்கான இரு பக்க முன்னுரை எழுதியிருக்கிறார். பாஷம் எழுதியதிலிருந்து சில வரிகளை இந்த பதிவில் தந்துள்ளேன்

The late Ramasami Naicker was an exceptional figure in the history of India

Where most Indian reformers have tended to rationalise prevailing religious beliefs, but maintain its fundamental doctrines and creeds, Ramasami Naicker set himself against his ancestral faith root and branch, and to the very end of his long and busy life, he and his followers continued their propaganda against all aspects of Hinduism, and largely by implication other religions also.

It was vigorous and sometime scurrilous propaganda

Ramasami Naicker was not, perhaps, so far removed from the main stream of Indian thought as at first appears

Ramasami Naicker will be remembered chiefly, no doubt, for his anti religious and anti caste campaigning, but he played a very significant part in the politics of South India, down to the time of his death. His influence in this respect has perhaps been underestimated.

His politics rather moved to right after a brief flirtation with communism, while his socio religious attitude remained unchanged

His relations with Rajagopalachari are particularly interesting and significant, and it is evident from reading this book (Vishwanathan's) that the Tamil nationalist movement associated with the names of Annadurai and Karunanidhi owes much to him in its early stages

The author ( visswanathan) to my knowledge does not support Ramasami Naicker's philosophy by any means, any more than I do myself. He is a believing Hindu and hence it is the more to his credit that he has given the world so sympathetic an account of the life of a very earnest, good and sincere man, who with burning faith ( perhaps anti faith) unceasingly struggled against something which he considered harmful to his fellow men.

பாஷம் எவ்வளவு கச்சிதமாக தனது மொழியை பயன்படுத்தியுள்ளார் - காய்தல் உவத்தல் இல்லாமல், மிகைப்படுத்தாமல், தான் உணர்ந்த ஒரு மனிதரை, மனித நடமாட்ட நிலையில் வைத்து எடை போட்டுத் தரும் எழுத்தை தருகிறார்.

வரலாற்றாய்வாளர் என வரும் எவருக்கும் பாஷம் எழுத்து முறை நல்ல மாதிரியைத் தரும் .

முடிந்தவரை உள்ளது உள்ளபடி, வரலாற்றில் பெரும் உயரம் சென்றவர்களின் வாழ்க்கைச் சுவடுகள் நமக்கு கைமாற்றித் தரப்படவேண்டும். அப்படித் தரப்படும்போது, தேர்ந்த வாசகன் மேம்பட்ட புரிதலை நோக்கி நகர்வான். அவனும் தன் பங்களிப்பை கைமாற்றித் தந்து செல்வான்.

இந்த புத்தகத்தின் 40 ஆம் ஆண்டில் , ஆர்வமுள்ள பலரால் வாசிக்கப்படலாம் என கருதுகிறேன்…

தோழர் பட்டாபியின் நூல்கள்

1. மார்க்சியத் தடங்கள்

2. ரோசாலக்ஸம்பர்க்

3. போராளிகளின் குரல்

4. பகவத்கீதை பன்முகக் குரல்கள்

5. Trade Justice in Telecom

6. Selected Ideas of O.P Gupta

7. ஹெகல் துவங்கி..

8. கார்க்கியின் அரசியல்வெளி

9. நவீன சிந்தனையின் இந்தியப் பன்முகங்கள்

10. காந்தியைக் கண்டுணர்தல்

11. நேருவின் மரபு

12. பெரியாரின் பொதுவுடைமை புரிதல்

13. அம்பேத்கரும் கம்யூனிசமும்

14. தோழர் காந்தி மகாத்மாவின் சோசலிச உரையாடல்

15. பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் (என் எளிய வாசிப்பில்)

16. லெனின் நான்கு கட்டுரைகள்

17. என் வாசிப்பில்…

சிறு வெளியீடுகள்

1. ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா

2. சிகாகோ மேதின தியாகிகள்

3. பகுனின் போராட்ட வாழ்வும் அனார்க்கிசமும்

4. விடுதலைக்கு முன்னர் எம் என் ராய்

5. பிரடரிக் எங்கெல்ஸ் நட்பின் சிகரம்

6. நேதாஜி சுபாஷ் – கம்யூனிஸ்ட்கள் உறவும் உரசலும்

7. காந்தியும் கம்யூனிசமும்

8. வட்டமேஜை மாநாட்டில் அம்பேத்கர்

9. வரலாற்றில் செளரி செளரா (நூற்றாண்டின் நினைவாக)

10. தோழர் டிராட்ஸ்கி சில இடுகைகள்

11. ஆச்சார்யா கிருபளானி

12. மினு மசானி

www.pattabiwrites.in